Registered as a News Paper

# ஈழநாதம்

Eelanatham வெள்ளி நாதம்

விலை: 12.00

பக்கம் – 16

உங்கள் எண்ணம் போல்
கண்கவர் தங்க நகைகளுக்கு
உத்தரவாதம் தருபவர்கள்

முத்துமாரி நகைமாடம்

78, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வன்னியில் நாச்சிக்குடாச் சந்தியில் செயற்பட்டு
வந்த எமது நிறுவனம் தற்போது
யாழ்ப்பாணத்தில் செயற்படுகின்றது.

(சி-7411)

நாதம் -13 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | கார்த்திகை 20 | 06-12-2002 | வெள்ளிக்கிழமை | ஓசை 271

# மூன்றாம் சுற்றுப் பேச்சுக்கள்

# ஒஸ்லோ







ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 06.12.2002

## அமைதிப் புறாவை குறிவைக்கும் வல்லூறுகள்......

மாவீரர் நாள் உரையில் தமிழீழத் தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் முன் வைத்த கருத்துக்கள் தொடர்பாக சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ள அபிப்பிராயம் இது வரை சிறிலங்காவின் அரசியல் தலைவர்கள் எவரும் தெரிவித்திராத ஒன்றாகும்.

'பிரபாகரன் தனது உரையில் முன்வைத்துள்ள சுயநிர்ணய உரிமைக்கோட்பாட்டுக்குள் அமைந்த தீர்வு என்பது இணக்கத்திற்கு வரமுடியாத ஒன்றல்ல'- என ரணில் கூறியிருப்பது தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமை ஏற்றுக்கொள்ளக் கூடியதே என்ற அவரின் கருத்தியல் நிலைப்பாட்டை தெரிவிக்கிறது என்றே அரசியல் விமர்சகர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். இது சமாதான நகர்வுகள் மேலும் நம்பிக்கையுடன் முன்னெடுக்கப்படுவதற்கான சாத்தியத்தை உருவாக்கியுள்ளது.

இதேபோன்று ரணிலும், 'பிரபாகானின் இந்த நிலைப்பாடு தொடர்ந்து மேற்கொள்ளப்படவிருக்கும் பேச்சுவார்த்தைகள் மேலும் நல்ல பலனைத் தரும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதாகவும், இதற்குக் காரணம் இருதரப்பினரதும் நிலைப்பாடு இனியும் ஒன்றுடன் ஒன்று இணைய முடியாதவை அல்ல என்பதே ஆகும்' என்றும் கூறியுள்ளார்.

இதேபோன்று அமைச்சரும் பீரிஸும், 'பிரபாகரனுடைய உரை உதவிகரமானதும் ஊக்கப்படுத்துவதுமான ஒன்றாகும்' எனக் கூறியுள்ளார்.

சிறிலங்கா பிரதமரதும் அமைச்சரதும் பேச்சுக்கள் ஆத்மார்த்தமான சிந்தனையின் பாற்பட்டதாயின் ஒரு நீதியானதும், கௌரவமானதுமான அரசியல் தீர்வொன்றினை எட்டுவது என்பது, நெருக்கடிகளுக்கும் சிக்கல்களுக்கும் மத்தியில் சாத்தியமான ஒன்றாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆனால் பலதசாப்தங்களாக தென்னிலங்கை அரசியலில்- சிங்கள அரசியல் தலைவர்கள் தங்களின் சுய அதிகார அரசியல் அபிலாசைகளுக்காக வளர்த்து விட்டுள்ள பேரினவாதம் ஒரு இணக்கமான கௌரவமான தீர்வுக்கு வர அரசை அனுமதிக்குமா என்பது கேள்விக்குறிதான்.

அமைதிப்பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்தது முதல் இன்றுவரைக்கும் சனாதிபதியின் அணுகுமுறைகள் யாவும், சமாதானப் பேச்சுவார்த்தையை ஆதரிப்பது போன்று வெளியே காட்டிக் கொண்டாலும் கூட, உண்மையில் அதனைக் குழப்ப என்னென்ன வழிகளைக் கையாளமுடியுமோ அதையெல்லாம் கையாண்டு வருபவதையே வெளிக் காட்டுவதாக அமைந்துள்ளது.

அவரது ஆலோசகரும், சகோதரரும்,எதிர்கால சனாதிபதிப் பதவிக் கதிரைக்கனவில் இருப்பவருமான அநுரா சமாதான நடவடிக்கைகளை பகிரங்கமாகவே எதிர்த்தும், குழப்பமுன்னின்று கொண்டும் இருக்கிறார்.

'சமாதனத் தீர்வு இந்தியாவின் நலனைப்பாத்திக்கும் எனப்புலம்பிக் கொண்டு, இந்தியத்தலைவர்களைக் கொண்டு அமைதிமுயற்சிகளைச் சீர் குழைக்க டெல்லிக்குப் பறந்துள்ளார் பேரினவாதிகளும், சமாதான விரோதிகளும்'ரொரோன்ரோ'வில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான ஒரு சர்வதேச மாநாடு ஒன்றை- தமது கருத்துக்களுக்கு இசைவானவர்களை மட்டும் அழைத்து நடத்தியுள்ளனர். விடுதலைப்புலிகளுக்கும், சமாதான முன்னெடுப்புக் களுக்கும் சர்வதேச அளவில் பெருகிவரும் ஆதரவு இந்த அநாமதேயக் கும்பலால் தாங்கிக் கொள்ள முடியாததாக உள்ளது.

சமதர்மம் பேசி- புரட்சிகர சித்தாந்தங்களால் அரசியலுக்குள் நுழைந்த ஜே.வி.பி யினர் பச்சை இனவாதிகளாக மாறிப் பேச்சு வார்த்தைக்கு எதிரான மிகவும் மூர்க்கத்தனமான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். லண்டனில் இவர்களின் தலைமறைவுத் தலைவரைச் சந்தித்து தீர்வு முயற்சிகளுக்கு எதிரான பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். புத்தபிக்குகள் நோர்வே நாட்டின் தேசியக் கொடியை எதிர்த்து அதனூடாக தம்மதத்திற்கு புது விளக்கம் கூற முயன்று வருகின்றனர்.


சிகல உறுமய போன்ற இனவெறியமைப்புகள் சிங்களமக்களால் தூக்கியெறியப்பட்டுள்ள நிலையிலும் விடுதலைப் புலிகளுக்கும், அமைதி முன்னெடுப்புக்களுக்கும், குந்தகம் விளைவிப் பதற்கான வழிமுறைகள் பற்றியே பேசியும், எழுதியும், பேரணிகள் நடத்தியும் பிரசாரம் செய்தும் வருகின்றனர்.

இவர்கள் அனைவரும்- அனைத்து அமைப்புக்களும் அரசும், சர்வதேச சமூகமும் ஆர்வமும் ஈடுபாடும் கொண்டு மேற்கொண்டுவரும் சமாதான பேச்சுவார்த்தைகளின் எதிரிகள் என்பதை எச்சரிக்கையு ணர்வுடன் புரிந்து கொள்ள வேண்டியது அனைத்து சமாதானம் விரும்பிகளதும் பொறுப்பாகும்.

'வெண்ணை திரளும் போது தாழியை உடைக்கக்காத்திருக்கம்' இந்த அரசியல் 'பொரிமாத்தோண்டி' கள் இனவெறி- மதவெறி- ப்பிரியர்கள் மட்டுமல்ல..... இரத்தவெறிமிக்க போர் வெறியர்களும் தான் என்பதை தென்பகுதிமக்களும், அறிவு ஜீவிகளும் புரிந்துகொள்ள வேண்டும். தவறின் மகாவலி கங்கையை இரத்த கங்கையாக மாற்றும் கனவுடன் செயற்படும் இவர்களது திட்டத்தை நனவாக்க உதவிய பழிக்கு உள்ளாக நேரிடும், வரலாற்றுத் தவறொன்றிற்கு காரணமானவர்களாகி விட நேரிடும்

அமைதியும் சமாதானமும் வெறும் அறிக்கைகளாலும்; பிரசாரங்களாலும் குழப்பி அரசியல் அநுகூலங்களைப் பெற நாசகாரச் சிந்தனைகளுடன் செயற்பட்டு வரும் இந்தக் கும்பலின் எதிர்ப்பு நடவடிக்கைகளை 'ரணில்' எவ்வாறு உடைத்தெறியப் போகிறார் என்பதிலேயே சமாதானப் புறாவின் அமைதிச் சிறகடிப்பு சங்கீதத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது.

## தூரனின் பார்வையில்



# சமாதான முயற்சிகளுக்கான ஆதரவும் அரச பயங்கரவாதத்திற்கான அங்கீகாரமும்...

**அண்மையில்** ஒஸ்லோவில் நடந்து முடிந்த சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் 42 நாடுகளின் கூட்டத்தில், சமாதான பேச்சுவார்த்தைகளுக்கான ஏகோபித்த ஆதரவும், அங்கீகாரமும் கிடைத்துள்ளதுடன் வடக்கு - கிழக்கை மீளவும் கட்டி யெழுப்ப பெருந்தொகையான நிதி வழங்கப்படுவதற்கான உத்தரவாதமும் கிடைத்துள்ளது.

இதில் முக்கியமான அம்சம், இந்தக் கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளும் பங்கு பற்றியதுதான். இது விடுதலைப்புலிகளுக்கு மட்டுமல்லாது ஒட்டு மொத்த தமிழீழ மக்களுக்குமே கிடைத்த ஓர் உயர்ந்த பட்ச சர்வதேச அங்கீகாரம் என்பதில் இரு வேறு கருத்துக்கே இடமில்லை.

விடுதலைப்புலிகள் போர் நிறுத்தத்தை அறிவித்த பின்னர் ஏற்பட்ட அரசியல் ரீதியிலான மாற்றங்கள், அணுகுமுறைகள், மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், சமாதான பேச்சுக்களுக்கான முன்னெடுப்புக்களின் முன்னேற்றங்கள் தமிழீழ மக்களின் போராட்ட வரலாற்றில் எவருமே எதிர்பார்த்திராத திருப்பங்களை இந்த ஓராண்டு காலத்திற்குள் எட்ட வைத்துள்ளது.

இது விடுதலைப்புலிகளின் ராஜதந்திர அரசியல் ஆற்றலுக்கு கிடைத்த வெற்றி மட்டுமல்ல சர்வதேச அங்கீகாரமும் தான்

இந்தக் கூட்டத்தின் மூலம், விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள்என்று கடந்தகால சிறிலங்காவின் பேரினவாத அரசுகள் பலமில்லியன் ரூபாய்கள் செலவில் மேற்கொண்ட பிரசார நடவடிக்கைகளுக்கு கிடைத்த வெற்றிகளும், அதன் போது விடுதலைப் புலிகள் தொடர்பாக உருவாக்கப்பட்ட பொய்மையான கருத்துருவாக்கங்களும் சிதைந்து போய்விட்டன.

தமிழ்மக்களின் பிரச்சினைகளின் உண்மை வடிவம் உலகிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன், உலகம் அதனை நன்கு புரிந்து கொண்டுள்ளமையின் வெளிப்பாடும் பகிரங்கமாகியுள்ளது.

சிறிலங்காவில் இருப்பது பயங்கரவாதப் பிரச்சினைதான் என்ற கடந்த சிறிலங்கா அரசுகளின் சர்வதேச ரீதியான பிரகடணங்கள் செல்லுபடியற்றதாகி, இங்கு இருப்பது பேசித்தீர்க்க வேண்டிய, நிதானமாக அணுகவேண்டிய, அக்கறையுடன் முன்னெடுக்கப்பட்டு தீர்வுகாண வேண்டிய, தமிழ்மக்கள் பக்கம் நியாயமுள்ள அரசியல் பிரச்சினைதான் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது மிகவும் சுலபமாக எட்டப்பட்ட ஒன்றல்ல. இதன் பின்னால் ஒரு நீண்டகால போராட்ட வரலாற்றின் வலுவான - நியாயமான- காரணிகள் இருக்கின்றன.

அளப்பரிய தியாகமும் அர்ப்பணிப்பும் அத்திவாரமாக அமைந்துள்ளது. வீரமும், விவேகமும் தீர்க்க தரிசனமும் மிக்க தலைமைத்துவத்தின் உறுதிமிக்க வழிகாட்டலின் மூலோபாயத்திறன் உள்ளது.

இவற்றின் அடிப்படையில் தான் நாம் இன்று நிமிர்ந்து நிற்கிறோம். இந்த அரசியல் ரீதியிலான மாபெரும் வெற்றிகளின் அடித்தளம் மகத்தான எமது மாவீரர்களின் அர்ப்பணிப்புடன் ஈட்டிய இராணுவ வெற்றிகளில்தான் என்பதை நினைவிற் கொள்வது மிகவும் அவசியமானதாகும்.

இதே வேளை இன்னமும் சிலர் தமது வரட்டுக் கௌரவத்தை விட்டுக்கொடுக்க முடியாமல் (அவர்கள் பேசுவதெல்லாம் அர்த்தமற்ற வரட்டுக் பெருமைகளின் அடிப்படையில் தான் என்பது உலகிற்கு நன்றாகவே தெரியும்) தாங்களும் எல்லா இடத்திலும் நுழைந்து, தங்களின் ஆதிக்க இருப்பினை தெரியப்படுத்த வேண்டும் என்ற நோக்கில், தேவையற்ற கருத்தை தேவையற்ற சூழலில் சொல்வதன்மூலம் செயற்படுவது தான் கோமாளித் தனமாக உள்ளது....... அதே சமயம் வேதனையாகவும் உள்ளது.

அமெரிக்க உள்துறை பிரதி அமைச்சர் ரிச்சட் ஆர்மிரேஜ் அவர்கள் ஒஸ்லோவில் வைத்துக் கூறியகருதைத் தான் இங்கு குறிப்பிடுகிறேன்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும் இந்த வேளையில் பிரச்சினையின் ஆழத்தை முக்கியத்துவத்தை மட்டுமல்ல, அதன் உண்மையான நியாயத்தன்மையையும் புரிந்து கொண்டு சர்தேச சமூகம் அதற்கான பரந்த அளவிலான் ஆதரவினை வழங்கி வரும் வேளையில், சம்பந்த மில்லாத கருத்தை சம்பந்தமில்லாத சூழலில் கூறி அவரைப் பற்றிய அபிப்பிராயத்தை தமிழ் மக்களிடையே, தானே குறைத்துக் கொண்டுள்ளார் என்றே கூறவேண்டும்.

'பயங்கர வாதத்தையும் வன்முறைகளையும் கைவிடுவதாக விடுதலைப்புலிகள் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்' என் அவர் அங்கு கூறியமையானது போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு அமைதியான முறையில் பிரச்சினைகள் யாவும் கட்டம் கூட்டமாகிப் பேசி, நம்பிக்கையைும் புரிந்துணர்வையும் கட்டி எழுப்பிய வண்ணம்,சமாதானம் நோக்கிய, தீர்வுநோக்கிய நகர்வுகள் முன்னெடுக்கபடத் தொடங்கி ஓராண்டு ஆகிவிடப்போகும் நிலையில் ஆர்மிரேஜ் அவர்களின் இந்தக் கருத்து வரட்டுத்தனமானதும்; அதிக பிரசங்கித்தனமானதாகவே உள்ளமையை தமிழ் மக்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளனர்.

பார்வையாளராக அங்கு கலந்து கொள்ளச் சென்ற ஆர்மிரேஜ் அவர்கள் ஆக்கபூர்வமாக நம்பிக்கையூட்டக் கூடியதான, அந்தக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக எதையாவது கூறியிருப்பாரேயானால் அதனை வரவேற்றிருப்போம்.

அதை விடுத்து இப்படியான அச்சுறுத்தல் விடுக்கும் தொனியிலான கருத்தை அவர் பொருத்தமற்ற சூழலில் கூறியிருக்க வேண்டியதன் அவசியம் தான் என்ன?

ஆர்மிரேஜ் அவர்களின் இந்தக்கருத்துக்கு அரசியல் ஆலோசகர் பொருத்தமான விளக்கம் ஒன்றை உடனடியாகவே தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆர்மிரேஜ் அவர்களுக்கு - பதிலாக அண்மையில் சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகா

(15ம் பக்கம் பார்க்க)




செல்வம் நல்ல பணிப்பெண். ஆனால் மிக மோசமான எசமானி. -:பிரான்ஸின் பேக்கன்

# அடேல் ஆன்ரி: சாட்சியாய் போராளியாய்



"அன்று பாதிக்கப்பட்டவர்களைவிட நான் எதிலும் வேறுபட்டவளல்ல என்பதும் இப்படியான சந்தர்ப்பங்களில் நான் பிரித்தெடுத்துக்காப்பாற்றப்பட இடமே இல்லையென்பதையும் உணர்ந்தேன். நான் மட்டும் எப்படிக் காப்பாற்றப்படலாம்...?'' என்று எழுதுகிறார் திருமதி அடேல் பாலசிங்கம்.

1987 இல் சாவகச்சேரி நகரம் இந்தியர்களின் M.I 24 ஹெலிகொப்படர்களால் தாக்கப்பட்டதை அடுத்து மந்திகை ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்ட பிணங்கள், சிதறிய உறுப்புக்கள், பெருகிய குருதி, பீதி இவற்றின் மத்தியில் நின்றபடி அவர் சிந்தித்தவை இவை.

இது - அவர் ஆங்கிலத்தில் எழுதி பின் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட "சுதந்திரவேட்கை" -WILL TO FREEDOM என்ற நூலில் காணப்படுகின்றது.

லண்டனில், யாழ்ப்பாணத்தில், வன்னியில், வவுனியாவில் என்று பல்வேறு இடங்களில் அண்மையில் வெளியிடப்பட்ட இந் நூலின் முதல் ஆறு அத்தியாயங்களை நாடகக்காரரும், ஊடகக்காரருமான தாசீசியஸ் மொழி பெயர்த்துள்ளார். பின்பகுதியும் முகவுரையும் ஆன்ரியின் துணைவர் அன்ரன் பாலசிங்கத்தால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

ஈழப் போரில் - குறிப்பாக விடுதலைப்புலிகளின் சரித்திரத்தை பொறுத்தவரை ஒரு உள் ஆளால் எழுதப்பட்ட நூல் என்றவகையில் இது முதலாவது.

புலிகளின் சரித்திரத்தில் சுமார் இருபத்தி மூன்று வருட காலப்பகுதியில் நிகழ்ந்த இதுவரை தெரியவராத பல புதிய தகவல்களை இது தருகிறது.

இத்தகவல்கள் யாவும் நடுநிலை நின்று காய்தல் உவத்தல் இன்றிப் பதியப்பட்டுள்ளனவா இல்லையா என்று பார்ப்பது இன்று இப்பத்தியின் நோக்கமல்ல.

மேலும் - தமிழில் போர் இலக்கியப் பரப்பில் இது ஒரு புதுவகை என்பதால் இதன் இலக்கியத் தரம் பற்றி விவாதிப்பதும் இன்று இப்பத்தியின் நோக்கமல்ல.

பதிலாக - இன்று இப்பத்தியின் நோக்கம் என்னவென்றால் இரு வேறு பண்பாடுகளின் கலப்பாகத்தோன்றும் இந்நூலாசிரியர் எப்படி இவ்விரு பண்பாடுகளினதும் பிரதிநிதியாக நின்று இந்நூலை எழுதியுள்ளார் என்பதை வாசகருக்கு அடையாளம் காட்டுவதே.

ஒஸ்ரேலியாவில் வரகல் நகரில் பிறந்த அடேல் ஒரு தாதியாய் மருத்துவிச்சியாய் கற்றுத்தேர்ந்த பின் இரு சிநேகிதிகளுடன் லண்டனுக்குப் போகிறார். அங்கே உல்லாசமாக கழிந்த நாடோடி வாழ்வின் ஒரு கட்டத்தில் சிநேகிதிகள் ஊர் திரும்பி விட அடேல் சமுகவியல் துறையில் பட்டப்படிப்புக்காக லண்டன் சவுத்பாங் யுனிவசிற்றியில் இணைகிறார். அங்கே தனது கலாநிதிப்பட்டஆயிவினைச் செய்து கொண்டிருந்த அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திக்கிறார். காதலிக்கிறார். 1978 இல் திருமணம். இதிலிருந்து தான் எல்லாமும் மாறுகிறது. அவரே கூறுகிறார். "1978இல் இலங்கைத்தீவைச் சேர்ந்த அன்ரன் பாலசிங்கம் என்ற தமிழர் ஒருவரை திருமணம் செய்த போது தான் எல்லாமும் ஆரம்பமாகியது. அந்த இணைப்பின்போது ஒரு இனத்தின் கூட்டுப்பிரக்ஞையையும் அதன் வரலாற்றையும் மணந்து கொண்டேன். தனது இனத்தின் பலங்களையும் பலவீனங்களையும் பெருமைகளையும் குறைபாடுகளையும் தன்னுள் அடக்கிய அந்தத் தமிழனின் ஆன்மாவைப் புணர்ந்து கொண்டேன். உலகின் மிகப்பழமை வாய்ந்த கீழைத்தேய நாகரிகங்களில் ஒன்றினது சமுகத்திலும் கலாச்சாரத்திலும் வாழ்வதற்கு அந்த வரலாறு என்னை ஈர்த்தது...."

இப்படி வேரில் வெள்ளைக்காரியாகவும் வாழ்க்கை முறையில் ஒரு தமிழிச்சியாகவும் மாறிவிட்ட அடேல் ஆன்ரி தனது நூல் முழுவதிலும் சாட்சியாகவும் போராளியாகவும் மாறிமாறித் தோன்றுகிறார்.

தனது தனிப்பட்ட அபிப்பிராயங்ளைச் சொல்ல வரும் இடங்களிலெல்லாம் அவர் தனது வேர்களுக்குத் திரும்பிச் செல்கிறார். எந்த ஐரோப்பிய ஒஸ்ரேலியப் பண்பாட்டில் உருவாகி வளர்ந்தாரோ அந்தப்பண்பாட்டின் சனநாயகப் பண்புகளின் பிரதிநிதியாக ஒருவித சாட்சியாக நின்று விபரங்களைப் பதிகிறார்.

ஆனால் இன்னொரு புறம் விடுதலைப்புலிகளின் போராளியாக நின்று விளக்கம் தரும் இடங்களில் எல்லாம் அவர் கீழைத்தேய மரபுக் கேயுரித்தான நம்பிக்கை விசுவாசம் என்பவற்றின் பாற்பட்ட ஒரு பங்காளியாக மாறித் தனது நியாயங்களை முன்வைக்கிறார். இப்படிப் போராளியாகவும் சாட்சியாகவும் அதாவது உள் ஆளாகவும் வெளி ஆளாகவும் நின்று அவர் விபரங்களைக்கூறுவது தான் இந்நூலின் மிகவும் கவர்ச்சியானஅம்சம்.

இதுதான் இப்பொழுது



புலிகளுக்கெதிரான மகிந்தபால போன்ற விமர்சகர்களாலும் கடுமையாக விமர்ச்சிக்கப்படும் ஒன்றாகவுள்ளது.

முதலாவதாக -இந்நூல் அவருடைய சுயசரிதை, இரண்டாவதாக இது விடுதலைப்புலிகள் இயக்கத்தின் ஒரு காலகட்டச் சரிதையும் கூட.

பொதுவாக சரித்திரம் எழுதும் போது மூன்று விதமான அணுகுமுறைகளைக் காண முடியும்.

முதலாவது - பாரம்பரியமானது இதில் சரித்திராசிரியர் சம்பவங்களையும்

**நிலாந்தன்**

முக்கியமானவர்களின் பெயர்களையும் கால ஒழுங்கின் படிதொகுக்கிறார். சலிப்பூட்டும் சுவாரசியமற்ற விவரணமாக வரும் இத்தகைய சரித்திரத்தில் ஆசிரியர் சாட்சிபோல் இருப்பது என்பது ஒருவித அறிவியல் தர்மமாக வற்புறுத்தப்படும். எமது புலமைப் பாராம்பரியத்தில் இந்தப்போக்கே பொதுப் போக்கா யுள்ளது.

இரண்டாவது - சரித்திரத்தை ஒட்டுமொத்தமாக ஒரு முழுமையாகப் பார்ப்பது இதன் மூலம் சரித்திரத்தின் பொதுப்போக்கை கண்டுபிடித்து "சரித்திரத்தை இயக்கும் சக்திகளையும் விதிகளையும் கண்டுபிடிப்பது" பிறகந்த விதிகளின் பிரகாரம் சரித்திரத்தை வியாக்கியானம் செய்வது.

19ம் நூற்றாண்டில் கார்ல் மார்க்சிடம் இருந்து இந்தப் போக்கை துலக்கமாக அடையாளம் காணலாம்.

மூன்றாவது - சரித்திரத்தை ஒருவர் தனது தனிப்பட்ட நோக்கு நிலையிலிருந்து தன்னனுபவங்களுக் கூடாக சித்திரிப்பது. இது அனேகமாக சுயசரிதை வடிவில் அமைந்த பொதுச்சரிதையாகவரும்.

அடேல் ஆன்ரியின் நூல் இந்த மூன்றாவது வகையினது. அவர் தனது சொந்தக் கதையைக் கூறும் போது கூடவே சேர்த்து ஈழத்தமிழர்களின் கதையின் ஒரு பகுதியும் குறிப்பாக விடுதலைப் புலிகளின் கதையில் முக்கியமான ஒரு பகுதியும் கூறப்படுகிறது.

இதையெல்லாம் அவர் ஒரு சாட்சியாகவும் போராளியாகவும் நின்று கூறும் போது அந்த சாட்சிக்கும் போராளிக்கும் இடையில் எப்படியெப்படி சமநிலை பேணப்படுகிறது என்பதே இந்நூலின் கவர்ச்சியைப் பெரிதும் தீர்மானிக்கிறது.

உதாரணமாக- தான் ஏன் பிள்ளை பெற்றுக் கொள்ளவில்லை என்பதற்கு அவர் விளக்கம் கூறுமிடத்தில் அதிகம் ஒரு ஒஸ்ரேலியப் பெண்ணாகவே தோன்றுகிறார். ஆனால் அதை அவர் தனது தனிப்பட்ட தெரிவாகவே முன்வைக்கிறார். அதைப் பொதுமைப் படுத்த முயலவில்லை. இதுவும் ஒரு மேற்கத்தையப் பண்பே. அதேசமயம் பெண் விடுதலை என்று வரும்போது அவர் முதலாம் உலக நாடுகளில் காணப்படும் அல்ரா மொடேன் அம்சங்களை ஏற்றுக் கொள்ளவில்லை பதிலாக மூன்றாம் உலக நாடுகளுக்குரிய நடைமுறைச் சாத்தியமான ஒரு பெண்ணியத்தைப் பற்றியே கதைக்கிறார்.

> **அன்னி பெசன்ற், நிவேதிதா, மார்கன் போலவே இங்கேயும் ஈழப்போருக்கு ஒரு அடேல் ஆன்ரி கிடைத்திருக்கிறார்.**

இது போல இன்னுமொரு சுவையான இடமிருக்கிறது. அது IPKF காலத்தில் அவர் தலைமறைவாகி அடிக்கடி வீடு மாறி ஓடிக்கொண்டிருந்த நாட்களில் குளிப்பதில் மலங்கழிப்பதில் வந்த சிக்கல் பற்றியது. ஒரு வெள்ளைக்காரப் பெண் கீழைத்தேயக் கிராமம் ஒன்றில்- அதுவும் பாத்ரூம் மலசலகூடம் போன்ற வசதிகள் அற்ற உட்கிராமம் ஒன்றில் தலைமறைவாக நேரிடுவது என்பது சரித்திரத்தில் மிக அரிதாக நிகழுமொன்று. இதில் பாத்ரூமில் ஆடைகளின்றிக் குளித்துப் பழகிய ஆன்ரி திறந்த கிணற்றில் குளிக்க முடியாது தவிக்கிறார். முடிவில் இரவுகளிலேயே குளிக்கவேண்டிய தாயிற்று. இங்கெல்லாம் அவர் ஒரு வெள்ளைக்காரியாகவே நிற்கிறார். ஆனால் வீரம் விசுவாசம் இலட்சியம் என்று வருமிடங்களில் அவர் தனது வெள்ளைக்காரத்தனங்களை இயன்றளவு தியாகம் செய்து தமிழ்சமூகத்துள் கரைந்துவிடத் தயாரான ஒரு அசல் போராளியாகத் தோன்றுகிறார்.

இவ்விதம் சாட்சியாகவும் போராளியாகவும் மாறி மாறித் தோன்றுவது என்பது ஈழப்போரில் அவருக்கு மட்டுமே தரப்பட்ட ஒரு பாத்திரம் தான். அதாவது இருவேறு பண்பாடுகளின் கலவையாக நிற்பது என்பது.

இது உலகில் மிக அரிதாகவே நிகழ்கிறது.

இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் அன்னிபெசன்ற் நிவேதிதா போன்றோரை இங்கே குறிப்பிடலாம். இருவருமே வெள்ளைக்காரிகள் இந்திய ஆன்மிகத்தின் பா்ல் கவரப்பட்டு மனதால் இந்தியர்கள் ஆயினர். இது ஒரு கட்டத்தில் அவர்களை இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்கா ளிகளாக்கியது.

குறிப்பாக நிவேதிதா ஒரு ஐரிஷ் பெண். விவேகானந்தரின் சீடராகி நிவேதிதா என்ற தீட்சாநாமத்துடன் இந்தியாவுக்கு வந்தார். இங்கே இந்திய சுதந்திரப் போராட்டத்தில் அவரது ஐரிஷ் ரத்தம் கொதித்தெழ ராமகிருஷ்ண மடத்திலிருந்து ராஜினாமாச் செய்து விட்டு போராளியாய் மாறினார்.தமிழில் பெண்விடுதலை கோரிப் பாடிய பாரதியாரை பெண்ணியத்தை நோக்கித் திருப்பியது நிவேதிதாவே என்றும் கூறப்படுவதுண்டு.

இது போலவே அமெரிக்க வெள்ளையரான மார்கன் ராகுவே செவ்விந்தியர் மத்தியில் ஆராய்ச்சி வேலைகளுக்காகப் போனார். அங்கேயவர் காலப்போக்கில் செவ்விந்தியரில் ஒருவராகிவிட்டார். செவ்விந்தியர் அவரைத் தங்களில் ஒருவர் என்று தமது குலக்குழு மன்றத்தில் உத்தியோகபூர்வமாக அறிவிக்குமளவுக்கு மார்கன் அவர்களில் ஒருவராகிவிட்டார்.

இந்த மார்கன் எழுதிய பூர்வகுடிகள் பற்றிய ஆய்வு முடிவுகளைப் பின்பற்றியே ஏங்கல்ஸ் தனது உலகப் புகழ் பெற்ற "குடும்பம் அரசு தனிச் சொத்து என்பவற்றின் தோற்றம்" என்ற நூலை எழுதினார்.

அன்னிபெசன்ற், நிவேதிதா, மார்கன் போலவே இங்கேயும் ஈழப்போருக்கு ஒரு அடேல் ஆன்ரி கிடைத்திருக்கிறார்

ஆன்ரி கூறுகிறார்- ''தமிழ் மக்களுடனான எனது அநுபவம் எவ்வளவு ஆழமானது என்பதை ஒரு தமிழ்ச்சிநேகிதி வன்னி விஸ்வமடுவில் தனது தோட்டத்திற்குள் நின்ற செழுமையான மாமரத்தின் குளிர்மையான நிழலில் உரையாடிக் கொண்டிருந்த போது என்னை " வெள்ளைக்கார தமிழ் பெண்" என்று எடுத்த எடுப்பில் கூறியதிலிருந்து உணரலாம்......"

உண்மைதான் எங்கேயோ ஒஸ்ரேலியாவில் 'வரகல் நகரில் பிறந்து இங்கே ஈழப்போரில் பேச்சு வார்த்தைகளின் காரியதரிசியாக ஆகுமளவுக்கு அவர் ஒரு தமிழிச்சி ஆகிவிட்டார்.

ஒரு தாதியாக மருத்துவிச்சியாகத் தனது தொழிலைத் தொடங்கிய அவர் இப்பொழுது ஈழப்போரில் சமாதானத்தின் மருத்துவிச்சியுமானார் என்று கூறலாமா?



# கதிர்காமருக்கு தோன்றி வளர்ந்து வரும் தமிழீழ சிறுவர்கள் மீதான அக்கறை

**கடலூரான்**

**ஒட்டு** மொத்த தமிழீழ மக்களின் வாழ்வுக்கும் இருப்புக்குமான போராட்டமே தமிழீழ விடுதலைப் போராட்டமாகும் இன்னொருவகையில் பார்த்தால் தமிழீழத்தின் இளைய தலைமுறை நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழ்வதற்கான ஏற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கான ஒரு வேலைத்திட்டமாகவும் கொள்ளலாம். இந்த வகையில் தமிழீழ விடுதலைப்போராட்டமானது இளைய தலைமுறையை முதன்மைப்படுத்தி நிற்கும் ஒரு போராட்டமாகும்.

தமிழீழத்தில் தொண்டாற்றிவரும் பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்கள் எதிர் காலத்தை நோக்கி முன்னெடுத்து வரும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் பயன்பெறும் பயனாளிகளை முழுமையாக ஈடுபடுத்த வேண்டியதை வலியுறுத்தி வருகின்றமையானது திட்டத்தின் நோக்கத்தை முழுமையாக நிறைவேற்றிக் கொள்ளும் அடிப்படையில் அமைந்ததாகும். இந்தவகையிலேயே தமிழீழ விடுதலைப் போராட்டமும் உண்மையான பயனாளிகளை ஈடுபடுத்தி வந்தமையினாலேயே, வருகின்றமையினாலேயே இன்னும் இப்போராட்டம் அழியாது உயிர்வாழ்ந்து கொண்டிருப்பதற்கும், முனைப்புப் பெற்று வளர்ந்து வருவதற்கும் முக்கிய காரணமாகும். ஒரு தெரிவு செய்த அணியை உருவாக்கி அல்லது ஒரு வயதடிப் படையை வைத்து ஆட்சேர்ப்பைச் செய்து கொண்டு போரைத் தொடுப்பதற்கு தமிழ் மக்கள் ஒரு நாட்டின் மீதோ அல்லது ஒரு இனத்தின் மீதோ ஆக்கிரமிப்பு யுத்தம் ஒன்றை மேற் கொள்ளவில்லை மாறாக வயது வேறுபாடின்றி ஒட்டு மொத்த தமிழ் மக்கள் மீது, தமிழ் மக்களது தாயக பிரதேசத்தின் மீது அவர்களது வாழ்விடங்கள் மீது ஆக்கிரமித்து நின்று அழிவைத்தந்து கொண்டிருக்கும் சிங்கள அரசையும், அரச படைகளையும் வெளியேற்றி விடுவதாக மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரு போராட்டமாகும் இங்கு பாதிக்கப்பட்ட அனைவரும் வயது வேறுபாடின்றி ஒருங் கிணைந்து ஒரு ஒழுங்குபடுத்தலின் கீழ் பங்கு கொண்டிருப்பது தவிர்க்க முடியாததாகும்.

தமிழ் மக்கள் பலமிழந்து நின்ற வேளையில் எல்லாம் காலத்துக்குக் காலம் தமிழ் மக்களது பூர்வீக தாயகம் மீது யுத்தம் தொடக்கப்பட்டதாகவே வரலாறு இருக்கின்றது தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கூட இடை இடையே ஏற்பட்ட பேச்சு வார்த்தைகள் முறிவடைந்து யுத்தம் தொடர்ந்தமைக்கு தமிழ் மக்களது பலம் தொடர்பாக சிங்கள அரசு கொண்டிருந்த கணிப்பீடே காரணமாகும் இவ்வாறு தமிழ் மக்கள் தங்கள் வாழ்க்கையை யுத்தங்களோடு வாழ்ந்து வந்த, வாழ்ந்து கொண்டிருக்கின்ற வரலாற்றையே வாழ்க்கை நியதியாகக் கொண்டவர்கள். இந்த வகையில் தமிழ் மக்களது எதிர்கால வாழ்க்கை முறையானது ஒரு படைக்கட்டு மாணத்துடன் கூடிய பலத்துடன் வாழ்ந்து வர வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

தமிழீழ மக்களின் வாழ்க்கை முறையானது சட்டப்படியாக திருமணம் செய்து இறுதிக் காலம்வரை சேர்ந்து வாழ்வதையே வழக்கமாகக்கொண்டது இங்கு தங்களுடைய பிள்ளைகளை வளர்ப்பதற்காகவும், எதிர்கால வாழ்வுக்கு ஒழுங்குபடுத்துவதற் காகவும் தங்கள் சுகங்களையே அர்ப்பணித்து வாழ்கின்ற வாழ்க்கை முறையை பார்க்கின்றோம் சில குடும்பங்களில் குடும்பப் பிணக்குகள் ஏற்பட்டாலும் பிரிந்து செல்லாமல் பிள்ளைகளுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கின்ற குடும்பங்களைப் பார்க்கின்றோம் எனவே தமிழீழத்தை பொறுத்த மட்டில் பிள்ளைகளைக் கவனிக்கின்ற, பிள்ளைகளைப் பாதுகாக்கின்ற அமைப்பாக பெற்றோரே உள்ளனர். ஆனால் இயல்பு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கும் மேலத்தேச நாடுகளில் ஆணும், பெண்ணும் பல திருமணங்கள் செய்து வாழ்வதே தங்களுடை கலாச்சாரமாகவும், சுதந்திரமாகவும் கொள்வதால் அவர்களுடைய பிள்ளைகள் பலவித பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது பெற்றோரை இழக்க வேண்டிய நிலை, வழிகாட்ட தலைமை இல்லாத நிலை, பிள்ளைகள் அனாதரவாக விடப் படுகின்ற நிலை, இவற்றைவிட ஒரு தாய் தன் பிள்ளைகளுடன் வேறு ஒரு ஆணைத் திருமணம் செய்யும்போது அந்த ஆண் அப்பிள்ளைகளை மாற்றாந்தாய் மனப்பாண்மையுடன் நடாத்த முனைவது போன்ற நிலைமைகள் மேற்குலக நாடுகளில் அதிகரித்துக் காணப்படுவதால் தங்கள் பிரச்சினைகளை மையப்படுத்தி உருவாக்கப்பட்ட சட்டங்களை மேற்குலக நாடுகள் தங்கள் மண்ணில் முழுமையாக அமுல்படுத்தி வருகின்றன. அந்த நாடுகளை பொறுத்த மட்டில் குறிப்பிட்ட வயதடிப்படைக்குள் வாழ்ந்து வரும் சிறுவர்களினுடைய உரிமையும் சுதந்திரமும் மீறப்படுவதே அந்த நாடுகளில் இருக்கும் பெரும் பிரச்சினையாகும். ஆனால் தமிழீழ மக்களை பொறுத்த மட்டில் ஒட்டு மொத்தமாகவயது வேறுபாடின்றி உரிமையும் சுதந்திரமும் மறுக்கப்பட்ட நிலையில் தங்களது வாழ்வின் இருப்புக்காக போராடிக் கொண்டிருக்கின்ற ஒன்று திரண்டசக்திக்குள் சிறுவர்களினுடைய உரிமைகளை பிரித்துக் காட்டி தனிமைப்படுத்திவிட முனையும் சூத்திரதாரிகளின் உள்நோக்கத்தை தமிழ் மக்கள் ஆழமாக புரிந்து கொள்ள வேண்டும்.

பல ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் சிறுவர்கள் இனக்கலவரத்தாலும், விமானப்படையின் தாக்குதலாலும், சிங்களப்படையின் செல் தாக்குதலாலும் காயமடைந்தபோதும், சாவடைந்த போதும் கண்துடைப்புக் காதல் அனுதாப அறிக்கை ஒன்றைக்கூட விடாத கதிர்காமர் பலமுறை கால்வலிக்க விமானமேறி மேற்குலக நாடுகளிடம் சென்று விடுதலைப்புலிகள் சிறுவர்களை போரில் ஈடுபடுத்துகின்றார்கள் என்றும் இது சிறுவர்களினுடைய உரிமைகளை மீறும் செயல் என்றும் பிரச்சாரம் செய்து அந்த நாடுகளையும் இழந்து வந்து கண்டன அறிக்கைகளையும் விடுவித்து தனது பிரச்சார போரினூடாகவும் தேச விடுதலைப் போராட்டத்தின் பலத்தை சிதைவடையச் செய்யப் பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டு வந்தார்.


விடுதலைப்புலிகள் அமைப்பு சிறுவர்களை போரில் ஈடுபடுத்துகின்றது என்று கண்டன அறிக்கை விட்டுக்கொண்டிருக்கும் அதேநாட்டு இராணுவ நிபுணர்கள் யாழ்ப்பாணம் வந்து எங்கள் மக்களுடைய வாழ்விடங்களுக்குள் எங்கள் மக்களை வயது வேறுபாடின்றி குறிபார்த்துக் கொண்டிருக்கும் பதுங்குகுழித் துப்பாக்கிகளையும், காவலரண் துப்பாக்கிகளையும் சரி பார்த்து விட்டுப் போகின்றார்கள் என்றால் இந்த இடத்தில் தமிழ் மக்கள் ஆழமாக் புரிந்து கொள்ள வேண்டிய விடயம் என்ன?

சிங்கள அரசைப் பொறுத்த மட்டில் இது ஒரு நாட்டின் மீது, ஒரு தேசிய இனத்தின்மீது தொடுத்திருக்கும் ஆக்கிரமிப்புப் போர். தமிழ் மக்களை பொறுத் தமட்டில் இது தமிழ் மக்களது வாழ்வுக்கும், இருப்புக்குமான போர். இதைத்தான் சர்வதேசம் புரிந்து கொள்ள வேண்டும் இந்த அடிப்படையில் தான் சர்வதேசம் நியாயப்பாட்டை அணுகவேண்டும்.

இந்த அடிப்படையில் தான் நடுநிலைமை உருவாகவேண்டும். ❍❍

---

# சொல்லியே தீர வேண்டும்



# ஆலயங்களிலும் தரப்படுத்தலா?

**ஆஞ்சநேயன்**

**மாலை** வேளைப் பூசைக்கு ஆயத்தமாக அந்தக் கோவிலின் காண்டாமணி பலத்த ஓசையோடு பலதடவை அசைந்துவிட்டு ஓய்ந்து கொண்டது.

அன்று வெள்ளிக் கிழமையாதலால் வழக்கத்தை விட அதிகமாகவே கோவிலின் உட்பிரவாகத்தில் சனங்கள் நிறைந்திருந்தார்கள். சிலரது கைகளில் அர்ச்சனைத்தட்டுக்கள் இருந்தன. வேறு சிலரது கைகளில் பூக்கள் நிறைந்த 'சொப்பிங்பை'களும், ஊதுபத்தி மற்றும் கற்பூரம் போன்றவையும் இருந்தன. வேறுசிலர் எதுவுமில்லாது வெறுமனே கரம் கூப்பியபடி திரைச் சீலை சார்த்தப்பட்ட மூலஸ்தானத்தை நோக்கி கும்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

கோவில் மண்டபத்தின் நடுவே ஆண்களுக்கான வரிசையில், நிலத்தில் சப்பணம் கட்டியபடி அமர்ந்திருந்தான் அந்தச் சிறுவன். அவனுக்கு ஆகக் கூடியது பத்து அல்லது பதின்மூன்று வயதிருக்கும். மெலிந்த உடல்வாகுடன் கன்னம் இரண்டும் உட்குழிவிழுந்த நிலையில் காணப்பட்டான். வீபூதியை உத்தூழனமாக நெற்றி முழுக்கப் பரவிப் பூசியிருந்தான். நடுவிலே பூரண நிலவு வடிவத்தில் ஒரு சந்தணப் பொட்டு. மிகுதியைக் கழுத்திலும், நெஞ்சிலும் தடவியிருந்தான். சில நாட்களாக நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில், தேகம் ஓரளவு சுகம் அடைந்ததும் கோவிலுக்கு வந்திருந்தான். கூடவே அர்ச்சனை செய்வதற்காக சில்லறைக் காசு சிலவற்றைக் கையினுள் பக்குவமாகப் பொத்தியபடி அமர்ந்திருந்தான்.

பூசை ஆரம்பம் என்பதற்கு அறிகுறியாக அந்தணர் தனது கைமணியை மூலஸ்தான மண்டபத்தில் இருந்தபடி கிலுக்கிவிட்டு, தென்மேற்குப் பக்கமாக உள்ள விநாயகர் இருப்பிடத்தை நோக்கி நகர்ந்தார். அவர் நகர்வதைக் கண்டதும், கோவிலின் நடுமண்டபத்தில் இருந்த சனங்களும் எழும்பி விநாயகரின் இருப்பிடத்தை நோக்கி நகர்ந்தார்கள்.

இறுதியாக, சண்டேசுரருக்கும் பூசையாகி மூன்று முறை அந்தணர் கையைத் தட்ட, சனங்களும் தங்கள் கையைத் தட்டிக் கொண்டதுடன், பூசை முடிவுற்றது. விபூதி, தீர்த்தம், சந்தணம், வில்வம், முதலியனவும் கொடுத்து முடிந்ததும் அர்ச்சனைப் பூசைகள் ஆரம்பமாகியது.

"அர்ச்சனை செய்கிற ஆட்கள் எல்லோரும் வாங்கோ...."

அந்தணர் கூறிவிட்டு, மூலஸ்தானத்து வாசலை நோக்கி நகர, சனங்களோ விழுந்தடித்த நிலையில், அவரைப் பின் தொடர்ந்து சென்றார்கள். ஆண்கள் ஒருபுறமாகவும், பெண்கள் ஒருபுறமாகவும் ஒழுங்கு நிலையில் நிற்க, அந்தணர் அர்ச்சனை ரசீதை வாங்கி, அதில் ஒரு சிறு துண்டைக் கிழித்து அர்ச்சனைக் காரரிடம் கொடுத்துவிட்டு, அவர்களுக்கான பெயரையும், பிறந்த நேர நட்சத்திரத்தையும் சமஸ்கிருத மொழியில் உச்சரிக்கத் தொடங்கினார்.

சுமார் பத்து நிமிடங்கள் இவ்வாறு கழிந்தபின், அந்தணர் மூலஸ்தானத்துக்குச் சென்றார். அங்குள்ள விக்கிரகம் முன்பு பஞ்சாலாத்தியில் கற்பூர தீபாராதனை செய்து விட்டு, அதை வெளியே கொண்டு வந்த போது, எல்லோரும் பஞ்சாலாத்தியைத் தொட்டுக் கும்பிட்டார்கள்.

இறுதியாக அர்ச்சனை செய்தவர்களுக்கு 'நற்பிரசாதம்' வழங்கும்படலம் தொடங்கியது. அந்தணரால் கிழித்துக் கொடுக்கப்பட்ட அர்ச்சனைக் கடதாசித் துண்டின் நிறத்துக்கேற்றபடி அங்கு பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

மஞ்சல் நிறத் துண்டுக்கு - தேங்காய்ப் பாதியுடன்,வெற்றிலை பாக்கு, வீபூதி, சந்தணம், குங்குமம் மற்றும் பூக்களுடனும்......

பச்சை நிறத் துண்டுக்கு - தனியே வெற்றிலையில் ஒரு வாழைப்பழம், பாக்கு, வீபூதி, சந்தணம், குங்குமம் மற்றும் பூக்களுடனும்......

வெள்ளை நிறத்துண்டுக்கு - தனியே வீபூதிச் சரைகளோடு பூக்களையும் அந்தணர் வழங்கிக் கொண்டிருந்தார்.

பெண்களின் நிரை முடிந்து, இப்போது ஆண்களின் நிரைக்கு வந்த அந்தணர், அர்ச்சனை ரசீதின் நிறத்துக்கேற்றபடி, நற்பிரசாதத்தை வழங்கியபடி அந்தச் சிறுவனிடம் வந்தார். சிறுவனிடத்தில் ரசீதை வாங்கிய அந்தணர், வெறும் வீபூதிச் சரையோடு சில பூக்களையும் வைத்துக் கொடுத்தார்.

சிறுவனுக்கு ஏமாற்றமாக இருந்தது. "ஏன் ஐயா, தேங்காய்ப் பாதி தர மாட்டியளா?" கோவில்களில் உள்ள தற்போதைய நடைமுறைகளை அறியாத அந்தச் சிறுவன், அப்பாவித் தனமாய்க் கேட்டான். அந்தணருக்கு அச்சிறுவனின் அறியாமை நிலைமை விளங்கியது. அவர் அவனைப் பரிதாபமாகப் பார்த்தார்.

"அது தம்பி மஞ்சல் டிக்கெற்றுக்குத் தான் தேங்காய்ப்பாதி குடுப்பினம். அது இருபது ரூபாய்க்கு மேலான டிக்கெற்."

"அப்படியெண்டால் வாழைப்பழம், வெத்திலை பாக்கோடையெண்டாலும் ஒண்டுதாங்கோவன் ஐயா?'' அச்சிறுவன் ஆண்டவன் சந்திதானத்தில் நின்று இரந்தான். ஆனால் அந்த அந்தணரால் எதுவும் செய்ய முடியாத நிலை. கோவில் பரிபாலன சபையின் சட்டதிட்ட விதிகளை மீறி ஒரு பரதேசிக்கு இரங்கினால் தனது வேலை பறிபோகும் என்பதை உணர்ந்த அவர் செயற்கையாக தனது முகத்தில் ஒரு கடுகடுப்பை வரவழைத்தார்.

"தம்பி! அது பச்சைத் துண்டுக்குத் தான் வாழைப்பழம், வெத்திலை பாக்கு கொடுக்கிறது. அது பத்து ரூபா டிக்கெற்.

"அப்ப இதுக்கு வெறும் வீபூதி சந்தணம் மட்டும் தானா.....?" சிறுவன் மீண்டும் வினாவினான்.

"ஓம்..தம்பி, இது வெள்ளை நிறத் துண்டு, ஐஞ்சு ரூபா டிக்கற்."

"ஓ.....! " அச்சிறுவனின் முகத்தில் வியப்புத் தொனித்தது.

"ஐயா! அர்ச்சனை டிக்கற்றுக்களை சனங்களிட்ட வாங்கும் போது எல்லோருக்கும் ஒரே மாதிரித்தானே மந்திரம் ஓதி பஞ்சாலாத்தியும் காட்டினீங்கள். அதை எல்லோரும் தானே தொட்டுக் கும்பிட்டவை. அப்படியிருக்க, ஏன் இந்தப் பச்சையும், மஞ்சலும்என்ற பாகுபாடு?" சிறுவனின் கேள்வியால் அந்தணரின் நிலைபெரிதும் தர்ம சங்கடமாகியது.

''ஐயா! மனம் கல்லாப் போன சில மனிதர்களின் பாகுபாடான, ஏற்றத் தாழ்வான செயல்களினால் தான் கடவுள் மூலஸ்தானத்துக்கை வெறும்கல்லாகவே சமைஞ்சு போயிருக்கிறான். 'திருப்பணி'என்கிற பெயரால்அர்ச்சனைச் சீட்டுக்கள் மூலம் கடவுள் ஒவ்வொருக்கும் ஒவ்வொரு விலையில் விற்கப் படுகின்றான். அதுமட்டுமல்ல அர்ச்சனை டிக்கற்றுகளில் உள்ள நிறங்களே ,கோவிலுக்குள்ளை மனிசரை பிரிச்சுக் காட்டுது. மஞ்சள் நிறம் - பணக்காரனையும், பச்சை நிறம் - மத்தியவர்க்கத்தையும், வெள்ளை நிறம் ஏழைகளையும் கூறு போட்டுக் காட்டுவதை இண்டைக்கு கும்பிட வந்த இடத்திலை தான் கண்டிருக்கிறன்." அவன் சூறிவிட்டு வெறும்வீபூதிச் சரையுடன் வெளியேறினான் மனம் வெதும்பிய நிலையில். ❑

---

சீரியதாய் இராதது எதுவும், உண்மையில், சிறப்புடையதாய் இருக்க இயலாது. -ஸேம்யல் ஜான்ஸன்

# பிரமுக அறிமுகம்



## அமைச்சர் ராஜித சேனாரத்ன

(காணி அமைச்சர்)

தன்னிடம் வரும் நோயாளர்களின் வாயைப் பெரிதாக திறக்கவேண்டும் என வலியுறுத்தும் இந்தப் பல் வைத்தியர் அரசியல்வாதி என்ற அவரது மற்றொரு தொழிலில் வாயைத் திறந்தாரே என்றால் பின்னர் எதிரணியினரின் காதுகளுக்கு சிகிச்சை பெற அவர்கள் வேறு மருத்துவரிடம் தான் ஓடவேண்டும்.

நோயாளியின் பற்களை பிடுங்குவதில் மட்டுமல்ல எதிரணியின் பற்களை உடைப்பதில் வல்லவர். முன்னதிற்கு குறடும் பின்னதிற்கு தன்வார்த்தைகளையும் பயன்படுத்துபவர்.

இதனால் இவருக்கு Big mouth man (பெரிய வாய் மனிதன் - வாய்ப்பேச்சில் வல்லவர்) என்ற பட்டப்பெயரும் உண்டு.

பேராதனை பல்கலைக்கழகத்தில் படித்து பற்சிகிச்சை நிபுணராக வெளிவந்த இவர் மாணவ காலத்திலேயே பெரிய்ய... பேச்சாளர்தான்.

மாணவ அமைப்புகளில் ஈடுபாடு கொண்டிருந்த இவர் SLFP மாணவ அமைப்பின் தலைவராக பல்கலைக்கழகப் பிரவேசத்துடன் அரசியல் பிரவேசமும் செய்தார்.

தொழிற்சங்க விவகாரங்களில் அதிக ஈடுபாடு கொண்ட இவர் பல்வேறு கட்சிகளின் தொழிற்சங்கங்களில் முக்கிய பங்குகளை வகித்துள்ளார். முன்னர் சிறிமாவோ ஆட்சிக்காலத்தில், அவருடைய மூத்த மகளான சுனீத்திராவின் முன்னாள் கணவரான. குமார் ரூபசிங்க ஆரம்பித்த இடதுசாரி அமைப்பான 'ஜனவேகய' வின் ஸ்தாபக உறுப்பினர்களுள் இவரும் ஒருவர் (அதன் அப்போதய தலைவர்களிலும் ஒருவர் தான்)

ஜனவேகய ஒரு காலத்தில் பரபரப்பாக பேசப்பட்ட அமைப்பாகும். அதன் கருத்தொலிபெருக்கிகளுள் இவர் மிகவும் முக்கியமானவர்.

1971 இல் அப்போதைய ஐக்கிய இடதுசாரி முன்னணியின் பீரங்கிப்பேச்சாளராக மிளிர்ந்த இவர் அன்றைய மேடைகளில் கவர்ச்சிகரமான காரசாரப்பேச்சாளராக தன்னை இனம் காட்டிக்கொண்டார்.

ஆரம்பத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் ஈடுபாடு கொண்டிருந்த இவர் 1976 இல் அதை விட்டு விலகி விஜயகுமாரணதுங்கவின் சிறிலங்கா மக்கள் கட்சியில் இணைந்து அக்கட்சியின் இளைஞர் அமைப்பின் தலைவருமானார்.

1986 இல் சிறிலங்கா மக்கள் கட்சியின் பொரளைத்தொகுதி அமைப்பாளரானார். விஜயகுமாரணதுங்கவுடனான இவரது நெருக்கமும் செல்வாக்கும் சந்திரிகாவுடனான தொடர்புக்கு வழிகாட்டியது. விஜய கொல்லப்பட்ட பின்னர் சந்திரிகா ஆரம்பித்த பகுஜன் நிதாங் பெரமுன கட்சியில் இணைந்து அதன் பொதுச்செயலாளருமானார்.

1988 இல் நடைபெற்ற தென் மாகாண சபைத்தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கார் குண்டுத்தாக்குதல் ஒன்றில் சிக்கி காயமடைந்தார்.

அதனைத்தொடர்ந்து வந்த பொதுத்தேர்தல் சனாபதித்தேர்தல் ஆகியவற்றை அடுத்து மீண்டும் கட்சிதாவிய இவர் புதிய புகலிடமாக UNP அமைந்தது. முதலில் அதன் ஆதரவாளராகவே இருந்தார். அதன் பிரதான பேச்சாளரானார். ஆயினும் 1994 இல் தான் அவர் ஐ.தே.கட்சியில் (UNP) முழுமையாக இணைந்தார்.

1990 இல் ஐ.தே.கட்சி ஆட்சியின் போது இவர் சி.ஐ.டியினராலும் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்.

ஆனால் பின்னர் 1994 இலும் இவர் மீண்டும் சி.ஐ.டி யினரால் கைது செய்யப்பட்டார். இது பொ.ஐ.முன்னணி ஆட்சியில் நடந்ததாகும்.

எல்லாமே இவரது வாயாடல் திறமைக்கு கிடைத்த பரிசுகளாகும்.

இப்போது ஐ.தே.கட்சியின் 'பெரிய வாய் பிரசாரகர்' இவர்.

சந்திரிகா தான் இவரது பிரதான தாக்குதல் இலக்கு எனினும் அண்மையில் சந்திரிகாவுடன் பிரச்சினைகளை சமரசமாகப் பேசித் தீர்த்துக்கொள்ள வெள்ளைக்கொடி காட்டியிருக்கிறார்.

சந்திரிகா பக்கமிருந்து என்ன சமிக்ஞை கிடைக்குமோ தெரியாது.

என்னவானாலும் எல்லாக்கட்சிகளிலும் இருந்து எல்லாத் தலைவர்களதும் வண்டவாளங்களை அறிந்துள்ளவர் என்ற வகையில் எப்போதுமே இவருக்கு எதிரயிணில் இருப்போர்க்கு சிம்மசொப்பனமாக - அல்லது எரிச்சலூட்டும் ஒருவராகவே இவர் இருந்து வருகிறார்.

# நறுக்செல...



## கதிர்காமரின் கண்ணோட்டம்

**நோர்வே** அரசாங்கம் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக பேச்சுக்களில் பாரபட்சமாக நடந்துகொள்வதாகவும் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவின் வெளிவிவகார ஆலோசகரான லக்ஸ்மன் கதிர்காமர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

சரி, நோர்வே அரசு விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக நடக்கிறது என்று கதிர்காமர் சொல்வது உண்மையென்றால் அந்தக்கருத்தின் மறுதலையான நோர்வே அரசு சிறிலங்கா அரசுக்கு எதிராக செயற்படுகிறது என்ற கருத்தும் சரியாக இருக்க வேண்டும். அப்படியாயின் பேச்சுவார்த்தையில் பங்குகொள்ளும் அரச தரப்பினர் தான் இக் கருத்தை சொல்லியிருக்க வேண்டும். ஆனால் பேச்சுவார்த்தைகள் நம்பிக்கை தருவனவாகவும், திருப்தி தரக்கூடிய வகையில் தொடர்வதாகவும் தான் அரச தரப்பு தெரிவித்து வருகிறது.

'இந்த நிலையில் கதிர்காமர் நோர்வே பக்கச் சார்பாக நடப்பதாக' குற்றஞ்சாட்ட வேண்டிய அவசியம் தான் என்ன?

தாய்லாந்தில் நடைபெற்ற இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் நம்பிக்கை தருவதாக இருப்பதாகவும் திருப்தி தெரிவித்திருந்தவர் இந்தக்கதிர்காமர் என்பதையும் நினைவிற்கொள்ளவேண்டியது அவசியமாகும்.

நாளுக்கு ஒரு கதை வேளைக்கு ஒரு கருத்துக் கூறுவது என்பது முன்னாள் வெளியுறவு அமைச்சரின் இந்நாள் முக்கிய பணியாகவே மாறிவிட்டது.

எல்லாம் எஜமான விசுவாசத்தின் எதிரொலிதான் என்பதை சொல்லாமலேபுரிந்து கொள்ளமுடியும்.

கதிர்காமரின் கருத்துக்கு நோர்வே பதில் எதுவும் கூறாது - அதை அர்த்தமுள்ள கருத்தாகக் கொள்ளாது புறக்கணித்துவிட்டது. கதிர்காமரைப்பற்றியும் அவரின் சமீபகால புசத்தல்கள் பற்றியும்அது நன்கு மதிப்பீடு செய்து வைத்துள்ளமையே காட்டுகிறது.

ஆனால் சர்வதேச கண்காணிப்பாளராக தன்னைக் கருதிக்கொண்டிருக்கும் அமெரிக்காவின் தூதுவரான ஆஸ்லி வில்ஸ் கதிர்காமரின் கூற்றுக்கு கண்டனம் தெரிவித்து 'நோர்வே' யின் நேர்மை அத்தாட்சிப்பத்திரம் வழங்கியுள்ளமை கதிர்காமரின் முன்னாள் அமெரிக்க 'காவடிஎடுப்பு' களின் பலனான சிறிலங்கா விவகாரம் குறித்த அவரின் கருத்து விதைப்புகள் சிதைந்து வருவதையே காட்டுகிறது....

'நுணலும் தன் வாயால் கெடும்' என்ற பழமொழி நினைவுக்கு வரவே செய்கிறது. ☆



## சந்திரிகாவும் அரச பயங்கரவாதமும்...

*சில* நேரங்களில் சில மனிதர்கள் தம்மை மறந்த நிலையில் எதையாவது கூறித்தொலைக்கிறார்களோ என்ற எண்ணம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி வருகின்றது. இந்த நேரங்களில் இவர்கள் சுய உணர்வுடன் தான் பேசுகிறார்களா என அதிர்ச்சியூட்டும் சந்தேகமும் ஏற்படவே செய்கின்றது. அண்மையில் சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகா குருநாகலில் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கிப் பேசும் போது கூறிய கருத்து இந்த ரகத்தையே சேர்ந்ததாகும்.

'அரச பயங்கரவாதம் தான் தமிழர்களை ஆயுதம் ஏந்த வைத்தது' என்று சந்திரிகா தன் திருவாய் மலர்ந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை அங்கு பேசும் போது வழங்கியதன் மூலம் இந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளார். இதற்காக அவருக்கு நன்றி .

'இந்த நாட்டில் இனப்பிரச்சினை என ஒன்றும் கிடையாது பயங்கரவாதப்பிரச்சினை மட்டும் தான் உள்ளது எனச் சில வருடங்களின் முன்னால் பேட்டியளித்த அவர் இப்போது அந்த பயங்கரவாதப் பிரச்சினை என அவரால் வர்ணிக்கப்பட்ட பிரச்சினைக்கு அரச பயங்கரவாதம் தான் காரணம் என விளக்கியுள்ளமை பேரினவாதிகளை வேறு ஒரு விதமான அதிர்ச்சிக்கும் உள்ளாக்கியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

சரி, அரச பயங்கரவாதம் எனச் சந்திரிகா வர்ணிப்பது எந்த அரசால் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத்தை. அவரின் அப்பா காலத்து பயங்கரவாதத்தையா, அம்மா காலத்து பயங்கரவாதத்தையா, தன் காலத்தைய பயங்கரவாதத்தையா? அல்லது ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலப் பயங்கரவாதத்தையா?

எதுவானாலும் சிங்கள பௌத்த பேரினவாத அரசுகளின் பயங்கரவாதத்தைத்தான் என்பது தெளிவாகத் தெரிகிறது. இதன்மூலம் தன்னையும் ஒரு அரச பயங்கரவாதி என அவர் ஒப்புக்கொண்டுள்ளார் என்பதில் ஐயமில்லை.

தன்னை - தனது உண்மைத் தன்மையை இவ்வாறு கூறியதன் மூலம் சந்திரிகா என்ன தான் சொல்லவருகிறார்? இதை நினைக்கத்தான் இன்னுமதிக பயம் உண்டாகின்றது. ☆



## ஓ.... இந்தியா!

**கோமாளித்தனமான** அறிக்கைகளை விடுவதில் இந்திய அரசியல் வாதிகளுக்கு நிகராக எவரும் கிடையாது என்பது தெரிந்த விடயமே...

உதாரணத்திற்கு சுப்பிரமணிய சுவாமி போன்றோரை வரிசையாகக் கூறமுடியும். அண்மையில் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையொன்று எல்லாவற்றையும் விட வேடிக்கையாக இருக்கிறது.

நெடுந்தீவில் ஈ.பி.டி.பியினருக்கு பாதுகாப்பு வழங்கவேண்டும் என்று அரசாங்கத்தைக் கோரியுள்ளதாம் இந்தியத்தூதரகம்.

இந்தக் கோரிக்கை கோமாளித்தனமானதோ... வேடிக்கையானதோ.... எதுவானாலும் இது சில விடயங்களை சொல்லாமல் சொல்லியுள்ளது.

ஒரு காலத்தில் தமிழ் நாட்டில் பல்வேறு குற்றச் செயல்களுக்காக கைது செய்யப்பட்டவரும் -தேடப்பட்டுவந்தவருமான ஈ.பி.டி.பியின் தலைவருக்கும் அவரது கட்சிக்கும் இந்திய அரசு வழங்கியுள்ள அங்கீகாரம் பளிச்சென துலங்குகின்றது.

வரதராஜப்பெருமாளின் செல்வாக்கின் பூஜ்ஜியத்தன்மையை இந்தியா கடந்த தேர்தல்களின் மூலம் புரிந்து கொண்டதால் -அவருக்கு மாற்றீடாக டக்ளஸைப்பயன்படுத்த இந்திய உளவுத்துறைகள் முயல்வதையும் இது ஒரு வகையில் தெளிவாக்கி நிற்கின்றது. சிறிலங்காவில் எவ்வளவோ இராணுவ ஒடுக்குமுறைகள் - அழிப்பு நடவடிக்கைகள் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டபோது எல்லாம் அவர்களைப் பாதுகாக்குமாறு எவ்வகையிலும் அறிக்கை விடாத இந்தியப்பத்திரிகைகள், ஈ.பி.டி.பியை பாதுகாக்குமாறு அறிக்கை விடத் துடித்துப்பதைத்தது, இந்தியாவின் அபிலாஷைகளை ஈ.பி.டி.பி காப்பாற்றும் என்ற நம்பிக்கையினால் தான் என எவரும் நினைத்தால் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை...

ஏதாவது ஒன்றின் பின் ஆதரவுப் பலமின்றி சுயமாக இயங்கும் வலுவோ மக்கள் ஆதரவோ ஈ.பி.டி.பிக்கு என்றுமே இருந்ததில்லை.

மற்றது உலக சமூகம் இப்போது விடுதலைப்புலிகளோடு நேரில் பேசுவதற்கு ஆர்வம் கொண்டு செயற்படும் போது இந்தியாவும் யாரோடாவது உறவு வைத்துக்கொள்ள ஆசைப்படுவதில் தவறில்லைத்தான்....

அதற்காக தமிழ் மக்கள் இந்தியா மீது வைத்துள்ள கடைசிப்பட்ச நம்பிக்கையையும் இழக்கும் படி இப்படி ஒரு அறிக்கையை விடலாமா? ☆

**13-02-2002 காலை 7.30 மணி வவுனியா பிறவுண் கொம்பனி வாச லில் வன்னிக்குச் செல்வதற் கான அனுமதி பெறுவதற்கான காத் திருப்பு. கால்கள் உளை கின் றன...**

# தாயகப் பயண அனுபவப் பகிர்வு



# தாய்மடி வாசம் 2

**வரிசையின்** நீட்சியும் இடித்துக்கொண்டு முந்துவோர் முந்த முடியாதோர் முணுமுணுக்க அப்பப்போ காலிலும் கையிலும் நுளம்பு தன் இருப்பையும் உறுதிப்படுத்திக் கொண்டிருந்தது.


இத்தனைக்குள்ளும் விடியமுன்னம் சாராயத்தில் முகம் கழுவி வந்த சிலரது வாயிலிருந்து வீசிய நாற்றம் அந்த சுற்றாடல் ஏதோ அருவருப்பை உண்டாக்கிக்கொண்டிருந்தது. *''பிள்ளைக்கு வருத்தம் எண்டு வந்த நான் நேற்றையோடை பாஸ் முடிஞ்சுது. ஒருக்கால் முன்னுக்கு விடுகிறியளே!''* அந்தப்பெண் தனது ஐந்து வயது மகனையும் தோளிற் சுமந்தபடி கெஞ்சுகிறாள். *''நாங்களும் நேற்றும் வந்து ஏலாமல் திரும்பிப் போய் இண்டைக்கு வந்திருக்கிறம் எங்களைப்போல லைனில வாங்கோ.''* முன்னின்ற சிலரது இரக்கமற்ற வார்த்தைகள் அவளைப்பின் தள்ளிவிட... மனிதமுள்ள மனிதன் ஒருவன் *''இஞ்சை வந்து நில் பிள்ளை... நான் உன்ரை இடத்தில நிற்கிறன்''* சொல்லிக்கொண்டு தனது இடத்தை அந்தப்பெண்ணுக்கு விட்டுக்கொடுத்துவிட்டு விலகி அவளது இடத்திற்கு வந்தார் அந்த மனிதர். *''மனிசருக்கு கொஞ்சமெண்டாலும் ஈரம் வேணும். இவ்வளவு வந்தும் இன்னும் திருந்தேல்ல.''* அந்தப்பெண்ணுக்கு இடம் கொடுக்க மறுத்தவர்களுக்கு கேட்கும்படி அந்த மனிதர் ஏசிக்கொண்டு நின்றார். *'தொடர்ந்த அடிகளால் வலிக்கப்பட்டவர்கள். அவர்களது அவசரம் அவர்களுக்கு தான் விளங்கும்.'* நினைத்துக்கொண்டு எனது வரிசையில் நிற்கிறேன்.

*'' இப்ப பரவாயில்லை. முந்தியெண்டா கிழமைக்கணக்கில மினக்கெடவேணும். என்னவோ மினக்கெடுத்தியெண்டாலும் ரண்டுநாள் மூண்டுநாளிலையெண்டாலும் தாறாங்களே....''* எனக்குச் சற்றே பின்னின்ற தாய் கூறினாள். என் பின் வந்துகொண்டிருந்த அந்த வயோதிபத்தந்தை கேட்டார். *''எங்க பிள்ளை வன்னிக்கு போறீங்களே?'' முல்லைத்தீவுக்கு, சொந்த இடம் யாழ்ப்பாணம்'' யாழ்ப்பாணத்திலயெங்க''...* என் ஊரின் பெயரை நான் சொல்ல என் ஊருக்கு பக்கத்து ஊர் பற்றிக் கேட்டார் அந்த ஐயா. *''நானங்க நெடுக வாறனான். என்ரை நண்பனொருதன் அங்கயிருக் கிறான். அவங்கட வீடெல்லாம் இப்ப காடு பத்தியிருக்கும். உப்பிடி எத்தினை ஊருகள் வீடுகள் வாசலுகள்..''* ஏக்கமாய் வெளிவந்த அவரது வார்த்தைகள் அவை. ஆம் எத்தனை ஊர்கள், ஊர் மட்டுமா எத்தனையுயிர்கள், உறவுகள், நட்புகள் எல்லாவற்றையும் தானே சிங்கள ஆதிக்கம் பறித்து வைத்துள்ளது. அந்தப் பெரியவரின் நண்பரின் ஊரால் தான் நாங்கள் வீ.எம்.எம்.வீயிற்குப் போவது. அவரது நண்பரின் வீடும், அந்த வளவை அலங்கரித்திருக்கும் பூக்கன்றுகளும், ஒரேசீராக வெட்டப்பட்டிருக்கும் குறோட்டன்களும் என் கண்களில் கலங்கிய ஒளிப்படமாய் ஓடிக் கொண்டிருந்தன. அந்த வீதிகளில் எத்தனை தரம் என் சயிக்கிளும் நானும் வந்திருப்பன். எனது கிராமமும் இன்று பற்றைக்காடாய் தானே இருக்கிறதாம். என் ஊர் நினைவில் அதன் இனிப்பில் சில துளிகளை என் உளம் நினைக்கிறது.

பெஞ்சன் வ்டலி நொங்கும், பெரிய இலுப்பையும், சின்னம்மான் வளவுச்சீனிப்புளியும், பொலிசுராசர் வீட்டு அருநெல்லியும், சமாதி கோவிலடி நாவற்பழமும், வயிரவர் கோவிலடி ஆலம்பழமும், ரத்தினம் வளவுப் பனங்காயும் நாவில் இனிக்க அவை மீண்டும் கிடைக்காதா என மனசு ஏங்கியது.

நாங்கள் வணங்கும் எங்கள் நம்பிக்கைக்குரிய கற்கரைப்பிள்ளை யாரும், சிவகாமியம்மனும் பூசைகள் வாழிபாடுகள் இன்றியிருந்த நிலைமாறி பிள்ளையாருக்கு மட்டும் பூசை நடக்கிறதாம். எங்கள் ஊரே பார்த்துச் செய்த வடிவான தேர் சிங்களம் எரித்து சாம்பலாக்கியதை ஊர் போய் வந்த என் ஊர்க்காரி சொன்ன வார்த்தைகள் செவிக ளுக்குள் ஒலிக்கிறது.

சமாதி கோவிலடி மண்வாசம் என் நினைவு களில் தொடுகிறது. அந்தப் பொன்னிய பூமியின் செம்பாட் டுப் புழுதியில் நான் போயிறங்கும் பொழுதென்று....????



**என் பிரியத்துக்கினிய ஊர் வளவே...!**
**பன்னிரண்டாண்டு பறந்து போச்சு**
**அது பதினாறு வயதோடு பறிமுதல் ஆனதல்லோ**
**எப்படியிருக்கிறாய் என் ஊரே....?**
**ஊருருராய் நாங்கள் ஓடியதும்**
**நீ அனாதையாய்**
**யூ.கே கிழவனோடு தனித்திருந்தாயே**
**பின் யூ.கே கிழவனும் எலும்புக் கூடானதும்**
**இன்னும் நினைவுகளில் ஈரம் உலராமல்...**
**இதய அணுக்களில் பச்சையாய் இருக்கின்றன..**

**என் வீட்டு மாதுளையும், தேசியும்,**
**ஆசையாய் நான் வளர்த்த பெரிய றோஜாவும்,**
**அருகே மணிவாழையும், அதற்கடுத்து நித்தியகல்யாணி**
**அனைத்திற்கும் நடுவில்**
**கொலுவிருந்த துளசிச் செடியும்**
**அங்கால் பின்வளவு வேம்பும், முருங்கையும்**
**ஆடு கட்டும் அட்டாலையும்,**
**எனது பசுக்கன்று ஓடிவந்தமரும் பிலா நிழலும்**

**சுதந்திரா**

**இன்னும் இருக்கிறதா....???**
**ஏங்கும் மனதோடும்**
**எதிர்பார்ப்போடும் கேட்கிறேன்...**
**எல்லாம் இருக்கிறதா...????**
**ஊர் போச்சு, உறவு போச்சு, உடமை போச்சு**
**படுத்துறங்கிய திண்ணை போச்சு...**
**பாசத்துக்கினிய என் தேசமே....!**
**சிங்கள வானரங்கள் இட்ட தீயில்**
**செத்துப்போன - என்**
**ஊரின் வாசம் இன்னமும்**
**என் நாசிகளில் ஈரமாயல்ல**
**அதற்கும் மேலாய்....**
**கலந்தேயிருக்கிறது.**

*''வரிசை அப்பிடியே நிற்குது உவங்களென்ன செய்யிறாங்கள்...?''* என்னுடன் வன்னி வரவிருந்த சுதான்ரி கேட்டா.... *''அவையள் சாப்பிடப் போட்டினம்''* முன்னின்ற ஒரு இளைஞன் சொன்னான். *''சரி இனி அவை ஆடியசைஞ்சு சாப்பிட்டிட்டு வர மத்தியானமாகீடும். பிறகென்ன.... வன்னி போன மாதிரித்தானிண்டைக்கு..''* சுதான்ரிக்கு மட்டுமல்ல எனக்கும் தான் சலித்தது. இரண்டு மணித்தியாலம் நின்ற எனக்கே இவ்வளவு சலிப்பானால் தினம் இதுவே வாழ்வாய்ப் போன இந்த மக்களுக்கு எவ்வளவு வெறுத்திருக்கும். இடையிடை வந்து குற்றும் நுளம்பு சலிப்பை நிமிர்த்திப்போனது. வரிசையில் நின்றவர்கள் பலர்தங்கள் இடங்களைப் பார்க்கும் படி சொல்லிவிட்டு சற்றே தள்ளியிருந்த வாங்கில் போயிருந்து கொண்டார்கள். நான் அப்படியே நின்று கொள்கிறேன். எப்பிடியும் இண்டைக்கு வன்னிக்கு போக வேணும். அண்ணி நீங்க கொஞ்ச நேரம் அதிலை போயிருங்கோ நான் நிக்கிறன். என்ற மச்சானுக்கு *''இல்லை நான் நிக்கிறன்.'' 'இதுவே தினம் வாழ்வாகவும், காத்திருப்பாகவும் இருக்கும் இந்தக் காத்திருப்புடன் போராடும் இந்த மனிதர்களின் துயரில் தான் பங்கெடுக்கவில்லை. இப்போ தாவது கொஞ்சம் நிப்பமே'* நினைத்துக் கொள்கிறேன்.

சிறுமியொருத்தி - அவளுக்கு வயது 7-8 வயதிருக்கும் கையில் வைத்திருந்த பணிசில் இலையான் இடம் பிடித்திருந்தது, அதையே அவள் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். சாராயத்தால் முகம் கழுவியிருந்த சிலரது சாராயநெடிலை தாங்க முடியாத சிலரின் முணுமுணுப்பு இது... இதுகளிடை தொல்லை பெருந் தொல்லையாய் போச்சு''அந்த முணுமுணுப்பு சாராயம் குடித்திருந்த ஒருவரின்காதுக்கு எட்டி விட.,. நாங்களும் உங்களை மாதிரித் தான் காவல் நிக்கிறம் எனச் சட்டம் பேசினான் ஒருவன். அந்த அமளிக்குள் ஒருவருக் கொருவர் இடறுப்பட்டு இடிபட்டுக் கொண்டிருந்தனர்.

நத்தை வேகத்தில் நகர்ந்த வரிசையில் அது எனது முறை. எனது பாஸ் போட், நேற்று முன்னிரவு ஈரப்பெரிய குளத்தில் ஆமி தந்த பாஸ் கொப்பி எல்லாம் கொடுக்க அங்கிருந்த பெண் பொலிஸ் விசாரணை செய்தாள். சிங்களத்தில் அவள் விசாரிக்க மச்சான் தமிழாக்கம் செய்து எனக்குச் சொல்லிக் கொண்டிருந்தான். *''வன்னிக்கு எங்கை?'' 'முல்லைத்தீவு' முல்லைத் தீவிலை? ''முள்ளியவளை'' ''முள்ளிய வளையில் யாரிருக்கினம்?''* உறவினர் *''சரி அங்தால போய் நில்லுங்க கூப்பிடேக்கை வாங்கோ.''* பாதிக் கண்டம் தாண்டிய மகிழ்வு.

நேரம் 10.40• என் பெயர் சொல்லி அழைத்தாள் அந்தப்பெண் பொலீஸ். வன்னிக்கான அனுமதியைத் தந்து சொன்னாள். நாளைக்கிடையிலை போவேணும். இல்லது திரும்பி பாஸ் எடுக்க வேணும். சொல்லிவிட்டு எனது பாஸைக் கையில் தந்தாள். கண்டம் தாண்டியாச்சு, இனிக்கடந்தால் வன்னிமண். கால்கள் வேகம் பூட்டக் கனம் கழன்றது. வன்னிக்குப் போகும் நினைவில் வலியெல்லாம் பஞ்சாய்ப் பறந்தது.

(தொடரும்)

# 'மானுடத்தின் தமிழ்க்கூடல்' ஈழத்தமிழர்கள்முன் வைத்துள்ள பணிகள் -4

**நான்காம்நாள்** அமர்வில் காண்பியக் கலைகள் பற்றிய மதிப்பீடுகளை முன்வைத்த பா.அகிலனது கருத்துக்கள் ஊன்றிக் கவனிக்கப்பட வேண்டியவை.ஓவிய,சிற்ப,கட்டடக் கலைகள் பற்றிய தனது பார்வையை முன்வைத்த அகிலன்,குறிப்பாக எமது போர்க்கால ஓவியங்கள்,சிற்பங்களிலுள்ள போதாமைகள் பற்றிய தனது கருத்துக்களை வலியுறுத்தியிருந்தார்.இது விரிவாக ஆராயப்படவேண்டிய ஒரு விடயமாக இருக்கிறது.எமது போராட்ட அனுபவங்களின் வெளிச்சத்தில்,எமது கலை, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றை மீள்கண்டுபிடிப்புச் செய்யவேண்டிய நிலையிலிருக்கும் நாம்,இதற்காக எம்மை மறுவாசிப்புக்கு உட்படுத்துவது மிக அவசியமாக இருக்கிறது.

தற்போது சமாதானம் என்கின்ற பெயரில் யாழ் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற நடவடிக்கைகளை,குறிப்பாக கட்டடவாக்கச் செயற்பாடுகளை அகிலன் கடுமையான விமர்சனங்களுக்கு உட்படுத்தியிருந்தார். சமாதானம்,தென்பகுதி,மற்றும் சர்வதேச வர்த்தகர்களுக்கு ஒரு புதிய, மிகவும் இலாபகரமான சந்தையைத் திறந்துவிட்டிருக்கிறது.ஏ-9 பாதையின் திறப்பும்,கட்டுப்பாடற்ற பயண அனுமதியும் இதனைச் சாத்தியப்படுத்தியிருக்கிறது.ஏ-9 பாதையூடாக வவுனியாவிலிருந்து,யாழ்ப்பாணம் வரை பயணிக்கும் ஒருவர் இதனைத் தெளிவாக அடையாளங்காணமுடியும்.

ஏ-9 பாதையூடான பயணத்தின் ஒரு இடைத்தங்குமிடமாக காணப்படும் முறுகண்டிப் பகுதியிலேயே இந்த வர்த்தக ஆதிக்கத்தை எம்மால் அடையாளங்காணமுடியும். அங்கிருந்து,அதன்பின்னர் யாழ். பஸ் நிலையம் வரையில் இந்தப் புதிய வர்த்தகச் செயற்பாடுகளின் ஆதிக்கத்தை ஒருவரால் தெளிவாக இனங்காண முடியும். தற்போது யாழ்ப்பாணத்தின் எந்தப் பகுதியிலும் ஆதிக்கம் செலுத்தும் ஒரு வியாபாரம் குளிர்பான வியாபாரமாகும்.'பெப்சி','கொக்கோ கோலா', 'ஸ்ப்ரைற்', 'மிரின்டா','நெக்டோ', 'போர்ட்டலோ' என சர்வதேச,மற்றும் கொழும்புக் குளிர்பானங்களின் ஆதிக்கமே இப்போது எங்கும் காணப்படுகிறது. முன்னர் யாழ்ப்பாணத்தில் புகழ்பெற்ற இயற்கைப்பானங்கள் எதனையும் இப்போது மருந்துக்கும் பெறமுடியாதிருக்கிறது.

இந்தக் குளிர்பான உதாரணம் ஒரு குறுக்குவெட்டுப் பார்வை மட்டுமே.இதுபோல இப்போது யாழ்ப்பாணத்தை முற்றுகையிட்டுள்ள வர்த்தகச் செயற்பாடுகள் ஏராளம். இவ்வாறு வர்த்தக நோக்குடன் யாழ்வரும் பெரும்பாலானவர்கள்,யாழ்ப்பாணத்தில் தமது வர்த்தக நடவடிக்கைகளுக்கு வாய்ப்பாக பல்வேறு கட்டடவாக்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.எந்தவிதமான நகரத் திட்டமிடலுமின்றி,அவரவர் நோக்கில், வியாபார இலாப அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இந்தக் கட்டடவாக்கங்கள், ஈற்றில் யாழ்நகரை ஒரு அசிங்கமான கட்டடக்காடாகவே மாற்றிவிடக்கூடிய அபாயம் உள்ளது. எந்தவொரு நிர்வாக அமைப்பும் திடமாக இல்லாத யாழ்நகரில் இத்தகைய செயற்பாடுகள் இப்போது எவ்வித கட்டுபாடுகளுமின்றி மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இவைபற்றிக் கடுமையாகக் கண்டித்துப் பேசிய அகிலன்,யாழ் நகரின் சொல்லமுடியாச் சோகத்தைச் சுமந்துநிற்றும் செம்மணிப் பகுதியில், அங்கு இடம்பெற்ற படுகொலைகளை நினைவுகூரும் ஒரு நினைவுச் சின்னம் தானும் இல்லாதது குறித்து வேதனையுடன் பிரஸ்தாபித்தார்.இத்தகைய ஒரு நினைவுச் சின்னத்துக்குப் பதிலாக, அங்கே,தற்போது சமாதானகாலத்தை வாய்ப்பாகப் பயன்படுத்தி ஊடுருவியுள்ள சக்தி எப்.எம்.வானொலியினரின் பாரிய விளம்பரப்பலகையே நிறுவப்பட்டுள்ளது என்பதை ஆதங்கத்துடன் குறிப்பிட்டார்.ஆம்,தமிழர்கள் இரத்தத்தாலும்,உயிர்களாலும் பாதுகாத்த அவர்களது தாயகப் பிரதேசம் எவ்வளவு இலகுவாக வியாபாரிகளின் சந்தையாக மாற்றப்பட்டுவருகிறது என்பதற்கு இது ஒரு மிகச்சிறந்த உதாரணமாக உள்ளது.

அடுத்து அகிலன் குறிப்பிட்டது இவ்வளவுகாலமும் நிறுவப்பட்டுள்ள போர்க்கால நினைவுச் சின்னங்கள் பற்றியாகும்.ஓவியங்களாகவும்,நினைவுத் தூபிகளாகவும்,நினைவுச் சின்னங்களைநினைவு கூருவோரைக் கௌரவப்படுத்துகிறது என்பதில் தனக்குச் சந்தேகங்கள் இருப்பதாக அவர் அங்கு குறிப்பிட்டார்.தெருவோரத்தில் ஒரு சூலத்தை நாட்டிவிட்டு வழிபடுவதைப் போல,இத்தகைய செயற்பாடுகள் அவை குறித்துநிற்கின்றவற்றை கௌரவப்படுத்துவதாக அகிலன் குறிப்பிட்டார். (தெருவோரத்தில் சூலத்தை நாட்டி வழிபடுவது எதனை அகௌரவப்படுத்துகிறது?. யாருக்கு இது கௌரவமாகத் தெரிகிறது.அது நாட்டப்பட்டுள்ள சமூகத்தின் வசதிகள், பொருளாதார நிலை என்பவற்றைப் பொறுத்து அவை அவர்களது உயர் நம்பிக்கையின் சின்னங்களல்லவா?. எல்லோருக்கும் பெருங்கோயில்களும், மாடமாளிகைகளும் வாய்க்குமா? என்பதுபற்றியும் அகிலன் யோசிக்கவேண்டும். இத்தகைய கருத்துக்களுக்குள் ஒரு மேல்நிலை வர்க்க ஆதிக்கம் தெரிவதை அகிலன் இனங்காணவேண்டும்).

இந்தச் சின்னங்களின் பின்னாலிருக்கும் நம்பிக்கைகளையும், அதை ஆக்கியவர்களது ஆத்ம திருப்தியையும் ஏற்றுக்கொள்ளும் அகிலன்,இவற்றின் செய்நேர்த்தி பற்றிக் கேள்வி எழுப்புகிறார்.அகிலனின் இந்தக் கருத்துக்கள் ஒரு விமர்சன நோக்கு என்ற வகையில் வரவேற்கத்தக்கது என்றாலும், போர்க் காலத்தில்,கலைப் படைப்புகளில் ஈடுபட்டவர்களது கருத்துக்கள் இவற்றை மறுதலித்து நின்றதையும் அவதானிக்கமுடிந்தது.

குறிப்பாக,காண்பியக் கலைகள் அமர்வில் குறிப்புரையாற்றிய ஓவியர் கோபாலி,அகிலனது கருத்தை மறுதலித்துப் பேசினார்.போர்க்காலக் கலைப்படைப்புக்கள்,அதில் ஈடுபட்டவர்களாலும்,அதனோடு இணைந்து நின்றவர்களாலும்,தமக்குக் கிடைத்த வளங்கள்,தமது கலை ஆளுமை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்பட்டவை.போர் நெருக்கடிகளுக்குள் தம்மை வெளிப்படுத்தத் தயங்கி பல கலைஞர்கள் ஒதுங்கியிருந்த காலத்தில், இந்த நெருக்கடிகள், வளப்பற்றாக்குறைகள் போன்றவற்றுக்கும் முகம்கொடுத்தபடி அப்போதிருந்த தேவைகளை நிறைவுசெய்யும் வகையில் உருவாக்கப்பட்ட இத்தகைய படைப்புக்களை இவ்வாறு விமர்சனம் செய்வது பொருத்தமற்றது என்பது அவரது விவாதமாக இருந்தது.

கூடலின் அமர்வு ஒன்றில் முன்கூட்டிய திட்டமிடலெதுவுமின்றி, வெறுமனே தனது போர்க்கால நாடகச் செயற்பாட்டு அனுபவங்களை மையமாக வைத்து கருத்துரையாற்றிய புதுவை அன்பன் அவர்களது உரை, போர்க்காலக் கலைப்படைப்புக்கள் பற்றிய பல அனுபவ ரீதியான கருத்துக்களை வெளிப்படுத்தி நின்றது. அரங்குபற்றிய ஒரு அமர்வு,தனித்து வேறாக இரண்டாம் நாள் நிகழ்வில் இடம் பெற்றபோதும்,அங்கு ஆற்றப்பட்ட உரைகள் வன்னிப் போர்க்கள அனுபவங்களுக்கு வெளியேயும், தனிநபர் அனுபவ வெளிப்பாடுகளாகவும் மட்டுப்பட்டு நிற்க,புதுவை அன்பனது உரை,அவரது போர்க்காலப் படைப்பனுபவங்களூடாக,இன்றைய எமது கலை,இலக்கியப் படைப்புக்கள் ஆராயப்படவேண்டிய முறைமை பற்றிய சில அனுபவரீதியான பார்வைகளையும் முன்வைத்தன.

மானுடத்தின் விடுதலை நோக்கிய திசையில் எமது போராட்டத்தையும்,அதில் கலை இலக்கியங்களில் வகிபாகங்களும் பற்றி ஆராய்வதே கூடலின் நோக்கமாக இருந்ததால்,எமது போராட்டச் சூழலோடு பின்னிப் பிணைந்துள்ள எமது கலைச் செயற்பாடுகளை அந்தப் பின்னணியிலேயே வைத்து நோக்குவதே பொருத்தமாக இருக்கமுடியும். போர்க்காலத்தின் எமது கலை இலக்கியச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தியிருந்த புறச் சூழனின் பின்னணியிலேயே அவை ஆய்வுசெய்யப்படவேண்டியதும் அவசியமாகும்.இந்தப் பின்னணியில் வைத்து அவை நோக்கப்படுமாயின்,

## தேவை புதிய அளவீடுகள்



அவற்றின் பலங்கள், பலவீனங்களை காரண காரியத் தொடர்புகளுடன் நாம் புரிந்துகொள்ளமுடியும்.மேலும்,எமக்கே உரிய இந்தச் சூழல் தோற்றுவித்த படைப்புக்கள் என்ற வகையில்,இந்தப் படைப்புக்கள்,எமது வாழ்வோடொட்டிய அம்சங்களுடன் காணப்படும்.இவையே எமக்கேயுரிய கலைஇலக்கியப் படைப்புக்களாகும்.

வன்னி போர்மேகங்களாலும்,பொருளாதார முற்றுகைகளாலும் சூழப்பட்டிருந்த நிலையில், அவ்வேளையில் அவசர தேவையாக விருந்த படைப்பாக்கச் செயற்பாடுகளில் ஈடுபட்ட தனது அனுபவங்களைப் பகிர்ந்த புதுவை அன்பன்,எவ்வாறு அந்தச் சூழலில்,சூழலின் நெருக்குவாரங்களுக்கு முகங்கொடுத்தபடி தாமும்,தம்மைப் போன்ற பல அரங்கச் செயற்பாட்டாளர்களும் செயற்பட்டோம் என்பதை விளக்கிக் கூறினார்.போர் நெருக்கடிகளுக்குள்,எந்த ஒரு ஊடகச் செயற்பாடுகளும் கைகொடுக்காத நிலையில்,போராளிகளுக்கும் மக்களுக்கும் இடையேயான ஊடாட்டத்தை அரங்கக்கலையே ஓரளவுக்கு நிறைவு செய்தது.அது தனது கள அனுபவங்களுடன்,சூழலுக்கு ஏற்றவாறு, தேவைகளோடு ஒட்டித் தன்னை விரும்பியவாறாக அமைத்துக் கொண்டது. இந்த இயல்பான வளர்ச்சியை அன்பன் அழகாக விளக்கினார்.

''இந்தப் போர் நெருக்கடிக்குள்,வெளியுலகத் தொடர்புகள் அறுக்கப்பட்டிருந்த நிலையில்,நாம் மேற்கொண்ட அரங்கச் செயற்பாடுகளுக்கு என்ன பெயர் என்று எமக்குத் தெரியாது. தெருவெளி அரங்குகளாக இருந்த எமது இந்த அரங்கச் செயற்பாடுகளை ஆய்வுசெய்யவோ,அவை எவ்வளவுதூரம் வளர்ச்சியடைந்திருக்கிறது என்று மதிப்பிடவோ,எமது இந்தச் செயற்பாடுகளை ஆவணப்படுத்தவோ எமக்கு அவகாசம் கிடைக்கவில்லை''என்று குறிப்பிட்ட அவர்,''எமது அரங்கச் செயற்பாடுகளில் நாம் பேசிய விடயங்கள் கற்பனைகளல்ல. எமது வாழ்க்கையையே எமது அரங்குகள் பேசின.எமது அரங்கும், மக்களும் அங்கே பின்னிப்பிணைந்திருந்தனர்'' என்று தமது அரங்கச் செயற்பாடுகளின் பேசுபொருள்பற்றியும் குறிப்பிட்டார்.

ஒரு தெருவெளி அரங்க ஆற்றுகையின்போது,ஆற்றுகைக்கான ஒத்திகையின் நடுவே தமக்குக் கிடைக்கப்பெற்ற கரும்புலிப் போராளி ஒருவர் தனது தாய்க்கு எழுதிய கடிதம் ஒன்றுபற்றி புதுவை அன்பன் குறிப்பிட்டார்.''அம்மா இந்தக் கடிதம் உனது கையில் கிடைக்கும்போது நான் கரும்புலியாக வெடித்துச் சிதறியிருப்பேன்'' என்று அந்தக் கடிதம் தாய்க்குச் சொல்கிறது.இது உடனடியாகவே ஆற்றுகையில் ஒரு பாடலுடன் இணைந்த காட்சியாக உருப் பெருகிறது.

*இது பெற்றவளுக்கு*
*முத்தம் கொடுக்கிற கடிதமம்மா*
*இவன் செத்துமடிகிற நேரத்தில்*
*தாயின் கையில் கிடைக்குமம்மா*
*பத்துமாதம் சுமந்த வயிறு*
*பத்திஎரியுமம்மா..*

என்று நீளும் அந்தப் பாடலைப் பாடிக்காட்டிய புதுவை அன்பன் சொல்கிறார், ''இது என்ன ராகம் என்று எனக்குத் தெரியாது.இதன் சந்தம் என்னவென்று நானறியேன்.ஆனால் இவ்வாறு இதனை மெட்டமைத்துப் பாடி அதற்குரிய காட்சியையும் அமைத்திருந்தோம்.பார்த்தவர்கள் நெகிழ்ந்துபோனார்கள்.அவர்கள் உள்ளபடி விடயத்தைப் புரிந்து கொண்டார்கள்''.

சூழலோடு ஒட்டி இயல்பாக ஒரு கலைப்படைப்பு உருவாகும் தன்மையை இங்குநாம் காண்கிறோம்.இவ்வாறுதானே கலைப்படைப்புக்களென்பவை மானுட வரலாற்றில் உருவாகின.உழுது விதைத்தவனதும், கடற்றொழில் செய்தவனதும் அலுப்புத் தீர்க்கும் பாடல்களாக இருந்தவை தானே,பின்னர் ஓய்வுகிடைத்தபோது, இசைப் பாடல்களாகவும், கூத்துக்களாகவும் பரிணமித்தன. வயல்வெளியில் ஒரு தொழிலாளி பாடிய ''மூங்கில் இலைமேலே தூங்கும் பனிநீரே..'' என்கின்ற பாடலின் அடுத்த அடியான ''தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே'' என்பதை, அந்தச் சூழலுக்கு வெளியே இருந்த ஒரு அரசவைக் கவிஞனால் கற்பனைபண்ணியும் பார்க்கமுடியாதிருந்ததை நாம் கதைகளில் கேள்விப்பட வில்லையா?. அங்கே அவனது களத்தில் இருக்கும் பயிர்ச்செய்கை,அதனோடோடொட்டிய செயற்பாடுகளில் ஒன்றாக இந்தப் பாடலின் பேசுபொருள் இருந்தமையால்,அந்தச் சூழலை அறியாத அரண்மனை வாசகனுக்கு அதைக் கற்பனை பண்ணமுடியவில்லை.இது யதார்த்தம் தானே.

றுஷாங்கன்

எனவே இத்தகைய எமது சூழலோடு ஒட்டிய படைப்புக்களை மதிப்பிட எம்மிடம் என்ன அளவுகோல்கள் இருக்கின்றன?. எங்கெங்கோ, ஏதேதோ சூழல்களில் உருவான கலைப் படைப்பாக்கங்களின் அனுபவங்களின் வழி உருவாக்கப்பட்ட கலை மதிப்பீட்டு அளவீடுகள்,எமது இந்தப் படைப்புக்களை அளவிட உதவாது.இந்த அனுபவங்கள் எமக்கேயுரியவை.எனவே இதன்வழி உருவான கலைப் படைப்பாக்கங்களின் மதிப்பீடுகளும் எமது அனுபவங்களின் வெளிச்சத்திலே,புதிய கலை நியமங்களுடன் ஆய்வுசெய்யயப்பட வேண்டும். அல்லாது போனால்,எமது சொந்தப் படைப்புக்களைப் புறக்கணிக்கின்ற ஒரு வரலாற்றுத் துரோகத்தை நாம் செய்தவர்களாவோம்.

பொதுவாக கலை இலக்கியங்கள் பற்றிய எமது மதிப்பீடுகள்,நாம் இதுவரையில் கண்ட, அறிந்து கொண்ட கலைமுயற்சிகள், அவற்றின் வரலாறுகளின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் நாம் கண்டறிந்துகொண்டவையும்,வரலாறாகக் கற்றவையும் எவை?. உலகில் கலை இலக்கியங்கள் உன்னத நிலையில் இருந்ததாகக் கூறப்படும் காலங்களில்,அவ்வவ் நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட கலைமுயற்சிகளையே வரலாறு எமக்குத் தெரிவு செய்து தருகிறது.இவ்வாறு ஒரு உன்னத நிலையை எட்டிய ஒரு கலை முயற்சி,அந்த நிலையை எட்டுவதற்கு தாண்டிவந்த படிநிலை வளர்ச்சிகள் இந்த வரலாறுகளில் இடம்பெறுவதில்லை. இத்தகைய வரலாறுகளைப் படிக்கும் நாம்,எமது சூழலைப் புரிந்து கொள்ளாது,இதேமாதிரியான ஒரு வளர்ச்சிநிலையை,திடீரென எமது சூழலில் எதிர்பார்ப்பது எவ்வளவுதூரம் பொருத்தமானது?.

ஆபிரகாம் லிங்கன் என்று ஒரு மனிதன் திடீரென ஒருநாள் அமெரிக்காவில் தோன்றினாரா?.அவர் பிறந்ததுமுதல்,அவரது வளர்ச்சி,இதில் அவர் எதிர்நோக்கிய சவால்கள், அவற்றை அவர் எதிர்கொண்ட விதங்கள் என்கின்ற ஒரு முழு வரலாற்றுப் பார்வையே ஆபிரகாம் லிங்கனின் தோற்றத்தைப் புரியவைக்கும்.அவரது வரலாற்றைத் தெளிவாக்கும். இதை விடுத்து,ஆபிரகாம் லிங்கனை மட்டும் ஒரு பொது அளவுகோலாகக் கொண்டால் எத்தகைய ஆபத்துக்கள் தோன்றும்?.ஆபிரகாம் லிங்கன் மாதிரி இல்லை என்று ஒரு பதினைந்து வயதுப் பிள்ளையை நாம் நிராகரிக்க முடியுமா?.

இவ்வாறுதான் இன்றைய எமது கலைமுயற்சிகள் இருக்கின்றன. அவை தமக்கேயுரிய சூழலில்,தம்மை மறுகண்டுபிடிப்புச் செய்துகொண்டு. மெல்ல வளர்ச்சியை நோக்கி அடி எடுத்து வைக்கின்றன.இதனைப் புரிந்து கொள்ளாது,இந்தச் சூழலை அறிந்து கொள்ளாது (அல்லது அறிந்து கொள்ள முயற்சிக்காது), இவற்றை மதிப்பிட முனைவது,அல்லது விமர்சிப்பது ஆபத்தானது.அவை தமக்கேயுரிய பாணியில் வளர்ந்துவர அனுமதிப்போம்.அதற்கு வழிகாட்டுவோம்.இந்த வளர்ச்சிப் படிநிலைகளை புரிந்துகொள்ளாது,எமது கலை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, ஆவணப்படுத்தப்படுமாயின்,மிக முக்கியமான ஒரு காலகட்டத்தில், மிகுந்த நெருக்கடிகளுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்ட கலைப் படைப்பாக்கங்கள் பலவற்றை நாம் இருட்டடிப்புச் செய்தவர்களாவோம். அத்தோடு,காலனித்துவம் நேரடியாக எமது மண்ணில் செய்ததுபோல,எமது மண்ணுக்குரிய இயல்பான வளர்ச்சியுடன் உருவானவற்றை அழித்து, அவற்றினிடத்தில்,மீண்டும் எங்கிருந்தோ கொண்டுவந்த இந்த மண்ணோடு ஒட்டாதவற்றை பதியம் வைத்தவர்களாவோம்.


எத்தனையோ ஆயிரம் போராளிகளினதும்,பொதுமக்களினதும் குருதியால் வள(பல)ப்படுத்தப்பட்ட எமது மண்ணில், இத்தகைய புல்லுருவிகளை விதைத்த வரலாற்றுத் துரோகத்தை நாம் செய்யாதிருப்போமாக.

இறுதியாக,புதுவை அன்பனின் மொழியிலேயே கூறுவதானால், ''இன்று நாங்கள் ஒரு சமாதானச் சூழலுக்குள் வந்திருக்கிறோம்.இந்தக் காலத்தில் இந்த 'மானுடத்தின் தமிழ்க்கூடல்' மிகப்பெரிய ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பணியை ஆரம்பித்திருக்கிறது. எங்கெங்கோ பிரிந்து அலைந்து திரிந்து திசைமாறிப்போன,தொடர்புகள் அற்றுப்போன எமது உறவுகள் இந்தக் கூடலில் ஒன்றாகச் சங்கமித்திருக்கின்றன.இவ்வாறு சங்கமித்திருக்கிறவர்கள்,நாளைய சந்ததியின் தலையெழுத்தை நிர்ணயிக்கவேண்டிய பெரும் பாக்கியத்தையும்,பெரும் பொறுப்பையும் பெற்றிருக்கின்றனர்''.

இப்பணியை,நாம்,எமது போர்க்கால அனுபவங்களைக் கேட்டறிந்தும்,நேரில் சென்று பார்வையிட்டும்,உரிய முறையில் முன்னெடுக்கவேண்டும்.அவ்வழியில் எமது மண்ணுக்கேயுரிய அறிவு,சிந்தனை மரபு எல்லாத் துறைகளிலும் தனித்துவத்துடன் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

★★★★

(முற்றும்)



சிறுகதை

# அகமும் புறமும்

**நீண்ட** இடைவெளியின் பின் மதுவனிடம் இருந்து கடிதம் வந்திருந்தது. காலையில் கையில் கிடைத்ததும் அதைப்படிக்க வேண்டும் என்ற உந்துதல். ஆனால் தலைக்கு மேல் வேலையிருந்தது.

''பயிற்சி அணிகளுக்குரிய நாளாந்த அட்டவணை தயாரிக்க வேண்டும் சமையற் கூடத்துக் கூரை மழை தாங்காது ஒழுகிறது. அதை பிரித்து மறுபடி ஒழுங்கமைத்து ... கூடவே சமையலுக்குரிய விறகுகளுக்கு அவசரமாக ஒழுங்கு செய்தாகணும். விறகு எடுத்துவர யாரிடம் இழுபொறி இரவல் பெறலாம்? என யோசித்தேன்

' வேணு அண்ணா ரைபிள்களை எல்லா அணிகளுக்கும் அனுப்பி விடட்டோ?' கேட்டவாறு ஆதவன் மாஸ்டர் ஈரம் சொட்ட வந்து நின்றார்.

"எப்படியெல்லாம் நல்ல நிலையில் இருக்குதே?"

''குறிகாட்டிகள்... பரல்கள் குறைபாடில்லாமல் இருக்கு சிலசில மட்டும் காஸ் சிலிண்டர்,பட் இப்படியான குறைபாடுகள் இருக்கு''

''அது பரவாயில்லை, நீங்கள் சொன்னமாதிரி ரைபிள்களை அணித்தலைவர்களிட்டை ஒப்படையுங்கோ... மழை விடாமல் பெய்யும் என்றால் ஆயுதப் பயிற்சியை நாளைக்குத் தான் ஆரம்பிக்கலாம்.''

ஆதவன் வெளியேற குபேரன் வந்து நின்றான்.-கடந்த ஒரு மாதமாக சமையற்கூட மேற்பார்வையை செய்துவருபவன்.

''இன்றைக்கு என்ன பற்றாக்குறை- உப்பா, புளியா?'' சிரித்தபடி வினவினேன்.

"சீனி முடிஞ்சிட்டுது வேணு அண்ண. காலமை பிளேன்ரிக்குக் கூடப் போதாது.''

"சீனியர்ஸ் பெடியளைத் தவிர்த்து பயிற்சிக்கு வந்திருக்கிற போராளிகளுக்கு மாத்திரம் காலைப் பிளேன்ரீ குடுங்கோ.''

"அப்படியாகிலும் காணாது!''

"ரீக்குள்ள போட்டுக் கலக்காது கையில குடுங்கோ: தொட்டுக் குடிக்கச்சொல்லி சமாளியுங்கோ.''

எழுந்து முக்காலியில் குடுவை நிறையவிருந்த குடிநீரில் ஒரு குவளை அருந்தினேன். மழைக்குளிருக்கு பனித்திரவலைகள் தொண்டைக்குள் இறங்கும் உணர்வு......

கைக்கடிகாரம் காலை ஆறு மணியைத் தொட்டுக்கொண்டிருந்தது. உறுதிப்பிரமாணம் ஆரம்பமாக விருப்பதை விசில் ஊதி சைகை செய்தவாறு மைதானத்தை நோக்கி விரைந்தேன்.

✦ ✦ ✦

மாலை வானம் வெளுத்திருந்தது. சூட்டுப்பயிற்சிக்கு மண் சாக்குகளை அடுக்கி ''கவர்'' செய்யப்பணித்து விட்டு அறைக்குள் வந்தமர்ந்தேன்

எதிரே தொங்கிய நாட்காட்டி 'செப்ரெம்பர் பத்து' என்றது. மாவீரர் வாரத்திற்கு இரண்டு மாதங்களுக்குக் கூடுதலான கால அவகாசம் உள்ளது.

'பயிற்சியை நிறைவு செய்ய தாராளமாகப் போதும்.' மேசையில் கடிதத்தை யெடுப்பதற்காக தினக் குறிப்பேட்டை புரட்டினேன். " ச்சா... கவனிக்காமல் இருந்திட்டன்.'' மழையொழுக்கில் குறிப்பேடு தொப்பலாக நனைந்திருந்தது பக்குவமாக தாள்களைப் புரட்டி கடிதத்தைத் தேடியெடுத்துப் படித்தேன்.

ஏழு வருடங்களுக்கு முன் பார்த்த அதே குறுணிக் கையெழுத்துக்கள். வீட்டுப் பெயரிலேயே விளித்து ஆரம்பித்திருந்தான் மனோ, நீண்ட இடைவெளியின் பின் உன்னைப் பற்றி கிடைத்த தகவலையறிந்து அவசரமாக எழுதுகின்றேன். இடைப்பட்ட நாட்களில் ஏன் தொடர்பு கொள்ளவில்லை? எம்மையெல்லாம் இவ்வளவு சீக்கிரத்தில் மறந்து விட்டாயா...?

கடந்து போன சில வருடங் களில் எத்தனை மாற்றங்கள் நிகழ்ந்து விட்டன. உன்னுடைய அப்பா... சென்ற மாதம்- வருடப்பிறப்பிற்கு முதல் நாள் இரத்த அழுத்தம் கூடி இயற்கையெய்தியிருந்தார். நான் எவ்வளவோ முயன்றேன்.. ஆனால் இறுதி நிகழ்வில் கலந்து கொள்ள முடியவில்லை. அன்று எங்கள் நல்லூர் பிரதேசத்தில் ஊரடங்கு அமுலில்.....'' பார்வை அதே வரிகளில் நிலை குத்தி நின்றது.

"அப்பா இறந்துவிட்டாரா...ஓ....! இவ்வளவு விரைவில் அந்தப் பிரிவு நிகழ்ந்து விட்டதா?''

கைகளால் நாடியைத் தாங்கி இரு கண்களையும் மூடி சில கணங்கள் அமைதியில் ஆழ்ந்தேன்.

'விபரமறியா வயதில் தாயைப் பறிகொடுத்த சோகம்... அதை உணர முடியாமலேயே மூன்று குழந்தைகளையும் பற்றாக்குறை தெரியாமல் பாசத்தைப் பொழிந்த அந்த ஆத்மா நிரந்தரமாக அமைதியாகி விட்டதா? உள் மனம் கோவென கதறியது.

93ம் ஆண்டில்... 'தவளை'- இராணுவத்துக்கு எதிரான சமரில் விழுபுண்ணேற்றிருந்த ஏழு மாதங்களும் கண் துஞ்சாது கூடவே நின்று கவனித்த அந்த பாசமுள்ள ஜீவனை இனிக் காணமுடியாதா...? வீட்டில் சொல்லிக்கொள்ளாது திடுதிப்பென போராட்டத்திற்கு வந்து விட்டதற்காக ஒரு தடவையேனும் ' ஏன் எங்களை விட்டுப்போனாய்?' என்று கேட்கக் கூட தோன்றாத வெள்ளை மனம் அவருக்கு...

'தோளுக்கு மேல் வளர்ந்த பிள்ளை... நாட்டுக்கென்று செய்ய வேண்டிய கடமைகளை நான் தடுக்க மாட்டேன். அது அவனோட உரிமையும் கூட' என்று வம்பு பேசுவோரின் வாய்க்குப் பூட்டுப்போட்ட அப்பா...

மைதானத்தில் சாக்குகள் அடுக்கும் பணி முடியும் தறுவாயில் இருப்பதை ஜன்னல் ஊடாகப் பார்க்க முடிந்தது.

'...ஆனாலும் அந்தியேட்டி தினத்தை ஊரிலுள்ளவர்கள் சேர்ந்து எதுவித குறையும் இல்லாது செய்து வைத்தோம்' என்று ஆறுதல் படுத்தியிருந்தான். கடிதத்தை அப்படியே விரித்தப்படி வைத்து விட்டு வெளியில் வந்து விசிலை ஊதினேன் தேனீர் இடை வேளை.

'தட்டில் பிளேன்டீ' யைச் சுமந்தபடி குபேரன் வர இப்போதைக்கு வேண்டாம் என்று திருப்பி விட் டேன்.

'எல்லோரையும் கொண்டு கிச்சின் தகரங்களை கீழிறக்கி ஓட்டைகளைக் கவனித்து மீள ஒழுங்குபடுத்துங்கோ... இரவு மழை தொடருகின்ற சாத்தியக் கூறு தென்படுது' என்றேன்.

குபேரன் நகர்ந்து செல்ல கடிதத்தை விட்டகுறையிலிருந்து தொடர்ந்தேன்.

''...மூத்த மகன்இப்போது மொண்ரிசரி போய் வருகின்றான். மற்றவர்கள் என்னைப் போலவே அனு அவனும் வாயாடி என்கிறார்கள் என் மனைவி இரண்டாவது குழந்தையை . ஏழு மாத சிசுவாக சுமக்கிறாள். 'ஸ்கேன்' செய்து பார்த்ததில் பெண் குழந்தை என்று டாக்டர் சொன்னார்.

மனோ, நீ இப்போதும் தனிமரமாக இருப்பதாகக் கேள்வி... இதில் உனக்கு என்ன ஆனந்தமோ...? நானேறியேன் ஒன்று சொல்வேன் கேள், தனிமரம் தோப்பாவதில்லை! ஆ... இன்னொன்றையும் உனக்குச் சொல்ல வேணும், சுதாவும் போராட்டத்துக்கு என்று வெளிக்கிட்டு மூன்று வரியம் கடந்திட்டுது. நீ அறிந்திருப்பியோ தெரியவில்லை...''

என்னுள்ளே பெருமூச்சு எழுகிறது.

கடிதத்தை அப்படியே விரித்த படி டயரியினுள் வைத்து விட்டு மேசையில் இருந்து எறிகணை விபரம் பொறித்த பச்சை பெட்டியைத் திறந்தேன் அது என் உடமைகளின் சேமிப்பிடம். துணிகளை வெளியே எடுத்து விட்டு அடியிலிருந்த சட்டமிடப்பட்ட படத்தை பெட்டியிலிருந்து எடுத்தேன்.

அதில் ...

வீரவேங்கை மயூரி வீரச்சாவு சித்திரை, 2000 மதுவன் கேட்டிருந்த அதே சுதா படத்தில் மாவீரராக...

படத்தோடு வைத்திருந்த சுதாவின் மடலையும் எடுத்து விரித்தேன். இதைப் பார்ப்பது எத்தனையாவது தடவை...? தெரியவில்லை. எனக்கே மறந்து போயிற்று... இப்போது மதுவனின் கேள்வி மீண்டும் பிரித்துப் பார்க்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியது. ஓரங்கள் நைந்து போயிருந்தது. ஆனாலும் என்வரையில் பெறுமதி மிக்கதொரு சொத்து அது! சுதா போராளியாக மாறிய பிறகு எனக்கு வரைந்திருந்த முதல் கடிதம், அதுவே இறுதியுமாக அமைந்து விட்டது!

**கோணாவில் கிருபாகரன்**

'...என் கரம் பற்றக் காத்திருக்கும் என்னவருக்கு இப்போது நானும் ஒரு போராளியாக இருப்பது நிச்சயம் மகிழ்ச்சியடைவீர்கள் என நினைக்கிறேன். கல்லூரிப் படிப்பு பூர்த்தியடைய நீங்கள் மாத்திரம் தனியே போராட்ட வட்டத்துக்குள் வந்த போது நான் துடித்துப் போனது உண்மை! கல்லூரி நாட்களில் உங்கள் மீது எனக்கு ஏற்பட்டிருந்த பற்றுதல் வெறுமனே உடல் சார்ந்ததல்ல... உங்களிடமிருந்த விரிந்த சிந்தனை- தன்னலமற்ற கொள்கைகள்... இவை தான் எனக்கு பிடித்தவை. அதனால் தான் உங்கள் வழித்தடத்தில் நானும்... என்னால் நிச்சயம் ஒன்றைப் புரிந்து கொள்ள முடிகிறது. எங்களது போராட்ட வாழ்க்கையில் எந்த வேளையில் எதுவும் நிகழலாம்... யார் கூடவேனும் நிரந்தரமாக பிரிந்து போகலாம், புலனிழந்தும் போகலாம்... எவற்றையும் ஏற்கின்ற பக்குவம் எனக்கு உண்டு. எமக்குரிய கடமைகளை நிறைவேற்றும் வரை கொள்கைக்காக வாழுகின்ற இந்த மண்ணின் மைந்தர்களாக... நல்ல நண்பர்களாக என்றும் இருப்போம். எம் தாயகத்து வானின் வெடிவெள்ளி பூக்கும் நேரம் நாம் உயிர் வாழ்தல் அதன் பிறகு... அன்புள்ள போராளி மயூரி.



எங்கள் முதல் சந்திப்புக் கூட மறக்க முடியாத சுவையான அனுபவம்...!

கல்லூரி உயர் வகுப்பு கலை மன்றத்தில் வெள்ளிவிழா இறுதி நாளின் சிறப்பு நிகழ்வாக விவாத அரங்கு நிகழ்ந்தது. தலைப்பு இது தான் தமிழர் வரலாற்றில் மேலோங்கி நிற்பது காதலா...? அன்றேல் வீரமா...?

சபை நிறைந்த கூட்டம் ' காதல் வாழ்வே மேலோங்கியிருந்தது' என்ற அணிக்கு தலைமை வகித்தான் மதுவன். 'வீர வாழ்வே தமிழர் வரலாற்றில் மேலோங்கியிருந்தது. என்ற கருத்தினை முன்னெடுத்த அணிக்கு நான் தலைமை தாங்கினேன்.

வாதப் பிரதி வாதங்கள் பொறி பறந்தன! அனைவரது சிந்தனைகளையும் தட்டியெழுப்பக் கூடிய கருத்துக்கள் என வந்திருந்த அறிஞர்கள் வாயாரப் புகழ்ந்தனர். முக்கியமாக இணைப்பாளராக கடமையாற்றிய சுதாவின் ஆணித்தரமான கருத்துக்கள் சிகரமாக அமைந்தன.

'...மூவேந்தர்களாலும் - சேர- சோழ- பாண்டிய - போற்றி துதிக்கப்பட்ட தமிழர்களின் வாழ்க்கை, கலை பண்பாட்டு கோலங்கள் உலகின் ஏனைய சமுதாயத்தவர்களுக்கு ஒரு சிறந்த முன்மாதிரி கைபிடித்தவளுடனேயே ஆயுள்முழுக்க வாழும் வாழ்க. கணவன்- மனைவி பெற்றார்- பிள்ளைகள்... இந்த உறவு வலையைப் பிணைத்துள்ள பாசம். இவற்றின் அடுத்தபடியாக கூட்டுக் குடும்பம் ... ஒன்றிணைந்த சமூக வாழ்வு... இவையெல்லாம் காதல் வாழ்வின் வெவ்வேறு வெளிப்பாடுகள் அல்லவா.

'... அந்நியர்களின் படையெடுப்புக்களை நேரெதிர்த்து நின்று வீரமுடன் போராடாதிருந்தால்.. உறவுகள் அழிந்து, இல்லிடம் தொலைந்து, எம் நாடழிந்து ஈற்றில் முகவரியும் அல்லவா இழந்திருப்போம் நடைப்பிணம் என வாழும் அந்த வாழ்க்கையில் சிறப்பேது..!'

எனவே இந்த ஓர்மத்தைத் தருவது கூட தாய்நாட்டின் மீதான காதல் அல்லவா? '...ஆகவே தமிழர்களின் உன்னத வாழ்விற்கு அகமும் புறமும் அதாவது காதலும் வீரமும் இருகண்களாக அமைந்துள்ளன. சபையில் எழுந்த கரவொலி வானைப் பிளந்தது!'

அந்தப் பசுமையான நினைவுகள் என்னுள் நிழலாடுகின்றன.

மாலை வேளை ஓய்ந்திருந்த மழை இப்போது அசுர பலத்துடன் பொழியத் தொடங்கியிருந்தது.

வாசலில் நிழலாடியது, கையில் அரிக்கன் லாந்தருடன் புதிய போராளி ஒருவன் நின்றுக் கொண்டிருந்தான்.

'வேணு மாஸ்டர், நாளைக்கு சூட்டுப் பயிற்சிக்குரிய அத்தனை ஆயத்தங்களும் செய்தாயிற்று...'

'அப்படியென்றால் சரி இரவு சாப்பாட்டுக்குப் பிறகு எல்லாரையும் பொது மண்டபத்தில கூடச் சொல்லுங்கோ... ரைப்பிள் கழற்றி பொருத்துறது சம்பந்தமாக வகுப்பிருக்கு'

அவன் மகிழ்ச்சியுடன் தலையாட்டி விட்டு அகன்றான். அவன் மேசையில் வைத்து விட்டுச் சென்ற விளக்கொளியின் எதிரில் அமர்ந்தவாறு வெள்ளைத்தாள் ஒன்றை எடுத்தேன் மதுவனை விழித்து மளமளவென்று எழுதத் தொடங்கினேன்.

'...நண்பா சகலதும் வாசித்தறிந்தேன் உன் மனைவிக்கும் குழந்தைக்கும் எனது நல்வாழ்த்துக்களை கூறு! நீ குறிப்பிட்டதைப் போல நான் குடும்ப சுமைகள் அற்றவனாகத் தான் உள்ளேன். ஆனால் தனிமையில் வாடும் ஒற்றைப் பறவையாக அல்ல... என்னை நம்பி பலநூறு போராளிகள் உள்ளார்கள்... இதற்கு முன்னரும் பலரை இந்த நாட்டிற்காக உருவாக்கி உலவவிட்டுள்ளேன். அவர்களைப் பொறுத்தவரை ஒரு தாய்க... தந்தையாக... தங்களின் சுக துக்கங்களைப் பகிர்ந்து கொள்ளும் நண்பனாக என்னை கருதுகிறார்கள் தவறு புரியும் வேளைகளில் கண்டிப்பு மிகுந்த ஒரு ஆசானாகவும் செயற்பட வேண் டியுள்ளது. இது எனக்கு ஆத்ம திருப்தியைத் தருகிறது. நாடு இன்னும்....நிறையவே எதிர்பார்க்கிறது.'

'...இறுதியாக உனது கேள்விக்கு விடையாக சுதாவின் மடலை இணைத்துள்ளேன். இது அவளின் இறுதி சாசனம் எனக்கு அமைதியையும் உறுதியையும் தருகின்ற நித்திய சஞ்சீவிகள் இதன் வரிகள். அவள் எழுதி உள்ளவை உனக்கு அனைத்தையும் போதிக்கும்...'

கடிதத்தைப் பூரணப்படுத்தி சுதாவின் மடலையும் அத்துடன் இணைத்தேன். முகவரியை கவரில் எழுதி முத்திரையையும் ஒட்டி விட்டு எழுந்தேன்.

நேரமாகிறது. நான் வகுப்பிற்குப் போகவேண்டும்- போராளிகள் காத்திருப்பார்கள.

சட்டத்தை நாடிச் செல்வது , பூனைக்காக பசுவை இழப்பது போல் தான்.
-சீனப்பழமொழி

# சுந்தரின் கதைத்தேன்- நான்கு





## வடு

ஐயா, என் தந்தை வறுமை தாங்காது திருடனாக மாறியதால் பாடசாலையில் படிப்பது வேதனையாக இருக்கிறது. அங்கு எது களவு போனாலும் முதலில் என்னைத்தான் சந்தேகிக்கிறார்கள். அது மட்டுமா ஊரிலும் அயலிலும் எங்கு களவு நடந்தாலும் என்னையே சந்தேகத்தில் பிடித்து உதைக்கிறார்கள். அதுவே ஊரை விட்டு ஓடி இந்த ஊருக்கு வந்துள்ளேன். நாலு நாள்ஒரே பட்டினி . உங்க வீட்டிலே ஏதாவது வேலையிருந்தால் சொல்லுங்கள் எதுவானாலும்செய்கிறேன். என்று அந்தப் பெரிய மனிதரின் முன்பு பரிதாபமாய்க் கெஞ்சினான் அந்தச் சிறுவன்.

.பெரிய மனித தோரணையுடன் அவர் கேட்டார்

ஏன் வீட்டில் திருடவா?

சிறுவன் அதிர்ந்து போனான்.அவன் கண்களில் மகாவலி பெருகியது.

## கலைஞன்



ரேடியோ அமுதகானத்தைப் பொழிந்துகொண்டிருந்தது. அந்த ஹோட்டலின் முதலாளி உட்பட சாப்பிட வந்தவர்கள் அனைவருமே வானொலியால் மிதந்து வந்த இன்னிசைக் கச்சேரியில் மெய்மறந்து சொக்கிப்போயிருந்தார்கள்.

நிகழ்ச்சி முடிந்தது.

ஹோட்டல் தாழ்வாரத்தில் ஒதுங்கியபடி நின்று கொண்டிருந்த ஒருவனை ஏனப்பா இங்கே நிற்கிறாய் என இரைந்தார் முதலாளி.

எனக்கு ரேடியோ வாங்க வசதியில்லை. எனது ரேடியோக் கச்சேரி எப்படி இருக்குதுஎன்று கேட்பதற்கே இங்கு நின்றேன் என்றான் அவன்.

## பேர் போனவர்

நாட்டின் தியாகச்சுடர் அணைந்து விட்டது அவர்களுக்கு அஞ்சலி செய்யும் முகமாக பல கவிதைகள் பத்திரிகைக்காரியாலயம் வந்து குவிந்தன.

ஒரு கவிதை ஆசிரியர் கண்களைக்குளமாக்கியது. அதைப்பிரசுரிக்கும் படி ஆசிரியர் அச்சுக்கோப்பாளரிடம் பணித்தார். அவர் கண்களிலிருந்தும் கண்ணீர் பெருக்கெடுத்தது. கவிதையும் பத்திரிகையில் பிரசுரமானது படித்தவர்களெல்லாம் பாகாயுருகினர்.


ஆனால் ஒருவரின் கண்களிலிருந்து மட்டும் அனல் வீசியது. பத்திரிகையில் வழக்கும் தொடர்ந்தார். அவர் வழக்குத் தொடர்வதற்கு காரணம் கவிதையின் கீழவரது பெயர் பிரசுரமாகவில்லை என்பதுதான்.



## பரிசில்

அன்று பாலனின் பிறந்தநாள், ஏழையாகையால் அவன் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடவில்லை. அன்று மாலை அவனது பணக்கார நண்பன் சுகுமார் வந்து அவன் கைகளில் ஒரு பார்சலைக் கொடுத்து பிறந்தநாள் வாழ்த்தும் தெரிவித்துவிட்டுப் போனான். பாலன் பார்சலைப் பிரித்துப் பார்த்தபோது அதற்குள் விலை உயர்ந்த ஓர் அழகான பரிசு ஒன்று இருந்தது. அது ஒரு வெற்று மணிப்பேர்ஸ்.

# படித்ததில் பிடித்தது



## தே...

இரவு ஏழரை மணி வெய்யிலில் எங்கள் நிழல்கள் நீண்டு விழுந்திருந்தன.

அது வெண்ணிரவுகளின் காலம். லெனின் கிராத் நகரின் நெவ்ஸ்தி நெடுஞ்சாலையிலிருந்து பிரிந்த ஒரு தெருவில் நாங்கள் நடந்து கொண்டிருந்தோம். அமிதாக்கா, நான், துளசி,மெஹம்மட்.

நான் நான்தான். அமிதாக்கா கொழும்புப் பக்கம். சிங்களம் தாய் மொழி. உண்மையில் எனக்கும் துளசிக்கும் ஒரு அக்கா மாதிரியே இருந்தாள். துளசிக்கு தமிழ் நாடு. சென்னை. ஆரம்பத்தில் துளசிக்கும் அமிதாக்காவுக்கும் இடையில் ஒரு இணைப்புக் கண்ணியாக நான் இருந்தேன். ஆனால் என்னை யும் மேவி, வலுகெதியில் ஒரு உறவு அவர்களைப் பிணைத்தது எனக்கு ஆச்சரியமாய்ப் போயிற்று. எனக்கு யார் கூடுதல் நெருக்கம் என்று எனக்குத் தெரியாதிருந்தது. அடுத்து, மெஹம்மட். ரோசாப்பூ நிறமும் கறுத்த சுருள் முடியும் பூனைக் கண்ணும் சிவப்பு உதடுகளும் கொண்ட டுனீஷியன். துளசியின் நண்பன். இந்தக் கதைக்குச் சம்பந்தமில்லை என்றாலும் அன்று உடன் இருந்தான்.

ஐஸ்கிறீமாகக் குடித்து, அலுத்து, தேநீர்த் தவண்டையில் 'புலோச்னயா' ஒன்றுக்குள் நுழைந்து மொறு மொறுக்கிற புதுப்பாண் வாசனையை ரசித்தபடி வரிசையில் நின்று கறுப்புத் தேநீரும் பாணுமாய் மேசையடிக்குவந்து வேலையை முடிக்கு மட்டும் ஒருவரும் பெரிதாக ஒன்றும் 'பேசவில்லை.

பிறகு வெளியே வந்த பின் துளசி சொன்னாள் " என்ன தானிருந்தாலும் இந்த ஜோர்ஜியத் தேயிலை எல்லாம் நம் தேயிலைக்குக் கிட்ட வரமுடியாது."

''உண்மை,'' என்றாள் அமிதாக்கா.

"உலகிலேயே இந்தியத் தேயிலை தானே சிறந்த தேயிலை...."

''என்ன சொல்கிறாய், துளசி?" ஏக காலத்தில் நானும் அமிதாக்காவும் கேட்டோம். எங்கள் குரல் கூடச் சற்று உரத்து இருந்ததோ?

சாந்தன்

# எனது தேசம் அழகானது



வன்னி ஆறு பெருக்கெடுத்து ஓடுகின்றது-ஈழ
வளங்களுக்காய் பெருங்குளங்கள் நிரம்பி வழியுது;என்
எண்ணங்களோ சிறகடித்துப் பறந்து செல்லுது - தமிழன்
ஏழையல்ல என்பதையே உணர்த்தி நிற்குது.

ஆற்றின் கரை ஓரம் கூட எவ்வளவு அழகு-அந்த
ஆலாக்கொக்கும் எங்களுக்கு நெருங்கியதோர் உறவு;புலவர்
போற்றிப் புகழ்ந்த ஈழதேசம் புனிதமானது - கொடிய
போர் ஒழிந்தால் எங்கள் வாழ்வு இனிமையானது.

நெல் மணிகள் தலையசைத்து வழியனுப்பி வைக்கும் - நீண்ட
நடைநடந்து களைத்து வந்தால் மோர் நிறைய இருக்கும்;அதோ!
புல்லுச் சுமந்து பெண்கள் கூட்டம் வரம்பில் போகுதே- மேற்கில்
பொழுது சாயும் அழகைப் பார்த்து குயில்கள் பாடுதே.

வண்ண நிலவு வா்னில் வந்து சிரிக்கும் அழகைப் பார்த்து-
கவிஞன்
வாழ்த்துப்பாடித் தினமும் தனக்குள் மகிழ்ந்துகொள்ளுவான்; அவன்
எண்ணக் கருவில் ஈழதேசம் நிமிர்ந்து நிற்கும்பொழுதில்- அதன்
இயற்கை அழகைத் தன் கவிகளிலே எழுதிச் சொல்லுவான்.

## நீ, நிமிர்ந்துகொண்டால் விலகியோடும் பஞ்சமல்லவோ...

போரோடு வாழுகின்ற ஈழத்தமிழனே - நீ
புதியவனாய் வாழ வேண்டும் இந்த மண்ணிலே என்றும்
ஏரோடி வாழ்க்கையிலே எழுந்து நிமிரடா - அடுத்த
எதிரிவீட்டுச் சோற்றை வெறுத்து நாற்றைவிதையடா.

நெல்லு விளையும் பூமியிலே பிறந்தவனே நீ - அதை
நேற்றுவரை உணரவில்லை வாழ்க்கையிலே நீ;வெறும்
சொல்லுரைத்துச் சோம்பலாக இருந்தவனும் நீ -பகைவன்
சோறுபோடக் குனிந்து பணிந்து உண்டவனும் நீ.

தாய் நிலமோ தரிசாக அழிந்து போவதா- வாழும்
தலைமுறைகள் அதைப்பார்த்து ஊமையாவதா;உனது
காய்ந்து போகும் வயிற்றுக்காக கலப்பைபிடியடா- நாளை
கலைந்து செல்லும் கவலையாவும் உணர்ந்துகொள்ளடா.
வளம்கொழிக்கும் தேசமுனக்குத்தெரியவில்லையோ- கொடிய
வரட்சிகளைப் போக்குவதுன் கடமையல்லவோ; தமிழ்
நிலங்கள் யாவும் உந்தனது இமைகளல்லவோ- நீ
நிமிர்ந்துகொண்டால் விலகியோடும் பஞ்சமல்லவோ

அலெக்ஸ் பரந்தாமன்

## நிமிர்வு



- வளவை வளவன் -

மனிதத்தை மதியா நெஞ்சம்
மடமை கொள் மதியின் ஊற்று
மனிதத்தை உணரா உள்ளம்
மாண்புகள் மலராகக் கீற்று
மனிதமே உயர்வாம் மண்ணில்
எண்ணிடும் எண்ணம் ஒன்றே
மனிதத்தை புரிந்தே வாழின்
மானிடம் பேசல் நன்று
மானுடம் பேசிப் பேசி
மாண்புகள் தம்மை மாய்க்கும்
மானுடம் இல்லா நெஞ்சம்
வீம்புகழ் வாழும் மஞ்சம்
மானுடம் பேசி மண்ணில்
மனிதத்தை வீழ்த்தும் மாந்தர்
மானுட வேடம் பூண்ட
போலிகள் பதர்கள் எல்லோம்
அடுத்தவன் உயர்வைக் கண்டு
மனமது பொறுக்கா தேங்கி
தொடுத்திடும் கணைகள் தாமே
தொன்மைகொள் உண்மை என்றே
விடுப்புரை புரிவாரந்தோ
இவர்களால் துயரே பொங்கும்
துடுப்புகள் இல்லாப் படகாய்
துலங்கிடாதழிவார் மண்ணில்
மானுடம் தன்னை வீழ்த்த
மாதுயர் செய்தோர் தம்மை
மானுடம் எழுந்தே மாய்த்து
வென்றதிம் மண்ணின் உண்மை
மானுடம் ஒன்றே மண்ணில்
நிலைத்திடும் பண்பா மென்று
மானுடம் உணர்ந்தோர் கூற்று
மலையென நிமிரும் மண்ணில்

# ஊருக்குத் திரும்புதல்

ஊரிலிருந்து வெளிக்கிட்டு வேறு ஊர்களுக்கோ நகரங்களுக்கோ பயணம் போகிறோம் ஓரிரு நாட்களுக்குள்ளே எப்போதடா ஊருக்குத் திரும்புவோம் என்ற எண்ணம் உறுத்தத் தொடங்கிவிடும். ஊருக்குத் திரும்பியதும்தான் ஒரு நிம்மதி பிறக்கும். பிறந்து வளர்ந்த ஊருக்கு அப்படியொரு ஈர்ப்புசக்தி. ஊரோடு ஒட்டிப்பிறந்த சுகம். ஊரின் சுகம்.

ஊரின் மண்ணிற்கொரு சுகம்
ஊரின் தண்ணீருக்கொரு சுகம்
ஊரின் காற்றிற்கொரு சுகம்
ஊர் வெளியில் உலவி வருவதில் ஒரு சுகம்
ஊரென்பதே ஒரு சுகம் தரும் வெளியகம்.

சுகமான வெளியாகிய ஊரைவிட்டுச் சில நாட்கள் பிரிந்திருப்பதே வேதனையானது. ஊரைவிட்டுப் பெயர்ந்து போவதென்பதோ பெருந்துயரம் தருவது. தீவுகளில் இருந்து இடம்பெயர்ந்த மனிதர்கள் முதலில் யாழ்ப்பாணத்துக்குப் போனார்கள். பிறகு யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்குப் பெயர்ந்தார்கள். வன்னிக்குப் போன பின்பும் நோயின் தாக்குதல்கள் பொருளாதார முட்டுப்பாடுகள் காரணமாக பிறகும் சில்லஞ்சில்லமான இடம்பெயர்வுகள். இப்படியாகச் சிதறுண்டு போனது ஒரு மனிதக் கூட்டம்.

பன்னிரெண்டு வருடகாலப் பெயர்வும் உலைவும். உலைந்து திரிகின்ற மனிதர்கள் முதலில் கேட்கும் கேள்வி 'ஊருக்குத் திரும்பேல்லையா' என்பதாகத் தானிருக்கும். தமக்குத்தாமே கேட்டு விடைகாணமுடியாத கேள்வியை ஊரின் மனிதர் மனிதர்களைச் சந்திக்கும்போது கேட்பார்கள். கேட்கும்போது விழிகளில் தவிப்பிருக்கும். கேள்விகளில் உயிர்ப்பிருக்காது. விடைசொல்ல வேண்டியவரோ சிறிது தாமதத்தின் பின் அதே கேள்வியை திருப்பிக் கேட்டுவிட்டு அதேதாமதத்துடன் விலகிச் செல்வார்கள் பெயர்வின் மனிதர்களாக......

கேள்விகளோடேயே விலகிச் செல்வார்கள்
விடைதெரியாத கேள்விகள்
கேள்விகளோடையே அலைந்து திரிவார்கள்
விடைதெரியாத அலைச்சல்கள்
ஊரின் நினைவைச் சுமந்து சுமந்து உழல்வார்கள்
ஊரின் நினைவே இவர்களுக்கு பெரும்பாரமாகிவிடும்

ஊரின் நினைவே பெரும் பாரமாகிவிட பாரத்தை
எங்கே எப்படி இறக்கி வைக்கலாம்? கேள்விகள்
கேட்பதால் இறக்கி வைக்க முடியுமா? இல்லை.
ஊருக்குத் திரும்பிப் போய் ஊரின் காத்து வெளியில்
உலவி உலவி மனசைக் கரைத்துத்தான் இறக்கி வைக்கலாம்.

இதற்காகத்தான், ஊரைப்பற்றி உழல்கின்ற மனச்சுமையை இறக்கி வைக்கத்தான் ஊருக்குத் திரும்பினார் பெரியண்ணன் அண்ணியையும் கூட்டிக்கொண்டு, பன்னிரெண்டு வருடகால இடம்பெயர்ந்த சீவியத்துக்குப் பிறகு.

இவர்கள் ஊருக்குத் திரும்ப வெளிக்கிட்ட நாள் ஒரு பௌர்ணமி நாள். நிறைமதி நாள். அப்போது நானும் கொழும்புக்குப் போயிருந்தேன். அவர்களை வழியனுப்பி வைக்கப்போனது போல. நான் திருகோணமலைக்குத் திரும்பி விட்டேன். அண்ணனும் அண்ணியும் ஊருக்குத் திரும்பினார்கள்.

ஊரிலே காலடி வைத்ததும்

பன்னிரெண்டு வருடகாலப் பெயர்வும் உலைவும். உலைந்துதிரிகின்ற மனிதர்கள் முதலில் கேட்கும் கேள்வி 'ஊருக்குத் திரும்பேல்லையா' என்பதாகத்தானிருக்கும். தமக்குத்தாமே கேட்டு விடைகாணமுடியாத கேள்வியை ஊரின் மனிதர் மனிதர்களைச் சந்திக்கும்போது கேட்பார்கள். கேட்கும்போது விழிகளில் தவிப்பிருக்கும். கேள்விகளில் உயிர்ப்பிருக்காது. விடைசொல்ல வேண்டியவரோ சிறிது தாமதத்தின் பின் அதே கேள்வியை திருப்பிக் கேட்டுவிட்டு அதேதாமதத்துடன் விலகிச் செல்வார்கள் பெயர்வின் மனிதர்களாக......



சு.வில்வரெத்தினம்

அண்ணனுக்கு உச்சி குளிர்ந்தது. ஊர்க்காத்து வந்து உச்சி மோந்து வியர்வையை ஒத்தடமிட்டு எடுத்துச் சென்றது.

சங்காத்தாகேணி வெளியின் ஒழுங்கை முகப்பில் அண்ணனை வரவேற்பதற்காகக் காத்துநின்றது அண்ணன் தன் கைப்பட நட்டு தண்ணி ஊத்தி வளர்த்த அரசமரம். பன்னிரெண்டு வருடகாலப் பெயர்வுக்கு முன்னர் அய்யா இறந்து முப்பத்தியோராம் நாள் நட்டநினைவு விருட்சம். அப்போது அது ஓர் இளங்கன்று, பின்னர் விருட்சம்.இன்றோ பெருவிருட்சம். நாள்தோறும் போகவும் வரவும் அதன் வளர்ச்சியைக் கண்டு வந்திருந்தால் அண்ணனுக்கு ஒரு பிரமிப்பு ஏற்பட்டிருக்காது. ஆனால் நீண்டகாலப் பெயர்விற்குப் பின்னால் கண்ணுறும் போதில் 'நெடு நெடு' வென்று வளர்ந்து நின்றது. அண்ணனுக்கு மனவெளி விருட்சமாய் மாறிநின்றது.

மரங்களை நட்டு வளர்த்துப் பாருங்கள்
நாள்தோறும் தண்ணி ஊத்தி வாருங்கள்
நாளொரு பொழுதேனும் நன்கு அவதானியுங்கள்
மண்ணின் அடியில் அதன் வேரோட்ட இயக்கங்களை
மனசுள் கற்பனை பண்ணுங்கள்
திசைவெளியில் கைநீட்டும் கிளைகளைப் பாருங்கள்
இலைகளின் மேனிகளில் தனில்
காற்றின் கை வருடல்களை கவனியுங்கள்
மரங்கள் உங்களுடன் மனிசரைவிட நேசமாய்
பேசுகின்றமை உங்களுக்குக் கேட்கும்.
வேரடி மண்ணின் எரியும் பிரச்சினைகளை
'திரு திரு'வென்று பேசும்
காற்று வெளியில் கலந்திருக்கும் முந்தையோரின் மூச்சுக்களிலிருந்து முகர்ந்தெடுத்து
காலாதி காலத்துக் கதைகளைப் பேசும்.
கட்டவிழாத ரகசியங்களை 'சரசர'வென்று
இலைகளில் உரசி மொழிபெயர்த்துரைக்கும்.
பேசிப்பேசி மனசின் நோக்காடுகளை எல்லாம்
கரைத்து எங்களின் மனசையே
மௌனவெளி விருட்சங்களாக்கிவிடும்.
மண்ணின் நோக்காடுகளையும்
வேர்கள் மூலமறிந்து
திசைகளின் செவிகளில்
பேசுபவை மரங்கள்தான்.


கேட்டிருக்கிறீர்களா மரங்கள் பேசுவதை?
அண்ணனுக்கு மரஞ்செடி கொடிகள் என்றால்
நல்ல விருப்பம்: மரங்கள் நாட்டுவதென்றால் விருப்பம்
இப்பொழுது அவர் நிற்பதும் -இளங்கன்றாக அன்று நட்டு
விட்டுப்போன அரச மரத்தின் முன்தான்.
அந்த அரசுதான் அவருடன் பேசிக்கொண்டேயிருக்கிறது
அண்ணன் கேட்டுக் கொண்டிருந்தார்.

தண்ணீரில்லாமல் தான் வாடிய கதையைச் சொன்னது
வாட்டதிற்குள்ளும் உயிரைப் பிடித்துக்கொண்டு
வளர்ந்த கதையைச் சொன்னது
காற்றுவெளி மனிதக் குரல்களை இழந்துபோனமை
குறித்துத் துக்கித்தது
நிழலுக்கொதுங்கவும் ஒரு மனுமாஞ்சாதி
வரவில்லையென்று வருந்தியது.
தந்தையாரின் தாயாரின், தம்பியாரின் எனத்தொடர்ந்து
நிகழ்ந்த மரணங்கள் பற்றிய ஞாபகங்களைப் பரிமாறியது.
தாயாரின் நினைவிற்காக நட்ட வேம்புகளுடன் தான் கொண்டிருந்த காதலைப் பற்றிச் சொன்னது.
தென்னைகள் வெட்டப் பட்டமைபற்றிச் சொன்னது.

பனந்தோப்புகளும் படையினரால் அழிக்கப்படுவது
பற்றிப் பிரலாபித்தது.
பனங்கூடல்களுக்குள்ளால் பதுங்கிப் பதுங்கிவந்த
மைந்தனைப் பற்றிச் சொன்னது.
பிறகு பலநாட்களாக அவன் வராமலே போய்விட்டமைபற்றிச் சொல்லி,
'என்ன நடந்தது உன் இளவயதுப் புதல்வனுக்கு'
என்று கேட்டது. ஏதும் தெரியாதது போலவும்
கிளை தாழ்த்தி கீழ்க்குரலில் துக்கம் விசாரிப்பது போலவும்.
அண்ணன் திடீரென்று உணர்வு உந்துதலுக்கு ஆளானார்.
அழுதார்: வாய்விட்டழுதார்:
கைகளுக்குள் தலையைப் புதைத்தபடி அழுதார்.
சங்காத்தாகேணி வெளியைத் தழுவி எழுந்தவொரு
தந்தையின் அழுகுரலுக்கு ஆற்றாமல்
அரசு அந்தரித்துப் போனது:
கிளைதாழ்ந்து பேசாதிருந்தது: இலைகள் மௌனித்திருந்தன.
யாருக்கு இந்த மௌனாஞ்சலி?
யாருக்கு என்ன நேர்ந்தாலும் ஊருக்காத்து அதைத் தேத்திவிடும்.
ஆலோ அரசோ வேம்போ தம் வேரடியில் வந்தமர்ந்த
எவரது துக்கத்தையும்
ஆற்றாமல் விட்டதுமில்லை.
அரசுநீரின் ஊற்றில் தோய்ந்து வருமாப்போன்ற
காற்றை எடுத்து அண்ணனின் துயரங்களின்
இடையே விரல்விட்டு நீவியது.
அண்ணன் சற்று ஆசுவாசம் கொண்டார்: ஆயினும்
தேறவில்லை: இன்னும் மீதமிருந்தது துயரம்:
கடலோரத்தில் புளியைமரத்தருகேயொரு
புதைகுழியுள் விதைக்கப் பட்டிருந்த
மாவீரமைந்தன் மேல்
விழுந்தழுவதற்காக

வீட்டுக்குப் போனார்கள். அண்ணனும் அண்ணியும் வந்திருப்பது அயலட்டத்திற்குத் தெரியவந்தது. தங்களின் ஈட்டுக்கும் பாட்டுக்கும் ஈடுகொடுத்து தூக்கி நிறுத்த வல்லவர் வந்து விட்டார். இனிஎல்லாருமே ஊருக்குத் தைரியமாய்த் திரும்பி வந்துவிடுவார்கள். என்று அயலட்டத்தினருக்கும் உறவினர்க்கும் நல்ல சந்தோசம். அயலட்டமெல்லாம் வீட்டில் கூடிவிட்டது. அவர்களோடு ஒரு சிறுவனும் வந்திருந்தான். எந்த நேரமும் அழகொழுகச் சிரித்தபடியிருந்தான். அவனைக் கண்டதும்அண்ணனுக்குத் தனது பிள்ளையில் சிறு பருவகாலம் நினைவிற்கு வந்தது. அந்த நினைவுகளை அப்படியே பொதிந்து வைத்திருக்கக் கூடிய பையனின் பசைப்பிடிப்பான முகக்களையில் தனது பேரனான மூத்தமகனின் மைந்தனையும் சேர்த்தே கண்டார். "பேராவாடா" என்று கூப்பிட்டுத் தழுவிக் கொஞ்சினார். எல்லோரிடமும் சுகம் விசாரித்துவிட்டு 'வளவு வாய்க்காலெல்லாம் துப்புரவாக்க வேண்டும்' என்று சொல்லி வேலைக்கு ஆட்களை ஒழுங்கு பண்ணினார். பிறகு "பேரன் வாறி யாடா குறிகட்டுவான் போயிட்டு வருவம்" என்று சொல்லி சைக்கிளை எடுத்தபடி கேட்டார். பையனும் ஓமென்று தலையாட்டி னான். பேரனை முன்னுக்கு ஏத்தினார். போகும் பொழுது ஒரு பையில் கொஞ்சம் பூக்களும் புடுங்கிப் போட்டுக் கொண்டார். சொவ்விரத்தம் பூக்கள். சங்கத்தாகேணி வெளி தாண் டிச் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார்கள் தாத்தாவும் பேரனும்.

(அடுத்த வாரம் முடியும்)




செய்தி - வடக்கு கிழக்கு இணைப்பு தொடர்பாக சர்வசன வாக்கெடுப்பினை நடத்த சந்திரிகா முயற்சி.

மயிலர்:- முதல்லை சந்திரிகா தொடர்ந்தும் சனாதிபதியாக இருக்கவேண்டுமா என்பது பற்றி ஒரு சர்வசன வாக்கெடுப்பினை நடத்தினா நல்லது பாருங்கோ... அண்மைக் காலத் தேர்தல்களிலை எல்லாம் அம்மணீன்ரை கூட்டு முன்னணி வாங்கின அடியைப்பார்த்தா அவவின்ரை செல்வாக்கு எந்த லட்சனத்திலை இருக்கென்று நல்லாத் தெரியுது...... இதுக்குள்ள வடக்கு கிழக்கு இணைப்புக்கு சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்போறாவாம்.... சொல்வாக்கு மாறி செல்வாக்கற்ற நிலையில் வாக்கெடுப்பு நடத்தப் போவதாகக் கூறுவது வாக்கு மாறாட்டக் கதைதான் பாருங்கோ...

செய்தி- நள்ளிரவில் தவறான நோக்கோடு வீட்டினுள் புகுந்த ஈ.பி.டி.பி உறுப்பினர் மீது பொதுமக்கள் தாக்குதல்....

மயிலர்:- மக்கள் சக்தி மகத்தான சக்திபாருங்கோ... இதை இனியெண்டாலும் உந்தக் கும்பலைச் சேர்ந்தவை புரிஞ்சு கொண்டா நல்லது... அதுசரி ஆற்றையேன் வீட்டுக்குள்ள நள்ளிரவிலை இவருக்கு என்ன வேலை பாருங்கோ.... நெடுந்தீவிலை வாங்கினதோடையே திருந்தியிருக்கவேணும்... இன்னும் வாங்கியே தீருவன் என கங்கணம் கட்டி நின்றால் இப்படித்தான்..... கூடாத கூட்டம் கூடி ஆடாத ஆட்டம் ஆடினா வாங்காத அடியெல்லாம் வாங்கியே தீரவேணும்....

செய்தி- தேர்தல் நீதி ஆணைக் குழுக்களுக்கான நியமனம் அரசாங்கம் சிபார்சு செய்தவர்கள் மீது நம்பிக்கை இல்லை என்கிறார் சந்திரிகா.

மயிலர்:- அரசாங்கம் சிபார்சு செய்தவை மீது அம்மணிக்கு நம்பிக்கை இல்லை அம்மணி மீது அரசுக்கும், மக்களுக்கும் நம்பிக்கை இல்லை..... சிறிலங்காவின் நிலைமை இது தான் பாருங்கோ... ஆட்சி ஐயாகையிலை அதிகாரம் அம்மா கையிலை... மக்கள் நடுத்தெருவிலை... நாடு அதால பாதாளத்திலை.....

செய்தி- பிரிட்டிஷ் சிங்கள ஊடகவியலாளர் சமாதானத்தைக் குழப்பும் முயற்சியில்.....


மயிலர்:- குழம்பின குட்டையிலை மீன் பிடிக்கிற கும்பல் எல்லா இடத்திலையும் இருக்குபாருங்கோ... இவை ஊடகவியலாளர்களில்லை... ஊடுருவல் காரர்கள் பாருங்கோ... ஊரை எரிச்சு கூதல் காயிற கூட்டம் சமாதானத்தை ஆதரிக்குமே.



# இளையநாதம்

## சிறுவர் கதை

## கேடுநினைப்பான்கெடுவான்



ஒரு காட்டில் சிங்கராஜா செம்மையாக அரசாட்சி செய்து வந்தார். அவர் ஆட்சியில் காட்டு மிருகங்கள் மிகவும் சந்தோசத்துடன் வாழ்க்கை நடத்தின. இந்த அமைதி சூழல் காட்டில் நிலவ சிங்கராஜா வின் முதலமைச்சர் நரியார் தான் காரணம். ஒரு காலத்தில் அந்த காட்டு விலங்குகளின் சிம்ம சொப்ப னமாக விளங்கிய சிங்கராஜாவை சாதுவாக்கி அந்நாட்டு திறமையான அரசனாக்கிய பெருமை அவரையே சாரும். இதனால் நரியார் மீது அந்த அரச சபையில் உள்ள அனை த்து மிரு கங்களும் நன்மதிப்பும், அன்பும், வைத்திருந் தன. ஆனால் நரி ஒரு பந்தாவும் இல்லாமல் எளிமையான வாழ்க் கையே நடத்தியது.

இப்படியான நரிமீது பொறாமை கொண்ட சில மிருகங்களும் இருக் கத்தான் செய்தது. அவை தான் காகம், கரடி ஆகும். இவையிரண் டிற்கும் நரியைக் கண்டாலே பிடிக் காது. இவை இரண்டும் ஒரு நாள் ஒன்று சேர்ந்து நரியை சிங்கத்திடம் இருந்து பிரிக்க திட்டம் தீட்டின.

காகம் "இவர் நரியார் இருக் கிறதால எங்களுக்கு நல்ல உணவு கிடைப்பதும் இல்லை, இதற்கு ஒரு வழி பண்ண வேணும்" என்று கூறியது.

"அதுதான் எனக்கும் கவலையாய் இருக்குது. சிங்கராஜாவும் நரிமேல் சரியான மதிப்பும், நம்பிக் கையும் வைச்சு இருக்கிறார். முதலில் சிங்க ராஜாவிடம் இருந்து நரியாரை பிரிக்க வேணும்" என்று கரடி கூறி யது. அதற்கு காகம் "அண்ணே! நானும் அதையேதான் யோசிக் கிறேன்." என்று கூறியது. மீண்டும் கரடி ஏதோ சொல்ல வாயெடுக்க! "ஐய்... நல்ல ஐடியா என்று விட்டு கரடியின் காதில் காகம் ஏதோ கூறியது.

"நீ சரியான ஆள்தான். நல்லாத் தான் ஐடியா போடுகிறாய்" என்று கரடி தட்டிக் கொடுத்தது. அடுத்த நாள் அரசவையில் சிங்கராஜா வீற்றி ருந்தார். அரச பிரதானிகள் இருந் தனர். அப்பொழுது அவைக்கு வந்த காகம் "அரசே வணக்கம்" என்று சிரம் தாழ்த்தி விட்டு "உங்களிடம் ஒரு இரக சியம் சொல்ல வேண் டும்" என்று கூறியது. "என்ன இரகசியம்" என்று சிங்ராஜா வியப்புடன் நோக்கினார். "அது உங்களிடம் தனியாகத்தான் சொல்ல வேணும்" என்று காகம் கூறியது. சிங்கத்தை தனி ஒரு இடத்திற்கு அழைத்துச் சென்று அரசரிடம் அந்த விடயத்தை காகம் கூறியது. அப்பொழுது சிங்கராஜாவுக்கு கோபம் உச்சிக்கு ஏறியது. பொன் போல பழுத்திருந்த அவரது பிடரி மயிர் சிலிர்த்தது. "என்ன தைரியம்" என்று பல்லை நெரித்தவாறு அரச வைக்கு சென்றது. "முதல மைச்சரே! இங்கே வாரும். நீர் பெரிய திருகுதாளக்காரர் என்னைக் கொன்று விட்டு எனது ஆட்சியைப் பிடிக்கத் திட்டம் போடுகிறீர் உமது திட்டத்திற்கு உடந்தையாக கரடியாரையும் சேர்க்கப் பார்க்கிறீர். கரடியார் நல்லவர். அவரை குழப்பப் பார்க்கிறீர் என்று அடுக்கடுக்காக சிங்கராஜா பொரிந்து தள்ளினார். நரியாருக்கு ஒன்றும் விளங்கவில்லை. குழம் பிய நிலையில் எதிர்பாராமல் கிடைத்த திகைப்பினால் அவமா னத்துடன் தலை குனிந்தார். "இனி ஒரு நிமிடமும் நிற்காதீர். எங்காவது போய் விடும். இல்லாவிட்டால் கொன்று விடு வேன்" என்று விட்டு அரியணை யிலிருந்து எழுந்து சென்று விட்டார். நரியார் கண்களில் நீர் மல்க அரசவையை விட்டு வெளியேறினார். அவையில் மிருகங்களிடையே ஒரே சலசலப்பு "இது பொய், இது திட்டம் போட்டுச் செய்த சதி" "நரியார் நல்லவர்" என்று மிருகங்கள் கண் ணீர் வடிந்தன. ஆனால் தங்கள் திட்டம் நிறைவேறி விட்டது என்று மனதுக்குள் பூரிப்படைந்தன கரடி யும் காகமும்.

அடுத்த நாள் சிங்கராஜாவின் முதலமைச்சர்களாக கரடியும், காகமும் நியமிக்கப்பட்டனர். இப் பொழுது காட்டில் வரவர வன் முறை பெருகத் தொடங்கியது. காட்டில் கரடியும், காகமும் சேர்ந்து சிறிய மிருகங்களை துன்புறுத்தின. மிருகங்களுக்கு காகத்திலும், கரடி யிலும் கடுமையான கோபம் வலுக் கத் தொடங்கியது. இதற்கு இன் னும் வலுச்சேர்ப்பதாக பக்கத்துக் காட்டில் இருந்து ஒரு முரட்டுச் சிங்கம் வந்து அந்த காட்டில் உள்ள மிருகங்களை கொன்று தின்றது. துன்பம் தாங்க இயலாத மிருகங்கள் யாரிடம் முறையிடுவது என தெரியாமல் தவித்தன. காரணம் அந்த முரட்டுச் சிங்கத்து டன் கரடியும்,காகமும் இரகசிய கூட்டு ஒப்பந்தம் செய்து காட்டு விவகாரங்கள் சிங்கராஜாவுக்கு தெரி யாமல் இருட்டடிப்பு செய் தமை யேயாகும். இவையெல்லாம் தெரிந்து காட்டு மிருகங்கள் பொங்கி எழுந்தன. பெரிய ஆர்ப்பாட்ட ஊர்வலமாக அரச வைக்கு சென்றன. கரடியாலும், காகத்தாலும் கட்டுப்படுத்த இயலா மல் இரண்டும் காட்டின் எல்லை யான மலைக்காட்டுக்கு ஓடிவிட்டன. மிருகங்கள் நேரே அரசரைச் சந்தித்து எல்லாவற்றையும் கூறின. அப்பொழுதுதான் அரசருக்கு உண்மை விளங்கியது. "நரியில் குற்றமில்லை. காட்டில் இவ்வளவு குழப்பம் நடந்தது எனக்குத் தெரிய வில்லை. எல்லாம் இந்த கரடி யும், காகமும் செய்த வேலை தான். என்று சிங்கம் கொதித் தெழுந்தது. "நான் நரியார் மீது அவதூறு செய்து விட்டேன். நான் மன்னிப்புக் கேட்ப தாககூறி அவரை அழை த்து வாருங்கள்." என்று கண்ணீர் ததும்ப மிருகங்களை பார்த்து சிங்க ராஜா புலம்பினார். "அரசே நான் இங்கு இருக்கிறேன்." என்று நரியார் முன்னே வந்தார். நரியாரைக் கண்ட வுடன் சிங்கராஜாவுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை." அமைச்சரே என்னை மன்னித்து விடுங்கள்" என்று நரி யாரை ஆரத்தழுவினார். நரிக்கு பெரிய தர்மசங்கடமாகியது. ஆனால் நரியின் மனதில் கரடிமீதும் காகம் மீதும் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. "அரசே எல்லாம் கரடியி னாலும், காகத்தினாலும் தான் வந்தது. அவர்களையும் அவர்களோடு கூட்டு சேர்ந்தி ருக்கும்அந்த கொடிய சிங்கத் தையும் கொல்ல வேண்டும்" என தீர்க்கமாக கூறியது. "ஆமாம்" என்று சிங்கம் கண்கள் சிவக்க கூறிவிட்டு "எங்கே அந்த எழியவர்களை காணவில்லை,ஓடி ஒளிந்துள்ளார்கள் போலிருக்கிறது" என்று கர்ச்சித் தது.

"ஆமாம் அரசே அவர்கள் மூவரும் என்னையும், உங்களையும் கொன்று விட்டு இந்த காட்டின் ஆட்சியைப் பிடிக்கப் பார்க் கிறார்கள். இன்று மலைக்குகை யில் இருந்து கொண்டு இதனைப் பேசிக் கொண்டிருக்கும் போது நான் மறைவிலிருந்து கேட்டுக் கொண்டிருந்தேன். என்று நரியார் கூறினார். இதனை கேட்டவுடன் சிங்கத்துக்கும் மிருகங்களிற்கும் கோபம் இரட்டிப்பாகியது. நேரே மலைக்குகைக்குள் அனைத்து மிருகங்களும் சென்றன.அங்கு வாச லில் இருந்த பாறையைக் கொண்டு குகைவாசலை அடைத்தன. உள் ளே இருந்த காகம், கரடி, சிங்கம் முதலியன வெளியே வர வழி யின்றி உள்ளே அடைபட்டு செத் துப் போயின. மீண்டும் சிங்க ராஜா வின் அரசவையில் நரியார் முதல மைச்சர் ஆனார். காட்டில் பழைய எழில் மிளிர்ந்தது. காட்டு மிருகங்கள் மகிழ்ச்சி பிரவாகம் கொண்டன. எந்த வித குறையும் இன்றி நிம்மதியாய் வாழ்ந்தன.

"ஒருவனது எண்ணமே அவனது எதிர்காலத்தை தீர்மானிக்கும்"

செ.புகழவன்

## நகைச்சுவை

திருமண விருந்தொன்றிற்குச் சென்றிருந்தனர் இரு நண்பர்கள். அதில் ஒருவன் நன்றாகச் சாப்பிடுவான் சாப்பாட்டு ராமன் என்று கூடச் சொல்லலாம். வயிறு நிறையச் சாப்பிட்டு விட்டு மூச்சு விடக்கூட கஸ்ரப்பட்டுக் கொண்டிருந்தான். சாப்பாட்டு ராமனான நண்பனைப் பார்த்துப் பொறுத்துக்கொண்டு இருக்க முடியாத மற்றையவன் தன் நண்பனைப் பார்த்து சொன்னான் உன் வாய்க்குள் கையை விட்டு வாந்தி எடு என்று. அதற்கு சாப்பாட்டு ராமனான நண்பன் சொன்னானாம் வாய்க்குள் கையை விடக்கூடிய அளவு இடம் இருந்தால் நான் ஒரு வாழைப்பழத்தைச் சாப்பிட்டிருப்பேனே என, அறிவுரை சொன்னவனுக்கு எப்படி இருந்திருக்கும்.

துளசி, மல்லாவி.

## சுந்தரச் சிரிப்பு

ஒருவர்: உனக்கென்னப்பா எல்லா மகன்மாரும் வெளிநாட்டில

மற்றவர்: ஓமோம் ஒருத்தன் கனடாவில, ஒருத்தன் ஜேர்மனியில், ஒருத் தன் டென்மார்க்கில், கடைசி மகன் டுபாயில, நான் பாயில.

நன்றி -சிரித்திரன்

## வாரம் ஒரு குறள் அறிவோம்



எமக்கு வேண்டுவது எமது நாடு, எமது நாட்டை அடுத்தவன் அரசாள நினைக்கிறான் எனில், எம்மீது படை எடுக்கிறான் எனில், நாம் அதைப் பார்த்துக் கொண்டு இருக்கலாமா? அப்படிப் பார்த்துக் கொண்டு இருப்போமாயின் நாமெல்லோரும் பயந்தாங்கொள்ளிகள். பேடிகள். அப்படித் தானே. நாம் பயந்திருந்தால் பகைவன் எம்மீது பாய்வான் பலமில்லாதிருந்தால் பயப்பட நேரிடும் நோயாய் இருந் தால் பலமில்லாதிருக்க நேரிடும். பசியாயிருந்தால் நோயாளியாக இருக்க நேரிடும். ஆகவே பசியில்லாது இருக்கவேண்டும்- நோயி ல்லாது இருக்கவேண்டும்- பலத்தோடு இருக்க வேண்டும். இவை மூன்றும் பேணப்படுமானால் நமது நாடு நம்மிடமே இருக்கும். இதனையே செந்நாப் போதார் தம் குறளில் குறுக்கி வைத்துள்ளார். அதை நீங்களும் கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டாமா?

"உறு பசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு"

என்பதே அது.

## ரதனும் சுதனும்



ரதன்: விளக்கை ஊதும் போது அணைந்து போகிறது. ஆனால் அடுப்பை ஊதும் போது எரிகிறதே? அது எப்படி?

சுதன்: விளக்கை ஊதும் போது எமது வாயிலிருந்து வெளிவரும் காற்றில் காபனீரொட்சைட்டு கூடுதலாக இருப்பதாலும் எரியும் பரப்பு குறைவாக இருப்பதாலும் அது எரிவதற்கு உதவி புரிய முடியாமல் போய் விடுகிறது. ஆகவே விளக்கு அணைந்து போகிறது. ஆனால் விளக்கை விடக் கூடுதலான பரப்பைக் கொண்ட அடுப்பை நோக்கி ஊதும் போது நாம் ஊதுகின்ற காற்றுப் போகும் திசையில் ஓட்சிசன் கூடுதலாக வுள்ள அயல் காற்று விரைவாகச் செல்கிறது ஆகவே அடுப்பிலுள்ள நெருப்பு எரிவதற்கு அக் காற்று உதவுகிறது. எவ்வளவு விரைவாக நாம் ஊதுகின்றோமோ அவ்வளவு விரைவாகவும் வேகமாகவும் அடுப்பு எரிகிறது.

## குருவி





சின்னச்சின்னச் குருவி
சிறிய சிட்டுக்குருவி
பட்டுப்போன்ற மேனி
பளபளக்கும் மேனி
உயர உயர பறக்கும்
உச்சிக் கொப்பில் இருக்கும்
கூட்டத்தோடு கூட்டமாய்
தோட்டமெல்லாம் தத்தும்
குச்சி சேர்க்கும் குருவி
கூடு கட்டும் குருவி
வண்ண வண்ணக் குருவி
வானில்ப் பறக்கும் குருவி





அ.ரேணுகா
தரம்6 கிளி/அ.ம.வி

## சர்வதேச குறியீடுகள்

| | |
|---|---|
| 01.புறா | சமாதானம் |
| 02.சக்கரம் | வளர்ச்சியைக் குறிக்கும் |
| 03.தாமரை | பண்பாடு நாகரீகம் |
| 04.கறுப்புக்கொடி | துக்கம் |
| 05.எலும்பு நடுவில் மண்டையோடு | ஆபத்து |
| 06.சிவப்பு விளக்கு | மருத்துவமனை ஆபத்து/நிறுத்து |
| 07.கையில் தராசு ஏந்தி | நீதி |
| 08.அரைக்கம்பத்தில் கொடி | இரங்கல் |
| 09.தலைகீழாக கொடி | துன்பம் |
| 10.வெள்ளைக்கொடி | சமாதானம் |

ஞா.அணலரசன்

## உலகில் மிகப் பெரியவை

| | |
|---|---|
| 01) கண்டம் | ஆசியாக்கண்டம் |
| 02) சமுத்திரம் | பசுபிக் சமுத்திரம் |
| 03) தீவு | கிறீன்லாந்து |
| 04) மலை | இமயமலை |
| 05) சிகரம் | எவரெஸ்ட் |
| 06) மேட்டுநிலம் | தீபெத் மேட்டுநிலம் |
| 07) பாலைவனம் | சகாரா பாலைவனம் |
| 08) நதி | நைல் நதி, அமேசன் நதி |
| 09) ஆழி | மரியான ஆழி |
| 10) அரண்மனை | வத்திக்கான் |
| 11) வல்லரசு | அமெரிக்கா |
| 12) சுவர் | சீனப்பெருஞ்சுவர் |
| 13) சனத்தொகை கூடிய நாடு | சீனா |
| 14) பறவை | தீக்கோழி |
| 15) விலங்கினம் | நீலத்திமிங்கிலம் |

த.செங்கதிர்

தன்னடக்கம், தானாகப் பிறக்குமே ஒழிய, அதைக் கற்றுத் தர இயலாது. - புப்லிலியஸ் ஸைரஸ்

# தேங்காய் உற்பத்திக்கு பாரிய அச்சுறுத்தலாக விளங்கும்.... "மைற்" சிலந்தி சிற்றுண்ணிப் பூச்சி

**கந்தையா- தனிநாயகம்**
(தென்னை அபிவிருத்தி தொழில் நுட்ப அலுவலர், கிளிநொச்சி)

**1998ம் ஆண்டு அமெரிக்காவின் மெக்சிக்கோவில் இருந்து இந்தியாவூடாக இலங்கைக்கும் பரவியுள்ள "மைற்" என்னும் சிலந்தி சிற்றுண்ணிப் பூச்சி யானது தேங்காய்க் குரும்பைகளைத் தாக்கி சேதப்படுத்துவதோடு தென்னைச் செய்கையாளர்களுக்கு பாரிய அச்சுறுத்தலாகவும் விளங்குகின்றது.**

இரண்டு தசாப்தங்களாக நடைபெற்று முடிந்த யுத்தத்தின் போது 60,000க்கும் மேற்பட்ட மக்கள் மரணித்தும் பல ஆயிரக் கணக்கான மக்கள் காயப்பட்டும் இருப்பது போல 15-20 இலட்சம் தென்னைகள், பொது மக்கள், போராளிகளுக்கு பாதுகாப்பு வழங்கிய வேளையிலும் தன்னிச்சையாக இராணுவத் தேவைக்காக வெட்டப்பட்டும், அழிவுக்குள்ளாகியதுடன் பல ஆயிரக்கணக்கான மரங்கள் காயமுற்று வலுவிழந்த நிலையிலும் காணப்படுகின்றன.

பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல 1998ம் ஆண்டு அமெரிக்காவின் மெக்சிக்கோவில் இருந்து இந்தியாவூடாக இலங்கைக்கும் பரவியுள்ள "மைற்" என்னும் சிலந்தி சிற்றுண்ணிப் பூச்சியானது தேங்காய்க் குரும்பை களைத் தாக்கி சேதப்படுத்துவதோடு தென்னைச் செய்கையாளர்களுக்கு பாரிய அச்சுறுத்தலாகவும் விளங்குகின்றது.

இப் பூச்சியின் தாக்கம் வட கிழக்குமாகாணத்திலும் பெரிய சேதத்தை உண்டு பண்ணிக் கொண்டு வருவதால் தென்னையை நம்பிச் செய்யும் சகல தொழில் துறையிலும் பெரிய வீழ்ச்சி காணப்பட்டுக் கொண்டு வருகிறது.

**மைற் பூச்சியின் அமைப்பும் பரம்பலும்**

இப் பூச்சியானது சிலந்தியின் அமைப்பைக் கொண்டது. வெற்றுக் கண்களால் இலகுவாக பார்க்க முடியாத மிக மிகச் சிறிய பூச்சியாகும். இதன் நீளம் இலத்திரன் நுணுக்கு காட்டியினூடாக எடுக்கப்பட்ட அளவின்படி 150- 200 மைக்ரன் மீற்றர் நீளமுடையது. 30-40 மைக்ரன் மீற்றர் அகலம் உடையது. இளம் பூச்சிகள் குத்தியுறுஞ்சும் வாயுறுப்பினால் 1-$1\frac{1}{2}$ மாத வயதுடைய குரும்பைகளின் முகிழுக்குள் மறைந்திருக்கும் மிருதுவான பகுதியில் உணவு காண்கின்றது.

ஒரு மாதத்தில் 3 தடவை இனம் பெருக்கும் தன்மையுடையது. பூச்சிகள் பரம்புவதற்குரிய நேரம் காலை 10 மணியிலிருந்து 2மணி வரையுள்ள காலப்பகுதியாகும் மிகச் சிறிய பூச்சியாதலால் தூசியைப் போல் காற்றில் மிதந்து செல்லும் காலத்துக்குக் காலம் இடம் பெயரும் பறவைகள் தென்னையில் தங்கிச் செல்லும் வேளை அவற்றின் கால்கள் மூலமும் குரும்பையின் கருக்கட்டலுக்கு உதவிபுரியும் தேன்பூச்சிகளின் கால்களின் மூலமும் தொற்றிக் கொண்டு வேறுமரங்களுக்குப் பரவக்கூடியது. வேகமாகச் செல்லும் முகில் கூட்டங்களும் பாதிக்கப்பட்ட இடங்களில் இருந்து பூச்சிகளை எடுத்துச் செல்லக் கூடிய வாய்ப்பு உண்டு

**தேங்காய்க் குரும்பையில் ஏற்படுத்தும் தாக்கம்**

மைற் பூச்சியானது சிறிய குரும்பைகளின் முகிழ் ஊடாகச் சென்று மிருதுவான பகுதியில் சாற்றை உறுஞ்சிக் குடிக்கின்றது. மேலும் குரும்பையானது வளர்ச்சியடையும் போது தாக்கப் பட்ட இடம் முதலில் நீளமான முக்கோணம் போல் வெளிறிய தாகக் காணப்படும். இந்தப் பகுதியில் சூரிய ஒளிபடும் போது மெல்லிய மண்ணிறமாகக் காணப்படும் தொடர்ந்து கரும் கபில நிறமாகக் காணப்படும்.

பூச்சியின் தாக்கமானது குரும்பையும்,முகிழும் சந்திக்கும் இடத்தைத் தொட்டால் குரும்பையானது காம்புடனான தொடர்பைத் துண்டித்துக் கொண்டு விழுந்துவிடும். அப்படியில்லாவிட்டால் பெரியளவில் விருத்தியடையாது சிறிதாகக் காணப்படும். தாக்கப் பட்ட குரும்பை 3-4 மாதத்தில் விழுந்துவிடும். அனேகமாக செவ்விளநீர் மரங்களின் குரும்பைகளே பாரிய தாக்கத்துக்கு உள்ளாவதை அவதானிக்கலாம்.

பூச்சியின் கூடிய தாக்கத்தை, மப்பு மந்தாரமான காலநிலை கூடுதலாக ஊக்கிவிக்கும்.



**மைற் பூச்சியின் தாக்கத்தினால் ஏற்படும் விளைவு**

1 தேங்காய் சிறிதாகக் காணப் படும், சில வேளைகளில் விருத்தியடையாது காணப் படும். குரும்பையின் சாறு உறுஞ்சப் பட்டபாகம் இறுகிக் கடினத் தன்மை அடைவதால் உள்ளே இருக்கும் தேங்காய் விரிவடையாது ஒழுங்கற்ற வடிவுடன் காணப் படும். உடைக்கும் போது ஒழுங்கற்ற முறையில் உடையும் உடைப்பதற்கு சிரமமாகவும் காணப்படும்.

கோயில்களில் அல்லது சுப நிகழ்வின் போது சரி பாதியாக உடையவேண்டும் என எதிர்பார்த்து உடைக்கும் போது எதிர்பார்ப்பு வீணாகலாம்.

வேகமாக தேங்காய் உரிப்பில் ஈடுபடும் தொழிலாளர்கள் பூச்சிதாக்கிய தேங்காய்களை உரிப்பதற்கு மிகவும் சிரமப்படுவார்கள்.

கொப்பறா எண்ணை எதிர்பார்த்த அளவில் கிடைக்கமாட்டாது.

கூடுதலாக பாதிக்கப்பட்ட தேங்காய் முளைக்கப் போடுவதற்கு உகந்தது அல்ல.

கூடிய சந்தை மானத்தைப் பெறுவதற்கு புறதோலில் காணப் படும் சொர சொரப்புத் தன்மை தடையாக இருக்கும். இதனால் உற்பத்தியாளன் நட்டத்தை எதிர் நோக்க வேண்டியிருக்கும்.

பாதிக்கப்பட்ட மரத்தில் காணப்படும் தேங்காய் குலைகள் வெறுப்பைஏற்படுத்தும் தோற்றத்தில் காணப்படும்.

தரமான தும்பைப் பெற முடியாது. இதனால் தும்புத் தொழிற்துறை பாதிப்படையும்.

ஏரியாமைற் பூச்சியினால் ஏற்படும் தாக்கம் மிகவும் கொடூரமானது முழுக்குரும்பைகளும் கருகிவிடும். அல்லது விழுந்து விடும்.

கொலொமோறஸ் மைற் பூச்சியின் தாக்கம் ஓரளவு பாதிப்பை ஏற்படுத்துவதால் பொருளாதார சேதம் குறைவு.

அதேபோல் "டொலி சோரெரன்சன்ஸ்" மைற் பூச்சியின் தாக்கமும் ஓரளவே பொருளாதார சேதத்தை ஏற்படுத்தும்.



தேங்காயில் சேதம் உண்டாக்கும் "மைற்" சிலந்திச் சிற்றுண்ணி

**தாக்கத்தை உண்டாக்கும் பூச்சியைக் கட்டுப்படுத்தல்**

1 சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் இயற்கையாக காணப்படும் பொருட்களான உள்ளிப் பூடு வேப்பெண்ணை சவர்க்காரம் கலந்த கலவை. 1லீற்றர் நீரில் கலந்து தெளிக்கலாம்

2 உள்ளிப் பூடு (அரைத்த 50 கிராம்) வேப்பிலை 5-10 காம்பில் உள்ள இலை. இவற்றை அரைத்து 1 லீற்றர் நீரில் கலந்து பாதிக்கப்பட்ட குரும்பைகளுக்கு விசிறலாம்

3 பொதுவாக சகல பிரதேசங்களிலும் இது காணப் படுவதால் இரசாயன நாசினி தெளித்தல் இன்றியமையாத ஒன்றாக இருக்கிறது.

எனவே நீரில் கரையக் கூடிய சல்பர் 5-10 கிராம் ( 1 மேசைக் கரண்டி) அளவு எடுத்து 1-2 லீற்றர் நீரில் கலந்து கைத்தெளிகருவி அல்லது மூடிப்பாகத்தில் சிறிய துளைகள் இடப்பட்ட பிளாஸ்ரிக் போத்தலில் இட்டு பாதிக்கப்பட்ட குரும்பைகள், விரியாத பாளைகள் எல்லா இடமும் தெளிக்க வேண்டும். 2-3 மாத இடைவெளியில் தொடர்ந்து தெளிக்க வேண்டும்.

மேலும் சல்பர். தூளை இரசாயன நாசினிகளுடன் கலந்து தெளிக்கலாம். இப்படித் தெளிக்கின்ற போது தேங்காய் என கருதப் படுகின்றவற்றை பிடுங்கிவிட்டு தெளிக்கலாம். இரசாயன நாசினிகளின் தொழிற்படுதிறன் 15 நாட்கள் என்பதாலும் சிறிய குரும்பைகளில் 1-$1\frac{1}{2}$ மாத வயதுடைய வற்றில் இளநீர், வழுக்கல் பிடிக்காதபடியாலும் மேலும் தேங்காய் 10 மாதங்களின் பின்பே பிடுங்குவதாலும் எமது பிரதேசம் வரண்டபிரதேசமாக இருப்பதால் குரும் பைகளில் சூரிய ஒளிபடும் போது அது சிதைவடையக் கூடிய தன்மையும் இருப்பதால் இரசாயன நாசினி விசிறுவதால் அதிகம் பாதிப்பு பயன்படுத்து வோருக்கு ஏற்படும் என்பது தவறானதாகும்.

மரக்கறி வகைகள், அறுவடைக்கு தயரான நெல்வயல், களுக்கு மருந்து தெளித்த சில நாளில் பாவனைக்கு கொண்டு வரப்படுகின்ற போது இது பரவாயில்லை.

**பூச்சித்தாக்கத்தைக் கட்டுப்படுத் துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை**

1 சில மாவட்டங்களில் தென்னைச் செய்கையாளர்களே தாமாக அறிந்த கட்டுப்பாட்டு முறைகளை செய்கிறார்கள்.

உண்மை என்ன வென்றால். இது ஒரு தேசிய மட்டப் பிரச்சினை. அரசாங்கமே இதைப் பாரிய வேலைத்திட்டத்துடன் செய்திருக்க வேண்டும். உதாரணமாக டெங்கு நுளம்புக்கு எடுக்கப்படுகின்ற நடவடிக்கை போல் இதற்கு செய்திருந்தால்இன்று தேவையைப் பூர்த்தி செய்ய வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டும் என்ற செய்தி வந்திருக்காது.

தொடர்ச்சியாக மருந்து தெளிப்பு முறைகளை சில மாதங்களுக்குச் செய்வதன் மூலம் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வர முடியும்.

விசேடமாக தயாரிக்கப்பட்ட தெளிகருவிகள் இடத்திற்கு இடம் கொண்டு செல்லக்கூடிய வாகன வசதிகள் என்பன அவசியமாகும்.

இந்த விடயத்தில் உதவி வழங்கும் நிறுவனங்கள் ஏனைய அமைப்புக்கள் உட்பட சனசமூக நிலையங்கள். ஏனைய அமைப்புக்கள் உட்பட்ட எல்லோரதும் பங்களிப்புடனான செயற்பாடு பாதிப்பில் இருந்து பாதுகாக்க உதவும்.

மேலும் அழிவுக்குப்பின் ஆக்கம் என்பதற்கு அமைய வடமாகாணத்துக்கு என தென்னை ஆராய்ச்சி நிலையத்தின் பிராந்திய ஆராய்ச்சி நிலையம் ஒன்று செயற்பட வைப்பதன் மூலம் தொடர்ந்து தென்னையை தாக்கும் புதிய நோய்கள் அதைக் கட்டுப்படுத்துவதற்கான முறைகளையும் செய்யக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு.

ஏனெனில் 2000ம் ஆண்டிலிருந்து ஓலையைத் தாக்கும் leat Rot அல்லது "ஈக்கிள் எரிவு" என்னும் நோயும் மிக வேகமாக பரவிவருகின்றது. தேங்காய் நாளாந்த பாவனையில் உள்ளதால் அதன் தாக்கம் மிக விரைவாக உணரப்படுகின்றது. ஆனால் ஈக்கின் எரிவு நோயானது தென்னையின் வடிவை அலங்கோலமாக்கிக் கொண்டு வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இந் நோயும் எதிர்காலத்தில் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய ஏது நிலை உண்டு. இது "பனை ஓலை, ஈச்சை ஓலை, அலங்காரபாம்" மரங்களை யும் தாக்குவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

இது முதன் முதலாக யாழ்ப்பாணத்திலேயே இனம் காணப்பட்டு தென்னை ஆராய்ச்சி நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். ☆

வாடும் மலர், இன்பம் நீடித்து நிலைக்கும் சுகந்தம், ஞாபகம். -கத்தெரின் தெப்பு:ப்லே

# இனி புதிதாய்ப் பிறப்போம்

**கடந்தவாரம்** திருகோணமலையிலிருந்து வன்னிக்கு வந்திருந்த நண்பர்கள் திரும்பும் போது இங்கே கிடைக்கும். அவர்களுக்கு விருப்பமான பொருட்களைக் கொள்வனவு செய்வதில் ஆர்வமாயிருந்தார்கள். நானும் அவர்களுடன் போயிருந்தேன். மாம்பழங்கள், வாழைப்பழம், நெய், தேன், தேங்காய், அரிசி என்று பட்டியல் நீண்டு கொண்டே போயிற்று.

தங்களுடைய பயணத்தின்போது இங்கேயிருந்து எவ்வளவைக் கொண்டு போக வசதியோ அந்தளவுக்கு வாங்கினார்கள். அவர்கள் தனி வாகனத்தில் -வானில்- வந்திருந்தது இதற்கு ஓரளவு வசதியாயிருந்தது. இங்கே வாங்கும் பொருட்களில் சில அங்கே கிடைப்பது குறைவென்றும், அப்படிக் கிடைத்தாலும் அவை தரமற்றிருப்பதுடன் விலை கூடுதல் என்றும் சொன்னார்கள். சந்தைத் தொகுதியிலிருந்து அப்படியே கடைப்பகுதிக்கு வந்தோம். அங்கேயும் வாங்கக்கூடிய பொருட்கள் ஏதாயினும் இருக்கிறதா என்று பார்த்தார்கள். அவர்களின் தேடுதல் அநேகமாக உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் தான். எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு வந்தபோது சில பொருட்களில் அவர்களின் கவனம் வலுவாகக் குவிந்தது.

சேரன் நல்லெண்ணெய்
சேரன் தேங்காயெண்ணெய்
சேரன் அரிசிமா
சேரன் குரக்கன் மா
சேரன் ஒடியல்மா
சேரன் ஐசிங் சீனி
சேரன் பப்படம்
ஆனையிறவு அயடின் உப்பு

என்று வன்னியின் உற்பத்திப் பொருட்கள் புதிய பொதியமைப்பில் கவரும் விதமாகவும், தரமாகவும் இருந்தன. நண்பர்களுக்கு பெரிய ஆச்சரியம். எல்லாவற்றையும் வாங்கினார்கள். வாங்கும்போது மகிழ்ச்சியும் ஒருவகைப் பெருமிதமும் அவர்களிலிருந்தது. இவற்றைக் கொண்டு போய் அங்கு நண்பர்களுக்கும் அயலவர்களுக்கும் அறிமுகப்படுத்துவார்கள் மகிழ்வாக. இந்தப் பொருட்களெல்லாம் திருகோணமலையில் சாதாரணமாக கிடைத்திருக்க வேண்டும். ஆனால் தொடர்ந்த யுத்தம் எல்லாவற்றையும் அழித்துவிட்டது. இந்தப் பொருட்கள் கிடைக்கும் அல்லது விளையும் கிராமங்களை எல்லாம் அது முற்றாகத்தின்று தீர்த்துவிட்டது. அங்கெல்லாம் வாழ்ந்த மனிதர்கள் திக்கொன்று திசைக் கொன்றென்று சிதறி அலைகிறார்கள்.

வன்னி எல்லாவற்றையும் பாதுகாக்கும், விளைவிக்கும் ஒரு களமாக இருப்பதால் இவையெல்லாம் கிடைக்கின்றன. அதுவும் தரத்துடன் அதேவேளையில் பொதியமைப்பிலும் நுகர்வோரைக் கவரும் சிறப்போடு 'ஏற்றுமதித்தரம்' என்று சொல்வார்களே அப்படியாக இருக்கின்றன இவையெல்லாம். அவை சாத்தியமானது யுத்தத்தின் களத்தில், பொருளாதாரத் தடைக்குள்ளிருந்து.

உண்மைதான் இப்போது நீங்கள் வன்னியின் எல்லாப் பகுதிகளிலும் இவ்வாறு எல்லாப் பொருட்களையும் காணலாம். வாங்கலாம். எந்த விளம்பரமும் இல்லாமல் சந்தைக்கு வந்திருக்கும் இவை பெற்றிருக்கும் மதிப்பும் நுகர்கவர்ச்சியும் ஒரு வளர்ச்சியை நோக்கிப் பாய்கிறது என்கிறார்கள் வணிகர்கள்.

பொருட்களை வாங்கிய நண்பர்கள் வன்னியில் நிகழ்ந்து கொண்டிருக்கும் இந்த வளர்ச்சி குறித்து தங்களின் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். இப்பொழுது நாடுமுழுவதும் அறிமுகமாகக் கூடிய நல்வாய்ப்பை இந்தப் பொருட்கள் பெறும் என்று எதிர்பார்க்கலாம். அத்துடன் புலம்பெயர்ந்திருக்கும் எங்களவர்களுக்கு ஏற்றுமதியாகி பெரும் வரவேற்பைப் பெறப்போகின்றது.



இங்கே குறிப்பிட்டவற்றைவிட இன்னும் அதிகமான பொருட்கள் இப்பொழுது புதிதாக சந்தைப்படுத்தப்பட்டு வருகின்றது. எமது உள்ளூர் உற்பத்திகளை சர்வதேச சந்தைத் தரத்திற்கு உயர்த்தி எங்கும் பரவலாக்கும் இந்தப் புதிய முயற்சி ஒரு நல்ல தொடக்கமே.

இன்றைய நவீன வாழ்க்கைச் சூழலில் இயற்கையோடிணைந்த உணவுப் பொருட்களுக்கு எல்லா இடங்களிலுமிருக்கும் வரவேற்பை எல்லா மீடியாக்களும் சொல்லுகின்றன. அண்மையில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திரு. சு. இராசநாயகம் கூறியிருக்கும் விடயங்களையும் கவனத்திற் கொண்டு பார்க்கலாம். இயற்கைப் பசளையின் துணையுடன் விளைச்சலாகும் பொருட்களுக்கு கூடுதல் விலை கொடுத்து வாங்கும் விருப்புவட்டம் வெளியே பரவலாகி வருகிறது. உற்பத்திதான் பாக்கி.

நாங்கள் இப்போது செய்ய வேண்டிய தெல்லாம் நம்பிக்கை தரும் உத்தரவாதத்துடன் எங்களின் பண்டங்களைக் கொண்டு செல்வதுதான் அப்படிக் கொண்டு போகும் போது அதுபெரும் செல்வாக்கும் அறிமுகமும் பெரிதாக இருக்கப் போகிறது.

**வெளிவாசல் பாலன்**

" இப்பொழுது விவசாயம் சார்ந்த பொருட்கள்தான் அநேகமாக இப்படிச் சந்தைக்கு வந்திருக்கின்றன இனிவரும் நாட்களில் கடல் சார்ந்த பொருட்பண்ட வகைகளையும் இப்படிக் கொண்டுவருவது அவசியம்.

எங்களின் பொருளாதார வளங்கள் பெரும்பாலும் கடலும், விவசாயமும் வனமும் தானே. வனவளத்தை புதிய நோக்கில் பராமரிப்பதனாலும் உபயோகிப்பதனாலும் அதையும் லாபவேகத்திலும் சூழல் சமநிலையைப் பேணலிலும் பயன்பெற முடியும். இன்னும் இருக்கும் எல்லா மூலவளங்களையும் பயன்படுத்திச்செய்யப்படும் பலவகையான பொருட்களையும் கூட நாம் உற்பத்தியாக்கவும் சந்தைப்படுத்தவும் வேண்டும். அவற்றில் குறிப்பாக கைவினைப் பொருட்களும் அடங்கியி ருத்தல் அவசியம்.


நினைவுப் பரிசுகளாக, அன்பளிப்புக்களாக, அழகுச் சேர்க்கையாக கொடுப்பதற்கும் வாங்குவதற்கும் சேர்ப்பதற்கும் நமது கைவினைப் பொருட்கள் என்றிருக்கவேண்டுமல்லவா? இப்போது எங்களுக்கு விருந்தினர் களும் அதிகம். வாங்குவோரும் கூடுதல். கொடுக்க வேண்டிய காலமும் கூட.

இப்பொழுது வந்திருக்கும் இந்த உற்பத்திகள் ஒரு மகிழ்ச்சியின் தொடக்கம். இனிவரும் எல்லா உற்பத்திகளும்தான் நமது பொருளாதாரத்தையும் அடையாளத்தையும் மகிழ்ச்சிப் பரப்புக்குக் கொண்டு செல்லும். வீரியமுள்ள சக்கரங்கள்.

வரலாற்றில் சக்கரத்தின் கண்டுபிடிப்பும் சுழற்சியுமே வளர்ச்சியை மனிதனுக்கு வழங்கி வந்திருக்கிறதல்லவா. நமது சக்கரங்களும் சுழலட்டும்.

# வால் வெள்ளியைப் பிடிக்கும் மனித விண்கலம்

**வால்வெள்ளியை** ஒரு விண்கலம் பிடித்து வருகின்றது என்பது ஒரு ஆச்சரியமான விடயம் தான். ஆனால் ஒரு சின்ன மாற்றம். விண்கலம் வால் வெள்ளியை முழுமையாக பிடித்து வரப் போவதில்லை. வால் வெள்ளியின் ஒரு பகுதியைத் தான் பிடித்துவரப் போகின்றது. வால்வெள்ளியின் ஒரு பகுதியை பிடித்து அதனைக் கொண்டு வரும் பணியை மேற்கொள்ள விண்கலம் ஒன்று அண்டவெளியில் அதிவேகத்தில் பயணம் செய்து கொண்டிருக்கிறது. அந்த விண்கலத்தின் பெயர் 'ஸ்ரார் டஸ்ட்' தமிழில் கூறினால் நட்சத்திரத்தூசு எனப் பொருள்படும்.



1999 பெப்ரவரி 7ம் திகதி அமெரிக்காவின் நாயா விண்ணாய்வு மையத்தினால் பூமியிலிருந்து ஸ்ரார் டஸ்ட் விண்கலம் செலுத்தப்பட்டது. இது வைல்ட் - 2 என்ற வால்வெள்ளியை நெருங்கிஅதன் துகள்களை சேகரித்து அவற்றை 2006 ம் ஆண்டு பூமிக்குக் கொண்டு வரும்.

இதன்மூலம் பிறப்பு ரகசியத்தை அறியமுடியும் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

வால்வெள்ளி சூரியத் தொகுதியின் விளிம்பில் உள்ள புளூட்டோ கோளுக்கு அப்பால் 'கியூப்பர் பெல்ட்' என்ற தூசுப்படலம் சூரியனை வலம் வந்து கொண்டிருக்கிறது.


இந்த தூசுப்படலம் தமக்குள் ஈர்க்கப்பட்டு கோளத்திரட்சிகளாகின்றன. இந்த கோளத்திரட்சிக்குள் உறைநிலைப் பனிக்கட்டிகள் மற்றும் தூசுகள் இருக்கின்றன. திரட்சியடைந்து நிறையேறிய தூசுக் கோளம் சூரியனால் ஈர்க்கப்படுகின்றது.

சூரியனால் ஈர்க்கப்படுகின்ற தூசுக்கோளம் சூரியனை நீள்வட்டத்தில் வலம் வருகின்றது. அவ்வேளை சூரியனை தூசுக் கோளம் அணமிக்கின்றது. அப்போது சூரியனின் வெப்பத்தால் அந்த கோளத்திலிருந்து பனித்துகள்கள், தூசிகள் ஆவியாகின்றன. சூரியனி லிருந்து வீசப்படும் காந்தப்புயல் இந்த ஆவியை பின்னோக்கி தள்ளுகின்றது. இதனால் இந்த ஆவி ஒரு வால் போல நீள்கிறது. இந்த நீட்டப்பட்ட வால் சூரிய ஒளியில் பிரகாசிக்கிறது. இதுதான் வால் வெள்ளி. பலநூற்றுக்கணக்கான வால்வெள்ளிகள் சூரியனை அண்மிச் சென்றதால் . அதிகளவு தூசுகள் ஆவியான நிலையில் வால்வெள்ளிகளில் பாறைத் துகள்களே நெஞ்செரிகின்றன. 1994 ல் சூமேகர் லெவி - 9 என்ற வால் வெள்ளியின் பாறைகள் வியாழனின் ஈர்ப்பு விசைக்குட்பட்டு அதனில் மோதின.

வால்வெள்ளியின் தூசுகளை ஆராய்வதன் மூலம் சூரியத் தொகுதியின் ஆதியை அறியலாம். இதற்காக விஞ்ஞானிகள் வால்வெள்ளிகளை அதிகளவில் ஆராய்கின்றன.

76 ஆண்டுகளுக்கு ஒருதடவை சூரியனை அண்மிச் செல்லும் ஹேலி என்ற வால்வெள்ளியை 5 விண்கலங்கள் நெருங்கிச் சென்று ஆராய்ந்தன.

ரஸ்யாவின் வேகா 1, வேகா 2, விண்கலங்களும் ஐரோப்பிய விண்ணாய்வு மையமான ஈயாவின் கியோட்டா விண்கலமும், ஜப்பானிய விண்ணாய்வு மையத்தின் - சுய்ஸி, ஸகிகேே ஆகிய விண்கலங்களும் ஹேலி வால்வெள்ளியை நெருங்கி ஆராய்ந்தன.




அதற்கு மேலாக வால் வெள்ளி ஒன்றை நெருங்கி அதன் வாலுக்குள் நுழைந்து அங்குள்ள தூசிகளைப் பிடித்துக் கொண்டு பூமிக்கு வரும் பணியையே தற்போது அண்ட வெளியில் பயணம் செய்யும் 'ஸ்ரார் டஸ்ட்' செய்யப்போகிறது.

வைல்ட் 2 என்ற வால்வெள்ளியை நோக்கி 'ஸ்ரார் டஸ்ட்' சென்று கொண்டிருக்கின்றது. 2004 ம் ஆண்டு அது வைல்ட் 2 வால்வெள்ளியை நெருங்கி அதன் வால். தூசிக்குள் நுழையும். நுழையும் விண்கலம் தான் கொண்டு செல்லும் 'ஏரோஜெல்' திய் மம் டூலம் வால் வெள்ளியின் வாயுக்களையும், தூசிகளையும் உள்வாங்கும்.இவற்றை உள்வாங்கி பத்திரப் படுத்திய பின் அந்த விண்கலம் வாலிலிருந்து வெளியே வந்து பூமியை நோக்கி பயணிக்கும் 2006ம் ஆண்டு அது பூமியை வந்தடையும். இது இப்படியிருக்க 'ஸ்ரார் டஸ்ட்' விண்கலம் தற்போது 'அன்னிபிராங்' என்ற விண்கல்லை நெருங்கி பயணம் செய்து கொண்டிருக்கின்றது.

செவ்வாய்க்கும் வியாழனுக்கும் இடையே ஒரு தொகுதியாக சூரியனை வலம் வந்து கொண்டிருக்கும் பாறைகளாக இருப்பன 'அஸ்ரொயிட்' என்ற விண்கற்கள். அத்தகைய விண்கற்களில் ஒன்றான 'அன்னிபிராங்யையே' ஸ்ராடஸ்ட் விண்கலம் நெருங்கி பயணித்துக் கொண்டிருக்கிறது.

நவம்பர் கல் தனது பயணத்தில் 1363 ம் நாளன்று அன்னிபிராங் ஸ்ரார்டஸ்ட மிகவும் கிட்டவாக நெருங்கியது. அன்னிபிராங் விண்கல் 4 கிலோமீற்றர் நீளமான ஒரு பாறையை - அதாவது பறக்கும் பாறை கடந்த ஆண்டு அமெரிக்காவின் 'நாயா'என்ற விண்கலம் ஈரோஸ் என்ற விண்கல்லில் தரையிறங்கிய சாதனையையும் இங்கு குறிப்பிட வேண்டும்.



இந்த வகையில் வானவெளியில் பறக்கும் மனித சிந்தனையான ஸ்ரார்டஸ்ட் பூமியின் உருவாக்கம் தொடர்பாகவும் புதிய தகவலைத் தரும்.

**அறிவன்**

சிறந்தவை எல்லாம் நல்லவை அல்ல; ஆனால் நல்லவை எல்லாம் சிறந்தவை. -டெமாஸ்தெனஸ்

# 2002 மாவீரர் நாள் உணர்த்தும் செய்திகள்



2002ஆம் ஆண்டின் மாவீரர் தின நிகழ்வுகள் இம்முறை சிறப்பாக நடைபெற்றன.

சகல மாவட்டங்களையும் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோரும் தமது பிள்ளைகளின் கல்லறைகள், நினைவுக்கல் நாட்டப்பட்ட இடங்களுக்கு முதன் முறையாகச் செல்ல முடிந்தது. இவ்வளவு காலமும் இராணுவக் கட்டுபபாட்டுப் பகுதிக்குள் வீடுகளைக் கொண்ட மாவீரர்களின் முகவரி முழுமையாக அறிவிக்கப்படுவதில்லை. முழுப்பெயருடன் இன்ன மாவட்டம் என்று தான் அறிவிப்பு வெளியாகும். மாவீரரின் பெற்றோரின் பாது காப்பைக் கருதியே இந்த ஏற்பாடு.

மட்டக்களப்பு- ஆரையம்பதியைச்சேர்ந்த ஒரு போராளி மாவீரனார், அவரது வித்துடல் விசுவமடு துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது. இந்தத் தகவல் அந்தக் குடும்பத்தினருக்கு சில காலம் செல்லவே கிட்டியது, அங்கிருந்து வந்த அம் மாவீரகளின் அண்ணா சொன்னார்"நாங்க வாயிக்க துவாய அடைச்சுத்தான் அழுதம்.''

தமக்கு ஏற்பட்ட இழப்பு- சோகத்தை வாய்விட்டு அழக் கூட முடியாத ஒரு அவல வாழ்வு அவர்களுக்கு இருந்தது. இதை விடக் கொடுமை வேறென்ன வேண்டும்? வாய் விட்டு அழுதால் எஸ்.ரி.எவ். வரும், குடும்பத்தில் ஏனைய பிள்ளைகளுக்கும் தொடர்ச்சியாகதொந்தரவு- கொடுமைகள் இழைக்கப்படும் என்ற நிலையில் இவர்கள் இருந்தார்கள், இவ்வருடம் தமது மன அழுத்தத்தை தமது பிள்ளைகளின் கல்லறையில் அழுது தீர்த்து, மலர் வணக்கம் செலுத்தி, அவர்கள் விரும்பிய ''சொட்டைத்தீன்கள்'', சோடாக்கள் படைத்து, சுடரேற்றி குறைத்துக் கொண்டார்கள். தமது அழுகைக் கிடையே தமது பிள்ளைகள் சம்பந்தப் பட்ட பழைய சம்பவங்களை நினைவு கூர்ந்து கொண்டிருந்தார்கள். இந்தக் கல்லறைக்கு வர முடியாத தமது அவல வாழ்வை விபரித்துக் கொண்டிருந்தார்கள். அந்தக் கல்லறைத் தெய்வங்கள் இவர்களின் கண்ணீரபிஷேகத்தையும், தாலாட்டையும், ஒப்பாரியையும் ஏற்றுக் கொண்டு மௌனமாக சயனித்தார்கள்.

''எங்கே எங்கே ஒருதரம் விழிகளைஇங்கே திறவுங்கள்

ஒரு தரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்.''

என்ற வரிகளுக்கு கண்ணீர் விடாதஜீவன்கள் எதனையுமே காணமுடியவில்லை.

அன்றைய தினம் சகல பேருந்து, சிற்றூர்தி பயணங்களும் ஒவ்வொரு துயிலுமில்லங்களை நோக் கியதாக வேயிருந்தன. பல மாவட்டப் பெற்றோரும் தமது பிள்ளைகளுடன் ஓரே சம்பவத்தில் வீரச் சாவெய்திய மாவீரர்களின் பெற்றோருடன் அறிமுகத்தை ஏற்படுத்திக் கொண்டனர். ஒருவரின் சோகத்தை மற்றவர் ஆற்றிக் கொண்டனர்.

வன்னிவிளாங்குளம் துயிலும் இல்லத்தில் பிரதான சுடரை ஏற்ற வந்த குட்டிசிறி மோட்டார் படையணியின் சிறப்புத் தளபதி கேணல் பானு உறவினர் யாருமே வந்திருக்காத மற்றும் இனங் காணப்பட முடியாத நிலையில் " தியாக சீலம்" எனப் பெயரிடப்பட்டு கரப்புத் குத்தித் தாக்குதல் எனக் குறிப்பிடப்பட்டிருந்த கல்லறைகளுக்கு மலர்வணக்கம் செலுத்தினார். ''உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம், நீங்கள் தனித்தவர்களல்ல: உங்களை என்றும் மறவோம்'' என்று கூறுவது போல் இருந்தது அந் நிகழ்வு

✦ ✦

படையினரைப் பொறுத்தவரை மக்கள் எழுச்சியை மூன்றாவது தடவையாகப் பார்த்தார்கள்.

முதலாவது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் புலிகள் உத்தியோக பூர்வமாக பிரசன்னம் செய்த அன்று நடை பெற்ற நிகழ்வுகள். தமது தடை களையும் உடைத்து ஓட்டமும் நடையுமாக முன்னணிக் காவலரண்வரை மக்கள் வெள்ளம் வந்தமை. யாழ். மாவட்ட இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் விஜயசேகர புலிகளின் தளபதிகள் கேணல் பானு,கேணல் தீபன் ஆகியோரிடம் வந்து முப்பதினாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் அங்கு கூடி இருப்பதாகவும் அதனால் விரைவாக வந்து சேருமாறும் வேண்டிக் கொண்டார். தங்களால் கட்டுப்படுத்தப்பட முடியாத நிலைமையை சுருக்கமாக விளக்கினார். இது போலவே மன்னாரில் புலிகளின் வருகை தாமதம் ஆனதும் ராணுவத்தினரை தள்ளி விழுத்திக் கொண்டு ஓடி வந்து புலிகளை தமது தோளின் மீது தூக்கி ஆனந்தத்துடன் தமது பகுதிக்குள் கொண்டு சென்றார்கள்.

இரண்டாவது சகல தமிழ் மாவட்டங்களிலும் நிகழ்ந்த பொங்கு தமிழ் நிகழ்வு. அலை அலையென திரண்டு இருந்த மக்கள் ஊர்வலமாகச் சென்று தமக்குள்ளது ஒரு தலைமையே அது மேதகு வே. பிரபாகரனே என தெரியப்படுத்தியது

மூன்றாவது இவ்வருட மாவீரர் தின நிகழ்வு. இராணுவப் பகுதிக்குள் புகைப்படக் கண்காட்சி,ஒரே நேரத்தில் சகல ஆலயங்களிலும் மணி ஒலித்தமை, வளைவுகள், அலங்காரங்கள், மக்கள் உணர்வெழுச்சிகள் என்பனவற்றை பார்த்த படையினர் இவ்வளவு கொதி நிலையில் தான் இந்த உணர்வுகள் இவ்வளவு காலமும் இருந்துள்ளது; மூடியைத் திறந்ததும் பொங்கி வழியும் நிலையில் இருந்தது போன்று தான் புலிகள் பற்றிய நினைவுகளையும் மதிப்பையும் மக்கள் வைத்துள்ளனர் என தெளிவாக உணர முடிந்தது.

**இராணுவ கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் நிகழ்ந்த புலிகளின் பிரவேசம், பொங்கு தமிழ் நிகழ்வு என்பவற்றின் வரிசையில் சிங்களச் சிப்பாய்கள் கண்ட தமிழரின் எழுச்சி தான் இவ்வருட மாவீரர் நாள் நிகழ்வுகள்.**

இம் மூன்ற விடயங்களும் தமக்கு சொந்தமில்லாத இந்த மண்ணில் தாம் நின்று கொண்டிருப்பதை உணர வைத்திருக்கும் அத்துடன் தமது சாவு எத்தகையது, போராளிகள் சாவு எத்தகையது என்ற வித்தியாசத்தை உணர்த்திய வண்ணம் இருக்கும்

தமது சாவுக்குரிய பெறுமதியும்தமது சமூகம் தமது தேசம் எவ்வளவு தூரம் அதை அங்கீகரிக்கின்றது என்ற கேள்வியும் ஒவ்வொரு சிப்பாய்கள் மனதிலும் எழுந்திருக்கும். தமது "ஜெனரலின்"வங்கிப் பெட்டகங்கள் பற்றி செய்தி, ஆயுதக் கப்பல் மற்றும் வானூர்திக் கொள்வனவு விவகாரங்களில் உள்ள ஊழல்கள், இதைவிட மரணமான படையினரில் பெயரால் நடைபெற்ற நிதி மோசடி போன்ற செய்திகளையே கேட்டுக் கொண்டிருந்த சிப்பாய்கள் இப்போதுதான் தமது நிலையை புரிந்து கொள்வார்கள்.

தமதுதேசம் ''கொப்பே கடுவ'' போன்றோருக்கு மட்டுமே சிலையெழு ப்பும், முல்லைத்தீவுச் சமரில் உயிரிழந்த சகாக்களின் சடலங்களை தமது தலைமை ஏற்க மறுத்ததும், முறிகண்டிக் காட்டில் அவை எரியூட்டப் பட்டதும், அங்கு எரியூட்டப் பட்டோர் இன்னமும் காணாமற்போனோர் பட்டியலில் இருப்பதும் நினைவுக்கு வந்திருக்கும், கிளிநொச்சிக் கான சமரிலும் பெயருக்கு மட்டுமே சில சடலங்களை பொறுப்பேற்க ஏனையவற்றை புலிகளே தகனம் செய்த நிலையும் ஞாபகம் வந்திருக்கும். மலினப்படுத்தப்பட்ட தமது மரணங்களுக்கும் புலிகள் மரணங்களுக்கும் உள்ள வித்தியாசம் நிச்சயம் புரிந்திருக்கும்.

இன்று முறிகண்டிக்கு

**சங்கர்**

முன்னர் சில வாகனங்கள் நின்று செல்கின்றன. அநாதையாக தமது பிள்ளைகள் எரிக்கப்பட்ட இடம் இது தான் என மற்றவர் மூலமாக அறிந்தவர்கள் அதில் இன்று அழுது செல்வதற்காக தெரிய வருகிறது.

இந்தச் சூழ்நிலையின் யதார்த்தம் சிங்களச் சிப்பாய்களுக்கும் அவர்களின் பெற்றோருக்கும் நிச்சயம் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும். திருமலை, வவுனியா போன்ற இடங்களில் சிங்கள மக்கள் மாவீரர் தினத்தின் வடிவத்தை, உணர்வை உணர்ந்துள்ளனர். யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்தோரும்ஆங்காங்கே மாவீரர் மண்டபங்களில் தரித்து நின்று அவர்கள் மேன்மைப் படுத்தப்பட்டிருக்கும் விதத்தை கண்டே சென்றுள்ளனர்.

இவற்றின் எதிரொலி- தாக்கம் இன்னும் என்னென்ன விளைவுகளைத் தரப் போகின்றது என்பதை காலம் உணர்த்தும். ✪


# இலங்கை உரக்கூட்டுத்தாபனத்தின் "லக்பொஹொர"
## வடபகுதி களஞ்சியத்தினர் விடுக்கும் நற்செய்தி




விநியோகத்தர்: வே. கணேசமூர்த்தி
353, கண்டிவீதி, கிளிநொச்சி.

வடபகுதி விவசாயிகள், அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தர்கள், விவசாய சேவை நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள் தொகை, சில்லறை வியாபாரிகள் அனைவரும் விவசாயத் திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்ட தரமான உரம், விவசாய இரசாயனம் விவசாய உபகரணங்கள் என்பவற்றை நியாயவிலையில் பெற்றுக்கொள்ள

**வேலும் மயிலும் களஞ்சியம்**

353,முதன்மைச்சாலை. கிளிநொச்சி.

(ஈழநாதம் பணிமனை முன்பாக)

(சி-7531)

## நேர்நோக்கு

# அதிகரித்துச் செல்லும் கவலைகள்

தற்போதைய சமாதான முயற்சிகள் பொதுசன ஐக்கிய முன்னணிக்கும், அதன் தலைவியும் சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியுமாகிய சந்திரிகா குமாரதுங்கவுக்கும் மிகப்பெரிய கவலைகளையும் சஞ்சலங்களையும் ஏற்படுத்தியுள்ளன.

இந்த நிலையில் சமாதான முயற்சிகளால் இந்தியாவுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் குறித்து எச்சரிக்க அவர் குழுவொன்றை புதுடில்லிக்கு அனுப்பி வைத்திருக்கிறார். அதாவது சமாதான முயற்சிகள் குறித்து கட்சியினதும் சனாதிபதியினதும் கருத்துக்களை - அபிப்பிராயங்களைத் தெரிவிக்கவும் ஐக்கியதேசிய முன்னிணியின் தற்போதைய நடவடிக்கைகள் குறித்து முறையிடவும் அனுரா பண்டாரநாயக்க தலைமையிலான குழுவொன்றை சந்திரிகா குமாரதுங்க இந்தியாவுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

இந்தக் குழுவுக்கு தலைமை தாங்கிச் சென்ற அனுரா பண்டாரநாயக்க இங்கு புலிகளுடன் காணப்படும் உடன்பாடு இந்தியாவைப் பாதிக்கப்போகிறது என்று கூறுவதுடன் அது குறித்து இந்தியாவை எச்சரிக்கும் முயற்சியிலும் இறங்கியிருக்கிறார்.

“ இலங்கையில் எத்தகைய தீர்வுக்கு வந்தாலும் அதில் இந்தியாவுக்கு முக்கிய பங்கு இருக்கிறது. அதை நாம் எப்பொழுதோ உணர்ந்து விட்டோம்” என்றும் அவர் கூறியிருக்கிறார். ஆனால் அவர்கள் எப்போது உணர்ந்தார்கள் என்பது குறித்துக் குறிப்பிட்டுக்கூறவில்லை.

ஏனெனில் 1987 இல் இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவென்றும் இந்தியாவின் பிராந்திய நலனை முன்னிறுத்தியும் மேற்கொள்ளப்பட்ட ராஜீவ் - ஜே.ஆர் ஒப்பந்தத்தை எதிர்த்தவர்கள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர். அந்த ஒப்பந்தம் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக அமையாது என தமிழர் தரப்பு திட்டவட்டமாகக் கூறினும் அந்த ஒப்பந்த அமுலாக்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்க இணங்கியது. பின்னர் நடந்தவை புலிகள் - இந்திய யுத்தத்திற்கு வழிவகுத்த போதிலும் இந்தியா தனது பிராந்திய நலனை பேணிக்கொள்வதற்காகச் செய்யப்பட்ட அந்த ஒப்பந்தத்தை ஆரம்ப முதலே எதிர்த்தவர்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரே.

அன்று இந்தியா, இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் ஒரு தரப்பாக இருந்து கொண்டு செயற்பட்டபோது அந்த முயற்சிகளுக்கு ஆதரவு வழங்காது முற்று முழுதாக எதிர்த்தவர்கள் இன்று இந்தியாவுக்காக வடிப்பது முதலைக்கண்ணீர் தான் வெளிப்படை.

ஆனால் பொதுசன ஐக்கிய முன்னணியினரும் சந்திரிகா குமாரதுங்கவும் மிகப்பெரிய கவலைகளையும் சஞ்சலங்களையும் கொண்டவர்களாக உள்ளனர் என்பது உண்மையே. இவர்களின் கவலைகள் இந்தியாவைப் பற்றியதுமல்ல; சிறிலங்காவைப் பற்றியதும் அல்ல; தம்மைப்பற்றியது தான் என்பதே உண்மையாகும்.

ஐக்கியதேசிய முன்னணி ஆட்சிக்கு அவர்கள் குறிப்பிட்ட காலக்கெடு வைத்திருந்தது போலவே இப்பொழுது மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்கும் இவர்கள் ஒரு வரையறை வைத்திருந்தனர். புலிகள் பொறுமை காத்து பேச்சுக்களில் ஈடுபடமாட்டார்கள்; புலிகளை பொறுமை இழக்கச் செய்து எப்படியாவது மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்குமாறு செய்து விடவேண்டுமென திட்டமிட்டு இனவாதிகள், சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர், ஜே.வி.பியினர் என சமாதானத்திற்கு எதிரான சக்திகள் கூட்டுச் சேர்ந்து மேற்கொண்டு வரும் முயற்சிகளை முறியடித்து புலிகள் சமாதானத் தீர்வில் தமக்குள்ள உறுதிப்பாட்டை வெளிப்படுத்தி வருகின்றனர். சமாதானத்திற்கு எதிரான சக்திகள் வைத்திருந்த காலக் கெடுக்களையெல்லாம் மீறி அவர்கள் எதிர்பாராத வகையில் சமாதான முயற்சிகள் முன்னோக்கிச் செல்கின்றன.

அதனிலும் மேலாக சமாதான முயற்சிகளுக்கு எதிராக தென் பகுதி மக்களைத் தூண்டி விட இச்சக்திகள் எடுத்துவந்த முயற்சிகள் பலனளிக்காமல் போனது இவர்களுக்குப் பெரும் கவலையை அளித்துள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு எதிராகவும், பின்னர் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் உள்ளிட்ட சமாதான முயற்சிகளுக்கு எதிராகவும் பொதுசன ஐக்கிய முன்னணியினரும் ஜே.வி.பியினரும் தனித்தும் கூட்டாகவும் நடத்திய போராட்டங்கள் தோல்வியில் முடிவடைந்தமையும் அவர்களுக்கு பெரும் கவலையை தோற்றுவித்துள்ளது.

அதோடு இச் சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச நாடுகள் வழங்கிவரும் ஆதரவு இவர்களுக்கு மேலும் கவலையை யூட்டியுள்ளது. நோர்வேயின் நடுநிலைமையுடன் ஆரம்பித்த சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்க பல நாடுகள் போட்டி போட்டுக்கொண்டு முன்வருகின்றன. தாய்லாந்தில் ஆரம்பித்து ஒஸ்லோ, யப்பான், தென்னாபிரிக்கா என பேச்சுவார்த்தைக்களம் அமைத்துக்கொடுக்கப் பல நாடுகள் முன் வருகின்றன. இவற்றுக்கும் மேலாக ஒஸ்லோவில் நடைபெற்ற நிதியுதவி குறித்த மாநாட்டில் உலகின் முக்கிய நாடுகளெல்லாம் ஆர்வத்துடன் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றன.

இவற்றைக் கண்டு பொறுக்க முடியாத நிலையிலேயே இந்தியாவுக்கு தமது கவலையை தெரிவிக்க சனாதிபதி சந்திரிகா தனது தம்பியாரின் தலைமையில் தூதொன்றை அனுப்பியிருக்கிறார்.

மக்கள் இவர்களின் சுயநலத்தையும் யுத்தத்தில் இவர்கள் கொண்ட நாட்டத்தையும் யுத்தத்தால் சம்பாதித்தவற்றையும் புரிந்துகொண்டு விட்டதால் அவர்களிடம் முறையிடமுடியாது. உலக நாடுகள் சமாதான முயற்சிகளின் ஆதரவாளர்கள் ஆகிவிட்ட நிலையில் அவைகளிடமும் முறையிட முடியாது. எனவே விலகி நிற்கும் இந்தியாவிடம் முறையிடத் தீர்மானித்துள்ளார்கள்.

எவ்வாறாயினும் இலங்கை மக்கள் சமாதானத்திற்கு ஆதரவாக உள்ள சூழ்நிலையில் சனாதிபதி சந்திரிகாவின் கவலைகள் சஞ்சலங்கள் நீடிக்கமட்டுமல்ல அதிகரிக்கும் போக்கிலேயே இருக்கும்.

**வேலவன்**

---

2ம் பக்கத் தொடர்ச்சி...

குருநாகலில் நடந்த கூட்டமொன்றில் கூறியவார்த்தைகளை சமர்ப்பணம் செய்யலாம் அது அவருக்கான தெளிவான விளக்கத்தை வழங்கக்கூடும்.

‘தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய நிலைக்கு காரணம் அரசபயங்கரவாதம் தான்’ என சந்திரிகா கூறியதன் அர்த்தத்தை சரியாகப் புரிந்து கொள்ள ஆர்மிரேஜ் அவர்கள் முயல்வாரேயானால் இப்படியெல்லாம் அபத்தமான ஆதிக்க உணர்வுடன் கூறிய கருத்துக்களை எதிர்காலத்தில் கூறமாட்டார்

இன்று உலகங்களுக்கு அரச பயங்கரவாதத்தின் பல்வேறு வடிவங்களிலான அராஜகங்களே. பயங்கரவாத மென்று அமெரிக்கா போன்ற நாடுகளில் வர்ணிக்கப்படும் பிரச்சினைகளுக்கு முழு முதற் காரணமாக அமைந்துள்ளது என்பதை புரிந்து கொள்வதற்கு. அந்த நாடுகள் · பின்னப்பட்டிருக்கின்றன என்பது தான் வருத்தத்திற்குரிய விடயமாகும்.

அரச பயங்கரவாதிகளை அமெரிக்கா போன்ற ஆதிக்க சக்தி கொண்ட நாடுகள் பகிரங்கமாகக் கண்டிக்க- பக்கச்சார்பற்ற முறையில் நடுநிலைநோக்குடன் சர்வதேசமாதானப் பார்வையுடன். எல்லாவற்றிலும் மேலாக ஆத்மசுத்தியுடன் முன்வராதவரைக்கும், சர்வதேச பயங்கரவாதம் என்று அவர்களாலேயே வரைவிலக்கணம் வகுக்கும் செயற்பாடுகளுக்கு அவர்களே தூண்டுகோலாக இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

சிறிலங்கா சனாதிபதியால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் ‘அரச பயங்கரவாதம்’ என்ற செயற்பாட்டை ஆர்மிரேஜ் பகிரங்கமாகவே கண்டித்து அதனை சிறிலங்காவில் முற்றாக நிறுத்த நடவடிக்கைகளை எடுப்பாரேயானால் அவரின் நேர்மையை மதிக்க முடியும். அதை விடுத்து அவரின் தலைவியே ஒப்புக்கொண்டுள்ள அரச பயங்கரவாதத்தை முன்னின்று நடத்தும் அரசஇராணுவ இயந்திரத்திற்கு பயிற்சிகளும் ஆலோசனைகளும். ஆயுத உதவிகளையும் வழங்கிக்கொண்டு. பாதிக்கப்படுவோர் தமது உயிர். உடமை உரிமைகளைக் காக்க ஆயுதம் ஏந்திப்போராடினால் அதற்குப் பயங்கரவாதம் என முத்திரை குத்த முனைவதில் எந்த விதமான அர்த்தமும் இருக்கப்போவதில்லை.

இன்று சிறிலங்காவில் சமாதான முயற்சிகளை குழப்பும் சக்திகள் சிறிலங்காவின் இரட்டை ஆட்சியில் ஒரு ஆட்சிக்கு தலைமைவகிக்கும் நிறைவேற்று அதிகாரபலம்கொண்ட சனாதிபதியின் தலைமையில்தான் அணி திரண்டுள்ளார்கள் என்பது ஒன்றும் ரகசியமானவிடயமல்ல. சமாதான நடவடிக்கைகளை உலகமே அங்கீகரித்து பாராட்ட (அமெரிக்கா உட்பட) அதனை குழப்ப முயல்வது என்பது சிறிலங்காவின் அரச பயங்கரவாதத்தின் ஒரு வடிவம் தான் என்பதையும் ஆர்மிரேஜ் அவர்கள் உணர வேண்டும்.

இன்று சிறிலங்காவின் பிரச்சினை இந்த அளவுக்கு மோசமானதற்கு சிங்கள இனவாதத்தையும். பௌத்த மத மேலாதிக்கத்தையும் உள்ளடக்கிய- அதற்கு ஆதரவான. சிறுபான்மையோர் மீது அடக்கு முறையை கட்டவிழ்த்து விட்ட அரச பயங்கரவாதம் தான் காரணம் என்பதை அமெரிக்கா ஏன் ஒப்புக்கொள்ள மறுக்கிறது. அந்த அரச பயங்கரவாதத்தை தட்டிக் கொடுத்து அதற்கு ஆயுத- ராணுவ உதவிகளையும் பயிற்சிகளையும் ஏன் வழங்கியது என்பதற்கான நியாய பூர்வ காரணம் எதனையும் கூறமுடியுமா?

சனாதிபதியே ‘அரசபயங்கரவாதம்’ தான் அனைத்துப் பிரச்சினைக்கும் காரணம் என ஒப்புதல் வாக்கு மூலம் அளித்துள்ள வேளையில் அமெரிக்க பிரதி அமைச்சரும். அடிக்கடி பயங்கரவாதம் பற்றியும் விடுதலைப்புலிகள் அமைப்புக்குறித்தும் உண்மைகளை ஆராய்ந்து பார்க்காது கருத்துக் கூறும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஆஸ்லிவில்ஸ் அவர்களும் இதற்கு என்ன கூறப்போகிறார்கள்.

ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களைத் தட்டிக் கொடுங்கள், அவர்களுக்கு ஆதரவளியுங்கள் எவருமே தடுக்கப்போவதில்லை, ஆனால் அதே ஆட்சி அதிகாரத்தில் அகங்காரத்துடன் இருப்பவர்கள், சிறுபான்மை மக்களின் உரிமைகளை நிராகரித்து அவர்களை ‘குட்டி’ அடக்கும் ‘குப்பாடி’ த்தனங்களுக்கு அங்கீகாரமும் ஆதரவும் அளிக்காதீர்கள் அப்படிச் செய்வது புரட்சிகள். கிளர்ச்சிகள். பயங்கரவாதச் செயல்கள் என நீங்கள் அடிக்கடி உபயோகிக் கும் வார்த்தைகளுக்கு நீங்கள் தான் ‘விதை’ யூன்றுகிறீர்கள் என்ற நிராகரிக்க முடியாத கருத்துக்கு உங்களைப் பொறுப்பேற்க வைத்துவிடும்.

இது அமெரிக்காவுக்கு மட்டுமல்ல அரச பயங்கரவாதச் செயல்களுக்கு ஆதரவும் மௌன அங்கீகாரமும் வழங்கும் சில நாடுகளுக்கும் பொருத்தமானதாகும்.

✦✦


## பணிநிலை வெற்றிடங்கள்

நிதித்துறை ஆயப்பகுதியில் பின்வரும் பணிநிலைகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுதியானவர்களிடம் இருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**01) ஆய அலுவலர்:**

கல்வித்தகைமை:

க.பொ.த(உ/த) இல் வர்த்தகப்பிரிவில் அல்லது கணிதப்பிரிவில் தேறியிருத்தல் வேண்டும்.

க.பொ.த (சா/த) இல் தமிழ், கணிதம் ஆகியவற்றில் திறமைத் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்.

சம்பள அளவுத்திட்டம்: $\frac{2500-3100}{10x60} +2000 = 4500$

**02) ஆய உதவியாளர்:**

கல்வித்தகைமை:

க.பொ.த(சா/த) இல் கணிதம், தமிழ் ஆகியவற்றில் திறமைச்சித்தியுடன் 06 பாடங்களில் தேர்ச்சி அடைந்திருத்தல் வேண்டும்.

வேண்டுகை முடிவு நாள்: 12-12-2002.

வேண்டுகை அனுப்ப வேண்டிய முகவரி:
மனிதவளப்பிரிவு,
ஆயப்பகுதி,
நடுவப்பணியகம்,கிளிநொச்சி.

மேற்குறிப்பிட்ட பணி நிலைகளுக்கு வேண்டுகைகளை அனுப்பியவர்களுக்கான

**நேர்முகத்தேர்வு**

16.12.2002 காலை 10 மணி தொடக்கம் 1மணி வரை பளை ஆயப்பகுதி கண்காணிப்பு நிலையத்தில் நடைபெறும்.

குறிப்பு:
நேர்முகத்தேர்வின் போது அனைத்து கல்வித் தகைமைச் சான்றுடனும் சமுகம் தரவும்.

பணியாளர்களுக்கான தங்குமிடம் உட்பட குறைந்த கட்டணத்தில் உணவு வசதி செய்து தரப்படும்.

மனிதவளப்பிரிவு,
ஆயப்பகுதி,
தமிழீழ விடுதலைப்புலிகள்.

(2656)



## உடனடி வெற்றிடங்கள்

**ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியுடன் A-9 நெடுஞ்சாலையின் அவசர புனரமைப்புத்திட்டம்**

ஓமந்தையில் இருந்து மிருசுவில் வரை A-9 நெடுஞ்சாலையின் அவசர புனரமைப்பு வேலைகளை மேற்பார்வை செய்யும் ஆலோசனை நிறுவனத்தினால் கீழ்காணும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தெரிவு செய்யப்படுவோர் கிளிநொச்சியிலும் மாங்குளத்திலும் நிறுவப்பட்டுள்ள காரியாலயங்களில் வேலைக்கு அமர்த்தப்படுவர்.

- ★ காரியதரிசிகள்
- ★ நிர்வாகிகள்/இலிகிதர்கள்
- ★ படவரைஞர்கள்
- ★ கணனி இயக்குநர்கள்
- ★ பரிசோதனைக்கூட உதவியாளர்கள்
- ★ நில அளவை உத்தியோகத்தர்கள்
- ★ காரியாலய உதவுநர்கள்
- ★ காவலர்கள்

மேற்காணும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தங்களின் சுய விபரங்களையும் தகைமைச் சான்றிதழ்களையும் கீழ் காணும் முவரிக்கு அனுப்பி வைக்கமாறு வேண்டப்படுகின்றனர்.

குழுத்தலைவர்
ஸ்நோவே மவுண்டன் இன்சினியரிங் கொன்சல்ற்றன்ட் லிமிடட்
இல.97 மன்னார் வீதி,
வவுனியா.

தொலைபேசி : 024-22471
தொலைநகல் : 024-22826
ஈமைல் : rdanorth@sltnet.lk

(2657)


செல்வத்துக்குச் சிறகுகள் உண்டு; மாட்சிமை, வெறும் சொப்பனமே. -வில்லியம் கூப்பர்

# படமும் தகவலும்



நேட்டோவின் செயலாளர் ஜெனரல் ஜியோச் றொபேட்சனும் சியேச்சின் முதற் பெண்மணி டக்மார் காவ்ளோவாவும் தாங்கி நிற்கும் வட அத்திலாந்திக் ஒப்பந்தத்திலுடைய தோலிலாலான பிரதி சியேச்சினுடைய ஜனாதிபதி காவெல் அவர்களுக்கு உலக அரசியலில் அவரின் பங்காற்றுகைக்காக வழங்கப்பட்டது.



பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் உள்ளதா என்று ஆராய்வதற்காக ஈராக் சென்றிருக்கும் ஐ. நா ஆயுத பரிசோதனைக் குழு திடீர் சோதனை ஒன்றை நடத்துவதற்காக ஈராக்கின் வீதி ஒன்றில் செல்லும் காட்சி. இந்தப் பரிசோதனைகளின் பின்னனியில் அமெரிக்கா இருப்பதாகவும், பரிசோதகர்கள் மூலமாக உளவு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அது முயல்வதாகவும் ஈராக் குற்றம் சாட்டி வருகிறது.

மகிழ்ச்சியுடன் தங்க மான் குட்டியை பார்த்திருக்கும் மைக்கல் ஜாக்சன். 21 நவம்பரில் ஜேர்மனியின் போனினில் விருது வழங்கும் நிகழ்வொன்றில் ஜேர்மனி ஊடக துறையிடமிருந்து இதனைப் பரிசாக பெற்றார்.





ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சி அகற்றப்பட்டு அமைக்கப்பட்ட புதிய அரசின் முதலாவது பட்டாலியனின் அணிவகுப்புக் காட்சி. இப் படைக்கு ஆப்கான் தேசிய பாதுகாப்புப் படை எனப் பெயரிடப்பட்டுள்ளது. ஆப்கானில் தங்கியுள்ள அமெரிக்கப் படைக்கும் மற்றைய இனக் குழுக்களுக்கிடையிலான மோதல்களில் ஆப்கான் தேசிய பாதுகாப்புப் படையின் செல்வாக்கு எப்படி இருக்கும் என்று இனிவரும் நாட்களில் தான் பார்க்க முடியும்.






தற்பொழுது எமது தென்னைகளில் சாதாரணமாக காணும் காட்சி இதுவாகும். தேங்காய்கள் சிறுத்து தோல்கள் தடித்து காய்ப்பதற்கு காரணமான மைற் சிற்றுண்ணியின் இலத்திரனியல் நுணுக்கு காட்டி ஊடான தோற்றத்தை மற்றைய படம் காட்டி நிற்கின்றது. இதன் விஞ்ஞானப் பெயர் <u>Aceria guerreronis</u> ஆகும். கடுகு சிறிதானாலும் இதன் காரம் அனேகமான தென்னை சொந்தக்காரர்களுக்கு தெரிந்திருக்கும்.


## அந்தியேட்டி அழைப்பிதழ்

அன்னை மடியில்
1935
04
22



ஆண்டவன் திருவடியில்
2002
11
05

### அமரர்
### திருமதி செல்வபாக்கியம் முத்துச்சாமி

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், காங்கேசந்துறையை வதிவிடமாகவும், புதுக்குடியிருப்பை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட அமரர் திருமதி செல்வபாக்கியத்தின் அந்தியேட்டி கிரியைகள் 06. 12. 2002 வெள்ளியன்று அன்னாரின் தற்காலிக வதிவிடத்தில் நடைபெற திருவருள் நாடியுள்ளோம்.

அன்னாரின் ஈமைக் கிரியைகளிலும் வெள்ளியன்று மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைத்து அன்புள்ளங்களையும் பணிவுடன் அழைக்கின்றோம். அன்னாரின் ஈமைக் கிரியைகளில் கலந்து கொண்டு ஆறுதல் வார்த்தைகளைக் கூறியும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், பல வகைகளில் உதவிகளும் செய்த போராளிகளுக்கும், அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்ப சார்பில் எமது அன்புகலந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(2648)

குமரன் களஞ்சியம்,
சிவநகர், 7ம் வட்டாரம்,
முல்லைச்சாலை,
புதுக்குடியிருப்பு.

அன்புக் குடும்ப இணைவர்
சி. முத்துச்சாமி


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2002ம் ஆண்டு டிசம்பர் மாதம் 06ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.